Follow us:

# தமிழன்

THAMILAN

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 531 சுபகிருது வருடம், வைகாசி மாதம் 16ஆம் திகதி திங்கட்கிழமை (30.05.2022) ஹிஜ்ரி - 1443, ஷவ்வால் - 28, 0115886187 - பக்கங்கள் 12

விலை ரூ.50

## பொருளாதார ஸ்திரப்படுத்தல் குழுவை நியமிக்கிறார் ரணில்

02 பக்கம்



## ஒக்டோபர் மாதமளவில் அரிசிக்கு தட்டுப்பாடு!

சிரேஷ்ட பேராசிரியர் புத்தி மாரம்பே எச்சரிக்கை

02 பக்கம்

## அடைக்கலம் தந்து உயிரைக் காப்பாற்றுங்கள்: இந்தியப் பிரதமரிடம் கெஞ்சும் விமலவீர எம்.பி.



யோ.தர்மராஜ்

நாட்டில் பாதுகாப்பு இல்லை எனக் கூறவில்லை. இந்த நாட்டில் பாதுகாப்பில்லை என்பதாலேயே, எனக்கு பாதுகாப்பு வழங்குமாறு பகிரங்கமாக இந்தியாவிடம் கோரினேன். 21ஆவது திருத்தத்திற்கு நான் வாக்களிக்க மாட்டேன். அதன்பின்னர் என்னால் வீட்டில் இருக்க முடியாது. என்னை கொலை செய்துவிடுவார்கள்.

02 பக்கம்

## நாடாளுமன்றத்தை பலப்படுத்தும் வகையில் கட்சித் தலைவர்களைக்கொண்ட தேசிய சபை



### நாட்டு மக்களுக்கு பிரதமர் ரணில் அறிவிப்பு

யோ.தர்மராஜ்

"நாடாளுமன்றத்தை பலப்படுத்தும் வகையில் சபாநாயகர், பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் உள்ளிட்ட பிரதான கட்சிகளின் தலைவர்களை உள்ளடக்கிய தேசிய சபை ஒன்றை உருவாக்குவோம்" என பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

02 பக்கம்

## 9 வயது சிறுமி கொலை தொடர்பில் உறவினர்களிடம் தீவிர விசாரணை

### துப்புத்துலக்கும் பொறுப்பை ஏற்றது சி.ஐ.டி.

பண்டாரகம, அட்டுலுகம பகுதியைச் சேர்ந்த பாத்திமா ஆயிஷா என்ற ஒன்பது வயது சிறுமி படுகொலைசெய்யப்பட்ட சம்பவம் தொடர்பான விசாரணைகள் குற்றப்புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்தக் கொலை தொடர்பில் சிறுமியின் தந்தை உட்பட உறவினர்களிடம் நீண்ட விசாரணை நடத்தப்பட்டு வருவதாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சிறுமி காணாமல்போனமை தொடர்பில் பண்டாரகம பொலிஸாருக்கு மேலதிகமாக,...

02 பக்கம்

# இரண்டாக உடையும் மொட்டுக் கட்சி!

### புதிய அரசியல் கூட்டணி டலஸ் தலைமையில்; 21ஆவது திருத்தத்திற்கு ஆதரவளிப்போர் ஓரணியில்

கடந்த பொதுத் தேர்தலில் அமோக வெற்றியீட்டி, நாடாளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலத்தைக்கொண்டிருந்த ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன இரண்டாக பிளவடையும் சூழ்நிலை உருவாகியுள்ளது. அரசியலமைப்பின் 21ஆவது திருத்தத்திற்கு ஆதரவை வழங்குவதற்கு அக்கட்சியின் பெரும்பான்மை உறுப்பினர்கள் தீர்மானித்துள்ள நிலையில் இந்தப் பிளவு ஏற்படும் சூழ்நிலை உருவாகியுள்ளது.

02 பக்கம்

## இலங்கையில் மருத்துவ நெருக்கடி: உலக சுகாதார ஸ்தாபனம் கவனம்



இலங்கையில் தற்போது நிலவும் மருந்து மற்றும் மருத்துவ உபகரணங்களுக்கான தட்டுப்பாட்டை நிவர்த்திசெய்வதற்கான ஒத்துழைப்புகளை வழங்குவது தொடர்பில் கவனம் செலுத்தியுள்ளதாக உலக சுகாதார ஸ்தாபனத்தின் தலைவர் கலாநிதி டெட்ரோஸ் அதனோம் தெரிவித்துள்ளார்.

ட்விட்டர் பதிவினூடாக அவர் இதனைக் கூறியுள்ளார்.

02 பக்கம்

## 21ஆவது திருத்தத்தை எதிர்ப்போர் ஊருக்கு செல்ல முடியாது போகும்

### ஓமல்பே சோபித தேரர் தெரிவிப்பு

அரசியலமைப்பின் 21ஆவது திருத்தச் சட்டத்திற்கு அங்கீகாரம் வழங்கப்படாவிடின் மக்களிடமிருந்து கடுமையான எதிர்வினைகள் ஏற்படும் என ஓமல்பே சோபித தேரர் தெரிவித்துள்ளார். இதுபோன்ற செயல்களைச் செய்து யாரும் கிராமத்திற்குச் செல்ல முடியுமென்று தான் நம்பவில்லை என்றும் அவர் கூறினார்.

02 பக்கம்

## சீனா வழங்கிய டீசல் சலுகையை ஏற்காத மஹிந்த அமைச்சரவை!

### அதனை மீண்டும் ஆராய பிரதமர் ரணில் பணிப்பு

சீனாவினால் முன்மொழியப்பட்ட அவசரகால டீசல் விநியோகத் திட்டத்தை மீண்டும் செயற்படுத்துவதற்கு சீனாவுடன் கலந்துரையாடுமாறு பிரதமர் ரணில் விக்ரமசிங்க அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

இலங்கையில் எரிபொருள் பற்றாக்குறை ஏற்பட்டதையடுத்து, அவசரகால தேவைக்காக டீசல் வழங்குவதற்கு சீனா வழங்கிய சலுகைத் திட்டத்திற்கு இலங்கை பதிலளிக்கவில்லை என தெரியவந்ததையடுத்து இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

02 பக்கம்



### உஷ்

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் நிமல் லான்சா, ஐக்கிய தேசியக் கட்சியில் இணையவுள்ளதாக செய்திகள் சொல்கின்றன.

ஐக்கிய தேசியக் கட்சியில் உயர்பதவியொன்றை லான்சாவுக்கு வழங்குவது குறித்து ரணில் ஆலோசித்துவரும் அதேசமயம், பொதுஜன பெரமுனவின் மேலும் சில எம்.பிக்களையும் ஐ.தே.க. பக்கம் இழுக்க திட்டம் வைத்துள்ளாராம்.

## வீட்டை தீயிட்டமை ஏன் என்பது தெரியவில்லை!

### சினிமாவுக்கே திரும்பப் போவதாகக்கூறும் கீதா எம்.பி.

தனது வீடுகள் அழிக்கப்பட்ட அதிர்ச்சியிலிருந்து இன்னமும் மீளவில்லையென மூத்த சினிமா நடிகையாக இருந்து அரசியல்வாதியாக மாறிய கீதா குமாரசிங்க தெரிவித்துள்ளார்.

02 பக்கம்

## மத்திய வங்கியின் செயற்பாடுகளை சுயாதீனமாக முன்னெடுக்க அரசாங்கம் முழு ஆதரவை வழங்கும்

நிதி நெருக்கடியை கட்டுப்படுத்த குறுகிய காலத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பாராட்டுக்குரியவை

மத்திய வங்கி ஆளுநரிடம் ஜனாதிபதி தெரிவிப்பு

02 பக்கம்

### கமெண்ட் கந்தர்..



மனிசருக்கு கச்சையே இல்லாமல் போற நிலைம... இதில கச்சதீவு தேவையோ..?

மக்கள் வங்கி ஊடாக வெளிநாட்டிலிருந்து பணம் அனுப்பி வெற்றியாளர் ஆகுங்கள்




இறுதிச் சீட்டிழுப்பின் வெற்றியாளருக்கு
ரூ.10,000,000/-

மாதாந்த வெற்றியாளர்களுக்கு ரூ.1,000,000/- × 11 மாதங்கள்
ரூ.11,000,000/-

வாராந்த வெற்றியாளர்களுக்கு தங்கப் பவுண்

நாளாந்த வெற்றியாளர்களுக்கு ரூ.10,000/-

மேலும் மேலும் பணம் அனுப்பி, வெல்லும் வாய்ப்புக்களை அதிகரித்துக் கொள்ளுங்கள்

செல்லுபடியாகும் காலம் 2022 பெப்ரவரி 01 தொடக்கம் டிசெம்பர் 31 வரை மட்டுமே.

+9477 157 6356

*நிபந்தனைகளுக்கு உட்பட்டது

www.peoplesbank.lk

1961 PEOPLE'S BANK CALL CENTRE

PEOPLE'S BANK

Pride of the Nation

AA- (lka) Fitch Rating, AAA- Brand Finance Rating

People's Bank is a licensed commercial bank supervised by the Central Bank of Sri Lanka.

## நாடாளுமன்றத்தை...

நாட்டின் தற்போதைய நிலைமை குறித்து நாட்டு மக்களுக்கு நேற்று (29) ஆற்றிய விசேட உரையின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் ஆற்றிய உரையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இன்று எமது நாட்டில் உள்ள பிரதான விடயங்கள் பொருளாதாரத்துறைக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்படவில்லை. அரசியல் துறையிலும் இரண்டு முக்கிய பிரச்சினைகள் உள்ளன. மீண்டும் 19ஆவது திருத்தத்தை அமுல்படுத்துவது ஒரு பிரச்சினையாகவுள்ளது. இது தொடர்பாக கட்சித் தலைவர்கள் என்ற அடிப்படையில் 21ஆவது திருத்தத்தை தயாரித்து வருகின்றோம்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை ஒழிப்பது இண்டாவது பிரச்சினையாகும். இதனை ஒழிப்பதற்கான வழிமுறைகள் மற்றும் கால எல்லை தொடர்பாக கட்சித் தலைவர்கள் முடிவெடுக்க வேண்டும். இதேவேளை, நாடாளுமன்றம் தொடர்பாகவும் பிரச்சினையுள்ளது.

20ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம் நாடாளுமன்றம் பலவீனமடைந்துள்ளதாலும் அதிக அதிகாரத்தை நிறைவேற்று அதிகாரம் பெற்றுக்கொண்டமையினாலும் நாடாளுமன்றத்தின் செயற்பாடுகள் ஸ்தம்பிதமடைந்துள்ளன.

பொருளாதார நெருக்கடியை தடுப்பதற்கு நாடாளுமன்றம் உரிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்பதே தற்போதுள்ள பெரும் குற்றச்சாட்டாகும். உத்தேசித்துள்ள 21ஆவது திருத்தத்தினால் நாடாளுமன்றத்திற்கான அதிகாரங்கள் அதிகரிக்கும். எனினும், இதனால் மாத்திரம் எங்களால் திருப்தியடைய முடியாது.

தற்போதுள்ள அமைச்சரவை நடைமுறைக்கு அமைய அனைத்து விடயங்களையும் அமைச்சரவை அமைச்சர்கள் கட்டுப்படுத்தினாலும் நாடாளுமன்றத்தில் ஆளுந்தரப்புக்கு பெரும்பான்மை இருப்பதால் நாடாளுமன்றத்தின் செயற்பாடுகளை புறக்கணிப்பதாகவும் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன.

கடந்த காலத்தில் நடந்தவற்றை நாம் எப்போதும் திரும்பிப் பார்க்க வேண்டியதில்லை. ஆனால், இந்த நாட்டை ஆட்சி செய்வதற்கு நாடாளுமன்றத்தையும் இணைக்கும் முறைமை இருக்க வேண்டும். அதேபோன்று, எங்களிடம் வெளிப்படைத்தன்மையும் இருக்க வேண்டும். அனைத்து கட்சியின் உறுப்பினர்களும் ஒரு குழுவில் இணைந்து கொள்கைத் திட்டங்களின்படி செயல்படுவதற்கான சூழலை நாம் உருவாக்குவோம்.

நாட்டில் தற்போதுள்ள நாடாளுமன்றத்தின் கட்டமைப்பை மாற்றி, நடைமுறையிலுள்ள நாடாளுமன்ற முறை அல்லது வெஸ்ட்மின்ஸ்டர் முறை மற்றும் அரச பேரவை (செனட் சபை) முறை ஆகியவற்றை இணைத்து புதிய திட்டத்தை உருவாக்க வேண்டும். இதன்போது, நாட்டை ஆட்சி செய்வதில் நாடாளுமன்றமும் தலையிட முடியும். நிதி அதிகாரங்களைப் பயன்படுத்தும்போது, நாடாளுமன்றத்திற்கு அந்த அதிகாரங்களை வழங்க வேண்டுமாயின் தற்போதுள்ள சட்டங்களை பலப்படுத்த வேண்டும். அவ்வாறாயின் தற்போதுள்ள நிதிச் சட்டங்களை அவதானித்து, புதிய நிதி விதிமுறைகளை நிறைவேற்ற வேண்டும்.

ஐக்கிய இராச்சியம், நியூசிலாந்து மற்றும் இந்தியா போன்ற நாடுகளை முன்மாதிரியாக எடுத்து, அதனை விட பலம்வாய்ந்த மற்றும் வலுவான சட்டத்தை நாங்கள் முன்மொழிவோம்.

அரசாங்க நிதி தொடர்பாக அரசு நிதிக் குழு, கணக்குக் குழு மற்றும் அரச நம்பிக்கை தொடர்பான குழு என மூன்று குழுக்கள் உள்ளன. இவற்றை பலப்படுத்துவதற்காக சபை முதல்வர் தினேஷ் குணவர்தன பல யோசனைகளை முன்வைத்துள்ளார். மேலதிகமாக நாங்கள் மேலும் சில பரிந்துரைகளை கொண்டுவருகின்றோம்.

நிதி விடயங்கள் தொடர்பாக மேலும் இரு புதிய குழுக்களை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுத்து வருகின்றோம். இந்த நாட்டில் அரசாங்க வருமானம் வீழ்ச்சியடைந்துள்ளது. அடுத்த 10 ஆண்டுகளில் அரசாங்கத்தின் வருவாய் மொத்த தேசிய உற்பத்தியில் 18 - 20 வீதத்தை அடையும். முதல்கட்டமாக 14 வீதமாக அதிகரிக்க வேண்டும். இதற்காக முறைமை மற்றும் முறையான தெரிவுக் குழுவொன்றை நியமிப்போம். அது அரசாங்க வருமானத்தை சேகரிக்கவும் வருமானத்தை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளையும் பரிந்துரைக்கும். இதேவேளை, வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களின் நிதி நிலைமை எமக்கு பாரிய பிரச்சினையாகும். அவை பலவீனமடைந்துள்ளன. அவற்றை பலப்படுத்துவதாயின், அது தொடர்பாக அறிக்கையிடுவதற்கு வேறொரு குழு நியமிக்கப்பட வேண்டும். எனவே, வங்கி மற்றும் நிதி நிறுவனங்கள் தொடர்பான தெரிவுக் குழுவொன்றையும் பரிந்துரைக்கின்றோம்.

இதற்கு மேலதிகமாக, மேற்பார்வை குழுவொன்றையும் நியமிக்க முடியும். இதற்கு முன்னர் இவ்வாறானதொரு குழு நியமிக்கப்படவில்லை. எனவே, 10 மேற்பார்வை குழுக்களை நியமிப்பதற்கு பரிந்துரைக்கின்றோம். அரசாங்கத்திலுள்ளவர்களை இக்குழுக்களுக்கு பகிர்ந்தளிக்க முடியும். கொள்கைகள் தொடர்பாக இக்குழுக்கள் நாடாளுமன்றத்தில் அறிக்கையிடும்.

5 நிதி குழுக்கள் மற்றும் 10 மேற்பார்வை குழுக்களின் தலைவர்கள் நாடாளுமன்றத்தின் பின்வரிசை உறுப்பினர்கள் நியமிக்கப்படுவார்கள். இதற்கு அமைச்சர்கள் நியமிக்கப்படமாட்டார்கள்.

மேலும், தற்போதுள்ள முறைமையை மாற்ற வேண்டும் என இளைஞர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். எனினும், தற்போதுள்ள பிரச்சினையை புரிந்துகொள்ள வேண்டும். எனவே, இந்த 15 குழுக்களுக்கும் இளைய உறுப்பினர்கள் நால்வரை நியமிப்பதற்கு யோசனை முன்வைக்கின்றோம். அவர்களில் ஒருவர் இளைஞர் நாடாளுமன்றம் சார்பாக நியமிக்கப்படுவார். ஏனைய மூவரும் போராட்டக்குழுக்கள் மற்றும் ஏனைய குழுக்களிலிருந்து நியமிக்கப்படுவார்கள். அவர்களை நியமிக்கும் வழிமுறைகளை இளைஞர் அமைப்புகளினால் தீர்மானிக்க முடியும்.

இதேவேளை, நாங்கள் தேசிய சபை ஒன்றை நியமிப்பதற்கு பரிந்துரைக்கின்றோம். சபாநாயகர், பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் உள்ளிட்ட பிரதான கட்சிகளின் தலைவர்களை உள்ளடக்கிய தேசிய சபை ஒன்றை உருவாக்குவோம். தேசிய சபை மிக முக்கியமானது. நாட்டின் தேசியக் கொள்கைகள் குறித்தும் அமைச்சரவையின் முடிவுகள் குறித்தும் தேசிய சபையில் கலந்துரையாட முடியும். அதேபோன்று, நாடாளுமன்றத்தை மறுசீரமைப்பு செய்வது குறித்தும் பேச முடியும்.

அமைச்சரவை, தெரிவுக் குழு தலைவர்களை அழைப்பதற்கும் தேசிய சபைக்கு உரிமையுண்டு. நாங்கள் உருவாக்கியுள்ள புதிய கட்டமைப்புக்கு அமைய ஜனாதிபதி நாடாளுமன்றத்திற்கு பொறுப்புக்கூற வேண்டும். அமைச்சரவையும் பொறுப்புக்கூற வேண்டும். அதேபோன்று, தேசிய சபை மற்றும் 15 குழுக்களும் நாடாளுமன்றத்திற்கு பொறுப்புக்கூற வேண்டும்.

# 16 வயது மாணவன் நீரில் மூழ்கி உயிரிழப்பு!

(மீராவோடை நிருபர்)

நீராடச் சென்ற 16 வயது மாணவன் ஒருவன் நீரில் மூழ்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஓட்டமாவடி - மீராவோடை புளியடித்துறை ஆற்றில் வைத்தே இந்த சம்பவம் நேற்று (29) இடம்பெற்றுள்ளது.

மீராவோடை அல்-ஹிதாயா மகா வித்தியாலயத்தில் க.பொ.த. சாதாரண தரத்தில் கல்வி கற்று வரும் எம்.எச்.அர்ஹம் என்பவர் நண்பர்களோடு சேர்ந்து நீராடும்போதே நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார். மாணவனின் சடலம் பிரேத பரிசோதனைக்காக வாழைச்சேனை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## ஒக்டோபர் மாதமளவில்...

தவிர்க்க முடியாத வகையில் இந்த வருடம் ஒக்டோபர் மாதமளவில் நாட்டில் அரிசிக்கான தட்டுப்பாடு ஏற்படக்கூடும் என்று பேராதனைப் பல்கலைக்கழகத்தின் விவசாய பீடத்தின் சிரேஷ்ட பேராசிரியர் புத்தி மாரம்பே தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"சிறுபோகம் தற்போது பாதியளவு நிறைவடைந்து விட்டது. போதுமான அளவு இரசாயன உரம் இதுவரையில் விவசாயிகளுக்கு வழங்கப்படவில்லை. இந்த முறை 3 இலட்சத்து 15 ஆயிரம் ஹெக்டேயர் நிலப்பரப்பில் சிறுபோகம் இடம்பெறுகின்றது. வழமையாக சுமார் 4 இலட்சம் ஹெக்டேயர் நிலப்பரப்பில் சிறுபோகம் இடம்பெறும். சிறுபோகத்துக்காக 80 ஆயிரம் மெற்றிக் தொன் யூரியா உரம் அவசியமாகின்றது.

எனினும், தற்போது நாட்டில் இரசாயன உரத்துக்கான தட்டுப்பாடு நிலவுவதோடு அதிக விலைக்கு உரம் விற்பனை செய்யப்படுகின்றது. இவ்வாறான பின்னணியில் இந்த முறை சிறுபோக விளைச்சல் 50 சதவீதத்தால் வீழ்ச்சியடையும்" இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

## பொருளாதார...

முன்னாள் திறைசேரி செயலாளர் ஆர்.எச்.எஸ். சமரதுங்க தலைமையில் உயர் அதிகாரம் கொண்ட பொருளாதார ஸ்திரப்படுத்தல் குழுவொன்றை பிரதமர் ரணில் விக்ரமசிங்க அமைக்கவுள்ளார்.

இந்தக் குழு, பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவது குறித்து, பிரதமருக்கு ஆலோசனை வழங்கவுள்ளது.

இந்தக் குழுவில் மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க, திறைசேரி செயலாளர் மகிந்த சிறிவர்தன, சர்வதேச நாணய நிதியத்தின் முன்னாள் திறன் அபிவிருத்திப் பணிப்பாளர் கலாநிதி ஷர்மினி குரே, முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி இந்திரஜித் குமாரசுவாமி மற்றும் சாந்தா டேனியல் ஆகியோர் அடங்குகின்றனர்.

இந்தக் குழுவில் தனியார்த்துறையைச் சேர்ந்த மேலும் மூன்று உறுப்பினர்களும் இணைத்துக் கொள்ளப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. பிரதமர் விக்ரமசிங்க நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சராகவும் பொறுப்புகளை கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இரண்டாக உடையும்...

அரசியலமைப்பில் செய்யப்படவுள்ள 21 ஆவது திருத்தம் ஜனாதிபதியின் அதிகாரத்தை குறைப்பதாகவும் பிரதமரின் அதிகாரங்களை கூட்டுவதாகவும் உள்ளது. அதனால் அந்தத் திருத்தம் நிறைவேற ஆதரவளிக்கக்கூடாதென ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உயர்மட்டத் தலைவர் ஒருவர் கட்சிக்குள் பிரசாரங்களை முன்னெடுத்து வருவதாக அறியமுடிகின்றது.

இந்தத் திருத்தம் நிறைவேறினால் பெசில் ராஜபக்ஷவின் எம்.பி. பதவியும் பறிபோகும் என்பதால் இதனை எதிர்க்கவென எம்.பிக்களை அணிதிரட்டும் ஏற்பாடுகள் இடம்பெறுகின்றன. ஆனால், பெசிலுக்கு ஆதரவாக 20இற்கும் குறைவான எம்.பிக்களே இருப்பதாகவும் ஏனையோர் அரசியலமைப்புத் திருத்தத்தை ஆதரிப்பதாகவும் தெரிகிறது.

இந்நிலையில், அரசியலமைப்பின் 21ஆவது திருத்தத்தை ஆதரித்துவிட்டு அதன்பின்னர் அமையவுள்ள புதிய அரசியல் கூட்டணியில் அங்கத்துவத்தைப் பெற ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பெரும்பான்மையான எம்.பிக்கள் தீர்மானித்துள்ளனர்.

இந்த புதிய அரசியல் கூட்டணி டலஸ் அலகப்பெருமவை தலைவராகவும் கோப் குழுவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சரித்த ஹேரத்தை செயலாளராகவும் கொண்டிருக்குமென அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

புதிய அரசியலமைப்புத் திருத்தத்திற்கு ஆதரவை வழங்க வேண்டாமென ஆளுங்கட்சிக்குள் முன்னெடுக்கும் பிரசாரங்களை கட்சி எம்.பிக்கள் புறந்தள்ளுவதால், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உயர்மட்டத் தலைவர்கள் அதிர்ச்சியடைந்துள்ளனர். இந்தத் திருத்தங்களுக்கு முழு ஆதரவை வழங்கவுள்ளதாக ஏற்கனவே அறிவித்துள்ள ஜனாதிபதி கோட்டாபய, ஆளுங்கட்சியின் நாடாளுமன்றக் குழுவை இன்று கூட்டவுள்ளார்.

இதன்போது இதுபற்றி விவாதிக்கப்படுமென தெரிவிக்கப்படுகிறது.

## 21ஆவது திருத்தத்தை...

அரசியல் ஸ்திரத்தன்மையை அடைவதற்கு மோசடிக்கு வழிவகுத்த நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிக்க வேண்டும் எனவும், அரசியலமைப்பின் 21ஆவது திருத்தமே பிரதான தீர்வு எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## சீனா வழங்கிய...

பிரதமர் ரணில் விக்ரமசிங்க பதவியேற்பதற்கு முன்னர் இந்த சலுகை வழங்கப்பட்டதாக தெரிய வந்துள்ளது. சிங்கப்பூரில் உள்ள கையிருப்பில் இருந்து டீசலை வழங்க சீனா தயாராக உள்ளது. ஆனால், சீனாவின் முன்மொழிவிற்கு இலங்கை பதிலளிக்கவில்லை. இலங்கையின் அணுகுமுறை சீனர்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இதற்கிடையில், நிலுவையில் உள்ள கடன்களை திருப்பிச் செலுத்துவதை ஒத்திவைப்பது தொடர்பாக, சீன எக்சிம் வங்கி மற்றும் சீன அபிவிருத்தி வங்கியுடன் நிதியமைச்சு பேச்சு நடத்தி வந்த நிலையில், இரண்டு வாரங்களாக, நிதியமைச்சிடம் இருந்து எந்த பதிலும் வராத நிலையில், திடீரென பேச்சு நிறுத்தப்பட்டது.

பிரதமர் ரணில் பதவியேற்பதற்கு முன்னரே இதுவும் நடந்துள்ளது.

சீனா சர்வதேச வளர்ச்சி ஒத்துழைப்பு வங்கி ஏற்கனவே 500 மில்லியன் யுவான் அவசர உதவியாக வழங்கியுள்ளது. உதவியின் கீழ் சீனாவிலிருந்து அரிசியின் முதலாவது ஏற்றுமதி இலங்கைக்கு வரவுள்ள நிலையில், தேவையான குறிப்பிட்ட மருந்துகளின் பட்டியலை வழங்குமாறு இலங்கையிடம் கோரப்பட்டுள்ளது.

## வீட்டை தீயிட்டமை...

நாவலவில் உள்ள அவரது வீடும், பெந்தோட்டையிலுள்ள பூர்வீக இல்லமுமே இவ்வாறு அழிக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

"காலிமுகத்திடலில் நடைபெற்ற போராட்டத்தில் கலந்து கொண்டவர்களுக்கு எதிராக நான் ஒரு வார்த்தை கூட பேசவில்லை. மே 9 அன்று அலரிமாளிகையில் நடைபெற்ற கூட்டத்திற்கு ஆதரவாளர்களை அழைத்து வரவோ அல்லது கூட்டத்தில் பங்கேற்கவோ நான் பஸ்களை ஏற்பாடு செய்யவில்லை. ஆனால், நான் இலக்காகிவிட்டேன்" என்று கீதா குமாரசிங்க ஊடகமொன்றிற்கு வழங்கிய நேர்காணலில் தெரிவித்தார்.

விருது பெற்ற திரைப்பட நடிகையான அவர், நான்கு தசாப்தங்களுக்கும் மேலாக தனது திரைப்பட வாழ்க்கையில் பெற்ற பல பொக்கிஷமான விருதுகள் கும்பலால் அழிக்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

மே 9ஆம் திகதி வன்முறை ஆரம்பித்து, பெந்தோட்டையில் உள்ள எனது வீடு தாக்கப்பட்டதன் பின்னர், நாவலவில் உள்ள எனது இல்லத்திற்கும் கும்பல் வரக்கூடும் என்ற சந்தேகம் எனக்கு ஏற்பட்டது. அடுத்த நாள் மாலை நான் படுக்கையில் படுத்திருந்தேன். அரசியலில் நீடிப்பது பயனுள்ளதா என்று சிந்தித்தபடி இருந்தேன். பொழுது சாய்ந்து சிறிது நேரத்துக்குப் பிறகு மின்சாரம் துண்டிக்கப்பட்டது. திடீரென்று பலத்த சத்தம் கேட்டது, கும்பல் உள்ளே நுழைந்ததை நான் அறிந்தேன்.

எனது உதவியாளர்களில் ஒருவர் என்னைப் பாதுகாப்பாக ஒரு கைவிடப்பட்ட நிலத்திற்கு இழுத்துச் சென்றார். அங்கு பொலிஸார் வரும் வரை நான் இரண்டு மணி நேரம் தங்கினேன். இதன்போது நான் அதிர்ச்சியில் இருந்தேன்,

காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள் தாக்கப்பட்டதால், அவர்களைத் தாக்கியவர்கள் மீது வெறுப்பு ஏற்பட்டதாகவும் அரசியல்வாதிகளின் வீடுகள் தாக்கப்பட்டதாகவும் சிலர் தாக்குதல்களை நியாயப்படுத்த முயற்சிக்கின்றனர். அது சரியான நியாயம் அல்ல. சட்டம் ஒழுங்கு அதன் இடத்தை இழந்துவிட்டது என்றும் அவர் கூறினார்.

அநீதிக்கு எதிராக நிற்க விரும்பியதால் தான் அரசியலுக்கு வந்ததாக கீதா குமாரசிங்க கூறினார். "இது ஒரு போராட்டம். என் சொந்த வழி. நாடாளுமன்றத்தில் பெண்களை பிரதிநிதித்துவப்படுத்தவும், தற்போதைய நாடாளுமன்றத்தில் வெளியில் இருந்து வந்த ஒரே பெண்ணாகவும் என்னால் இருக்க முடிந்தது.

சினிமாத்துறையை தியாகம் செய்துவிட்டு அரசியலுக்கு வந்தேன். மக்கள் நலனுக்கான போராட்டத்தில் கலைஞர்கள் எப்போதும் பங்கு கொள்ள வேண்டும். அரசியலுக்கு வந்தபோது சினிமா மீதான ஈடுபாட்டை முழுமையாக கைவிட வேண்டியதாயிற்று.

ஆனால், நான் ஒரு அரசியல்வாதியாக எனது பாத்திரத்தில் தோல்வியடைந்தேன். ஏனென்றால், அரசாங்கம் அதன் பங்கைப் புரிந்து கொள்ளவில்லை. மேலும், நான் ஆற்ற வேண்டிய பாத்திரத்தை புரிந்துகொள்கிறேன். ஆனால், அரசியலை ஒருபோதும் கைவிட மாட்டேன். நான் சுயமாக உருவாக்கப்பட்ட பெண் மற்றும் வலிமையானவள். எனக்கு ஒரு சமூகப் பொறுப்பு இருக்கிறது.

கலைத்துறைக்கான இராஜாங்க அமைச்சராக நான் நியமிக்கப்பட்டபோது நான் மகிழ்ச்சியடைந்தேன். கலைத்துறையைச் சேர்ந்த ஒருவர் அந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டது அதுவே முதல் முறை. நான் மிகவும் திட்டமிட்டேன். அந்த நம்பிக்கைகள் இரண்டு வாரங்களில் சிதைந்துவிட்டன" என்று கீதா குமாரசிங்க மேலும் கூறினார்.

தனது அரசியல் போராட்டத்தை தொடரப் போவதாகவும் ஆனால் மீண்டும் சினிமாத்துறைக்கு திரும்ப திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

## இலங்கையில் மருத்துவ...

இலங்கையில் அடிப்படை சுகாதார சேவைகளை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வதற்கான ஒத்துழைப்புகளை வழங்குவதில் உலக சுகாதார ஸ்தாபனம் கவனம் செலுத்தியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

சுவிட்ஸர்லாந்தின் ஜெனீவாவில் அமைந்துள்ள உலக சுகாதார ஸ்தாபனத்தின் தலைமையகத்தில் அண்மையில் நடைபெற்ற உலக சுகாதார மாநாட்டின்போது சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், வைத்தியர் அசேல குணவர்தன உள்ளிட்ட இலங்கை பிரதிநிதிகளுடன் இது தொடர்பில் கலந்துரையாடியதாக கலாநிதி டெட்ரோஸ் அதனோம் கூறியுள்ளார்.

இதனிடையே இந்தியா, பிரான்ஸ் உள்ளிட்ட பல்வேறு நாடுகளின் உதவியால் நாட்டில் நிலவும் மருந்துகளுக்கான தட்டுப்பாடு சுமார் 30 வீதத்தால் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் கெஹேலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

## மத்திய வங்கியின்...

மத்திய வங்கியின் செயற்பாடுகளை சுயாதீனமாக முன்னெடுப்பதற்கு அரசாங்கம் முழுமையான ஆதரவை வழங்கும் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க மற்றும் நாணயச் சபை உறுப்பினர் சஞ்சீவ ஜயவர்தன ஆகியோருடன் நேற்று முன்தினம் (28) கோட்டை, ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்ற சந்திப்பின்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

நியமனம் பெற்று குறுகிய காலத்திற்குள் நிதி நெருக்கடியைக் கட்டுப்படுத்தவும், அவற்றைத் தணிக்கவும் நந்தலால் வீரசிங்க மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கு ஜனாதிபதி பாராட்டைத் தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி உள்ளிட்ட நிதி நிறுவனங்களுடன் கலந்தாலோசித்து, பொருளாதாரத்துறை நிபுணர்களின் பங்களிப்புடன் மேற்கொள்ளப்பட்டுவரும் வேலைத்திட்டம் வெற்றிகரமான முன்னேற்றத்தை அடைந்துள்ளதாக வீரசிங்க இங்கு தெரிவித்தார். பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தி பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கான செயற்திட்டத்தை வீரசிங்க விளக்கினார்.

எந்தவொரு அரசியல் தலையீடும் இன்றி, அவ்வேலைத்திட்டத்தை தொடர்ந்தும் முன்னெடுப்பதற்கு அரசாங்கம் ஆதரவளிக்கும் என ஜனாதிபதி தெரிவித்தார்.

தற்போது முன்னெடுத்துவரும் செயற்பாடுகளால் சமூக மற்றும் பொருளாதார ஸ்திரத்தன்மையை அடைய முடியும் என மத்திய வங்கியின் ஆளுநர் நம்பிக்கை தெரிவித்தார். நந்தலால் வீரசிங்க உள்ளிட்ட நாணய சபை, சர்வதேச ரீதியாக முன்னெடுத்துவரும் செயற்பாடுகளின் வெற்றிக்குத் தேவையான சந்தர்ப்பத்தில் அரசத் தலைவர்கள் மட்டத்தில் பங்களிப்புச் செய்ய தயார் என ஜனாதிபதி குறிப்பிட்டார்.

## 9 வயது சிறுமி கொலை...

பாணந்துறை பிரதேச குற்ற விசாரணைப் பிரிவினர் மற்றும் புலனாய்வு அதிகாரிகளும் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக பாணந்துறை பிரிவுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சமந்த வெதகே தெரிவித்தார்.

பாணந்துறையில் வசிக்கும் சிறுமியின் நெருங்கிய உறவினர் ஒருவர் காணாமல் போனது குறித்தும் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

அதேசமயம், புறக்கோட்டை பிரதான பஸ் நிலையத்தில் பெண் ஒருவருடன் சிறுமி இருப்பதாக பேஸ்புக்கில் வெளியான தகவல் தொடர்பில் ஆராயுமாறு கொழும்பு பிரதேச பொலிஸாருக்கு பணிப்புரை வழங்கப்பட்டுள்ளதாக பண்டாரகம பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சிறுமி காணாமல் போவதற்கு முந்தைய நாள் இரவு அணிந்திருந்த ஆடையை மோப்பம் பிடித்த ஹொரணை பொலிஸ் நாயான 'டனோ', சிறுமி கோழி இறைச்சி வாங்கச் சென்றதாகக் கூறப்படும் கடைக்கு அருகில் போய் நின்றதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். எனவே அந்த கடைக்கு வந்தவர்கள் தொடர்பிலும் விசாரணை நடத்தப்படுகிறது.

பொலிஸாரால் சி.சி.ரி.வி காணொளி காட்சிகள் ஆய்வு செய்யப்பட்டதோடு அதிலிருந்து கடைக்கு சென்று சிறுமி வீடு திரும்பும் காட்சிகள் பெறப்பட்டன.

எனினும், சிறுமியின் வீட்டிலிருந்து 150 மீற்றர் தொலைவில் எந்த சி.சி.ரி.வி காணொளி காட்சிகளும் காணப்படவில்லை என பொலிஸார் குறிப்பிடுகின்றனர்.

ஹொரணை பதில் நீதவான் மற்றும் நீதிமன்ற சட்ட வைத்திய அதிகாரி ஆகியோர் சம்பவ இடத்திற்கு சென்று பரிசோதனைகளை மேற்கொண்டிருந்தனர்.

இதனையடுத்து சிறுமியின் சடலம் மரண பரிசோதனைகளுக்காக பண்டாரகம வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

**நீதியான விசாரணை - ஜனாதிபதி உறுதி**

சிறுமி பாத்திமா ஆயிஷா அக்ரம் கொலை தொடர்பில் விரைவில் நீதி கிடைக்கும் என தாம் உறுதியளிப்பதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தன்னுடைய உத்தியோகபூர்வ சமூகவலைத்தளத்தில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஈவிரக்கமற்ற முறையில் கொல்லப்பட்ட சிறுமி பாத்திமா ஆயிஷாவின் குடும்பத்தினருக்கு தமது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபங்களையும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வெளிப்படுத்தியுள்ளார்.

## அடைக்கலம் தந்து...

எனவே, 21ஆவது திருத்தத்திற்கு எதிராக வாக்களித்துவிட்டு நான் இந்தியாவிற்குச் சென்று விடுவேன் என ஆளுந்தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர் விமலவீர திசாநாயக்க, 'தமிழன்' செய்திகளிடம் தெரிவித்தார்.

நாட்டில் பாதுகாப்பில்லை என்பதால் இந்தியாவிடம் புகலிடம் கோரியது குறித்து வினவியபோதே அவர் இதனை நேற்று (29) தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் தற்போதுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எவ்வித பாதுகாப்பும் இல்லை. அவர்களுக்கு கடும் அச்சுறுத்தல் விடுக்கப்படுகின்றது . நாட்டில் சட்டம் ஒழுங்கு முறையாக நடைமுறைப்படுத்தப்படாத பட்சத்திலும் குற்றவாளிகள் நீதிமன்றத்திற்குச் சென்றால் மலர் மாலை அணிவிக்கும் நாட்டில் வாழ முடியுமா?

21ஆவது திருத்தத்திற்கு ஆதரவாக வாக்களிக்காவிட்டால் வீடுகளுக்கு வர வேண்டாம் என ஓமல்பே சோபித தேரர் கூறியுள்ளார். நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அவர் எவ்வாறு அச்சுறுத்த முடியும். அவர் ஒரு பயங்கரவாதியை போன்று பேசுகின்றார். தேரர்கள் எப்படி இவ்வாறு பேச முடியும். அவர் எங்களுக்கு வாக்களிக்கவுமில்லை. அவர் ஒருபோதும் இவ்வாறு அச்சுறுத்த முடியாது.

சபாநாயகர் அமைதியாக இருக்கும் போது, நாட்டிலுள்ள சட்டங்கள் முறையாக நடைமுறையில் இல்லாதபோது, பொலிஸ் மா அதிபர் மற்றும் இராணுவத் தளபதி என யாரும் பேசாத போது நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எவ்வாறு பாதுகாப்பிருக்கும்.

21ஆவது திருத்தத்தை நாங்களும் சரி தேரர்களும் சரி இதுவரை பார்க்கவில்லை. அவ்வாறாயின், பார்க்காத ஒரு திருத்தத்திற்கு வாக்களிக்குமாறு எவ்வாறு அச்சுறுத்த முடியும். இவ்வாறு அச்சுறுத்தும்போது, சபாநாயகரும் நீதித்துறையும் தூங்கிக்கொண்டு இருக்கிறது என்றால் நாங்கள் மோடியிடமே பாதுகாப்பை கோர வேண்டும்.

நாட்டில் பாதுகாப்பு இல்லை என்று கூறவில்லை. எனக்கு இந்த நாட்டில் பாதுகாப்பில்லை. இதனாலேயே எனக்கு பாதுகாப்பு வழங்குமாறு பகிரங்கமாக கோரினேன். 21ஆவது திருத்தத்திற்கு ஆதரவாக நான் வாக்களிக்கமாட்டேன். அதன்பின்னர், என்னால் வீட்டில் இருக்க முடியாது. என்னை கொலை செய்துவிடுவார்கள். எனவே, 21 ஆவது திருத்தத்திற்கு எதிராக வாக்களித்துவிட்டு நான் இந்தியாவிற்குச் சென்றுவிடுவேன்.

நாட்டில் பொருளாதாரப் பிரச்சினை இருக்கும்போது, 21ஆவது திருத்தத்தினால் என்ன தீர்வு கிடைக்கும். 7.7 வீதமாக இருந்த பொருளாதார வளர்ச்சியை 1.7 என்ற நிலைக்கு கொண்டுவந்தவரே இன்று பிரதமராகவும் நிதி அமைச்சராகவும் இருக்கின்றார். பொருளாதார நெருக்கடிக்கு தீர்வை தேடுவதற்கு பதிலாக 21ஆவது திருத்தத்தை கொண்டுவந்து 25 வருடங்களுக்கு அதிகாரத்தில் இருப்பதற்கான முயற்சிகளையே முன்னெடுக்கின்றனர்.

எனவே, 21ஆவது திருத்தத்திற்கு நான் ஆதரவளிக்க முடியாது. எதிராக வாக்களித்துவிட்டு, என்னால் வீட்டுக்குச் செல்ல முடியாது. ஆதலால், என்னை இந்தியாவிற்கு அழைத்துச் செல்லுமாறு பிரதமர் மோடியிடம் கோருவேன் - என்றார்.

மரண அறிவித்தல்,
நினைவஞ்சலி,
மற்றும் பிறந்தநாள்
விளம்பரங்களை
குறைந்த கட்டணத்தில்
பிரசுரிக்க
வெறும் 1000/=
மட்டுமே...
அழையுங்கள்
0761393805

தமிழன் தமிழன் ஜூனியர்
கொழும்பு 01
முதல் 15 வரையிலான
பகுதிகளில் தமிழன்
(தினசரி, வாரஇதழ்),
ஜூனியர் பத்திரிகை
வீடுகளுக்கே விநியோகம்
செய்யப்படும்.
தொடர்பு - சந்திரகுமார்
0777983308

# இலங்கைக்கு வருகை தருமாறு ஐரோப்பிய பயணிகளுக்கு அழைப்பு

## நெருக்கடி நிலைமையை சமாளிப்பது தொடர்பில் சுற்றுலாத்துறை அமைச்சு ஆராய்வு

(நமது விசேட நிருபர்)

இலங்கைக்கு சுற்றுலாப் பயணம் மேற்கொள்ளுமாறு ஐரோப்பிய நாடுகளின் பிரஜைகளுக்கு சுற்றுலாத்துறை அமைச்சு அழைப்பு விடுத்துள்ளது. நாடு பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டிருக்கும் இவ்வேளையில் அதிலிருந்து மீள்வதற்கு சுற்றுலாப் பயணிகளின் பங்களிப்பு அவசியம் எனவும் அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

ஐரோப்பிய சந்தை பிரதிநிதிகளுக்கும் சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோவுக்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே இலங்கை சார்பில் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை தொடர்பில் ஐரோப்பிய நாடுகள் சில விதித்துள்ள பயணக் கட்டுப்பாடுகளை தளர்த்துவது தொடர்பிலும் இந்தச் சந்திப்பின் போது ஆராயப்பட்டுள்ளது.

மேலும், இலங்கை நிலைமை தொடர்பில் கள நிலைவரங்களை ஆராய்ந்து அறிக்கையிடும் நோக்கில் சர்வதேச ஊடகவியலாளர்கள், வலைப்பதிவர்கள் மற்றும் பயண முகவர்களை அழைப்பது தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

# யாழில் டெங்கு காரணமாக 5 வயது சிறுமி உயிரிழப்பு

(யாழ். நிருபர்)

டெங்கு காய்ச்சல் காரணமாக 5 வயது சிறுமி உயிரிழந்துள்ளார். உடுவிலைச் சேர்ந்த பரசுதன் யோயிதா (வயது -5) என்ற சிறுமியே உயிரிழந்தார்.

சிறுமிக்கு கடந்த 23ஆம் திகதி மாலை காய்ச்சல் இருந்துள்ளது. பனடோல் மாத்திரை வழங்கப்பட்டதனால் ஓரளவு சுகம் ஏற்பட்டுள்ளது.

கடந்த புதன்கிழமை கடுமையான காய்ச்சல் காரணமாக இணுவிலிலுள்ள தனியார் மருத்துவமனைக்கு சிறுமி அழைத்துச் செல்லப்பட்டுள்ளார். அங்கு அவருக்கு மருத்துவ ஆலோசனையுடன் மாத்திரைகள் வழங்கப்பட்டு வீடு செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார்.

எனினும், அன்றைய தினம் இரவு சிறுமிக்கு காய்ச்சலும் வாந்தியும் அதிகரித்ததால் மீண்டும் தனியார் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். அவரது உடல்நிலையைக் கருத்திற்கொண்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

சிறுமி சிகிச்சை பயனின்றி கடந்த வெள்ளிக்கிழமை (27) காலை உயிரிழந்துள்ளார்.

இதேவேளை, யாழ்ப்பாணத்தில் கடந்த ஒரு வாரத்தில் இரண்டாவது சிறுவர் டெங்கு காய்ச்சலினால் உயிரிழந்துள்ளார்.

# வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் பீரிஸ் அமெரிக்கத் தூதுவர் சங் உடன் சந்திப்பு



அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் ஐ, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சில் வைத்து கடந்த வெள்ளிக்கிழமை சந்தித்த வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், இருதரப்பு உறவுகள், தற்போதைய உள்நாட்டு அபிவிருத்திகள் மற்றும் நாடு எதிர்கொள்ளும் சவால்களைத் தணிப்பதற்கான சர்வதேச சமூகத்தின் உதவி ஆகியன குறித்து பரந்தளவிலான கலந்துரையாடல்களில் ஈடுபட்டார்.

மக்கள் எதிர்நோக்கும் சிரமங்களைப் போக்குவதற்கும், தெளிவான செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கும் குறுகிய மற்றும் நீண்டகால தீர்வுகளை வழங்குவதற்கு சாத்தியமான அனைத்து வழிகளையும் ஆராய்வதில் அரசாங்கம் கவனம் செலுத்துவதாக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் குறிப்பிட்டார்.

இந்நிலையில், பலதரப்பு நிறுவனங்கள் உட்பட சர்வதேச சமூகத்திடமிருந்து இலங்கை பெறப்படும் நல்லெண்ணம் மற்றும் உதவிகளை ஆழ்ந்து பாராட்டுவதாக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் பீரிஸ் சுட்டிக்காட்டினார். இலங்கையின் பொருளாதார சவால்களைத் தணிப்பதற்காக இருதரப்பு மற்றும் பலதரப்பு வழிகள் மூலம் அமெரிக்கா மற்றும் ஏனைய நாடுகளின் தொடர்ச்சியான ஆதரவை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் ஊக்குவித்தார்.

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் பீரிஸ், நாட்டில் சட்டம் மற்றும் ஒழுங்கின் ஆட்சியை மேம்படுத்துவதற்கும் பேணுவதற்கும் அரசாங்கம் எடுத்து வரும் முயற்சிகள் குறித்தும், கருத்துச் சுதந்திரம் மற்றும் ஒன்றுகூடுதல் ஆகியவற்றுக்கான அனைவரினதும் உரிமைகளையும் மதிக்கும் முயற்சிகள் குறித்தும் அமெரிக்கத் தூதுவருக்கு விளக்கினார். அரசியலமைப்பின் 21ஆவது திருத்தச் சட்ட வரைவு தொடர்பாக பல்வேறு அரசியல் கட்சிகளுடனான கலந்துரையாடல்கள் தொடர்பிலும் அவர் தூதுவருக்கு விளக்கமளித்தார்.

மேலும், தற்போதைய பொருளாதார சவால்களுக்கு மத்தியிலும் நல்லிணக்கம் தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் அரசாங்கம் முழுமையாக அர்ப்பணிப்புடன் இருப்பதாக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் தூதுவர் சுங்கிடம் உறுதியளித்தார்.

அமெரிக்கா இலங்கையின் நண்பன் என்றும் நாட்டிலுள்ள சவால்களை நன்குணர்ந்து புரிந்துகொள்வதாகவும் தூதுவர் சுங் தெரிவித்தார். இந்த இக்கட்டான நேரத்தில் இலங்கைக்கு அமெரிக்கா தொடர்ந்தும் ஆதரவளிக்கும் என அவர் குறிப்பிட்டார்.

# காங்கேசன்துறை வீதி சுற்றுவட்டத்தை அழகுபடுத்தும் செயற்றிட்டம் ஆரம்பம்








(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணம் - காங்கேசன்துறை வீதியிலுள்ள பிரதம தபாலகத்திற்கு முன்பாகவுள்ள சுற்றுவட்டத்தை மீளமைத்து அழகுபடுத்தும் செயற்றிட்டத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

ரில்கோ தனியார் விடுதியின் உரிமையாளர் திலகராஜின் நிதிப் பங்களிப்பு மூலம் மீளவும் புனரமைக்கப்படவுள்ள சுற்றுவட்டத்தின் அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று முன்தினம் (28) மதியம் 12 மணியளவில் நடைபெற்றது.

சுற்றுவட்டத்தின் நடுவே திருவள்ளுவரின் சிலை நிறுவப்பட்டு அப்பகுதி அழகுபடுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

'தூயநகரம் அழகிய மாநகரம்' என்ற தொனிப்பொருளில் யாழ். மாநகர முதல்வர் வி.மணிவண்ணனால் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி செயற்றிட்டத்தில் யாழ் மாநகர சபைக்குட்பட்ட சுற்றுவட்டங்களை அழகுபடுத்தும் செயற்பாட்டின் நீட்சியாக இது மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்நிகழ்வில், யாழ். மாநகர முதல்வர் வி.மணிவண்ணன், ரில்கோ தனியார் விடுதியின் உரிமையாளர் திலகராஜ், யாழ் மாநகர ஆணையாளர் ஜெயசீலன், மாநகர சபை உறுப்பினர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

# வயதான இரு பெண்கள் சடலங்களாக மீட்பு

## வட்டுக்கோட்டையில் சம்பவம்

(யாழ். நிருபர்)

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிலுள்ள வீடொன்றில் வயோதிபப் பெண்கள் இருவரின் சடலங்கள் கடந்த வெள்ளிக்கிழமை (27) கண்டறியப்பட்டுள்ளன.

மாவடி, சங்கரத்தை என்ற இடத்திலுள்ள வீடொன்றில் இவ்வாறு சடலங்கள் கண்டறியப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

76 வயதுடைய ஒருவரும் மற்றையவர் 73 வயதுடையவர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

ஒருவர் இரண்டு வாரங்களுக்கு முன்பாகவும் உயிரிழந்துள்ளார். மற்றையவர் இரண்டு நாட்களுக்கு முன்னர் உயிரிழந்திருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

இருவர் மட்டுமே அந்த வீட்டில் வசித்துவந்த நிலையில் அவர்களுக்கு உதவி இல்லை என்று விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டது.

மாதாந்த உதவிப் பணம் பெறுக்கொள்ளவில்லை என்று கிராம அலுவலகர் வீடு தேடிச் சென்றபோதே இருவரும் உயிரிழந்துள்ளமை தெரியவந்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

# அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபை மீதான விமர்சனங்களுக்கு விளக்கம்

## தேவை ஏற்படின் நேரடியாக வருகைதருமாறு செயலாளரால் அழைப்பு

சமஸ்ථ ලංකා ජම්ඉයියතුල් උලමා
அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா
ALL CEYLON JAMIYYATHUL ULAMA

உலமா சபையின் செயற்பாடுகள் மற்றும் அதன் நடவடிக்கைகள் தொடர்பில் சில காலமாக சமூக வலைத்தளங்களில் கருத்துகளும் விமர்சனங்களும் ஒருசிலரால் முன்வைக்கப்பட்டு வருவதை நாம் அவதானிக்கக்கூடியதாக உள்ளது. அவ்விடயங்கள் தொடர்பாக ஜம்இய்யாவிடம் தீர விசாரித்து தெளிவு பெற்றுக்கொள்வதே நம் ஒவ்வொருவரதும் பொறுப்பாகும் - என அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபை தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் உலமா சபையின் பொதுச் செயலாளர் அஷ்-ஷைக் எம். அர்கம் நூராமித் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கை முஸ்லிம்கள் வரலாறு நெடுகிலும் மார்க்க அறிஞர்களினதும் துறைசார்ந்தவர்களினதும் வழிகாட்டல்களின் அடிப்படையிலேயே வாழ்ந்து வந்துள்ளனர். ஆரம்பத்தில் மார்க்க அறிஞர்கள் தமக்கு மத்தியில் ஒன்றுபட்டு இலங்கை முஸ்லிம் சமூகத்தை மார்க்க ரீதியாக வழிநடத்தி வந்ததோடு, பின்னர் அதனை கட்டுக்கோப்புடன் மேற்கொள்வதற்கு 1924ஆம் ஆண்டு அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபையை உருவாக்கினார்கள்.

அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா, மார்க்க அறிஞர்களைக்கொண்டு சமூகத்திற்காகவும் நாட்டுக்காகவும் இயங்கிவரும் ஒரு சபையாகும். இது நாடாளுமன்றத்தில் கூட்டிணைக்கப்பட்டுள்ளதோடு இலங்கையில் 25 மாவட்டங்களிலும் 164 கிளைகளுடன் 8 ஆயிரத்து 125 உலமாக்களை உறுப்பினர்களாக் கொண்டு தற்போது செயற்பட்டு வருகின்றது. அண்மைக்காலமாக ஜம்இய்யாவின் பணிகள் பல பரிமாணங்களைப் பெற்று வியாபித்துள்ளது. அது இஸ்லாத்தினதும் முஸ்லிம்களினதும் நலன் சார்ந்த விடயங்களோடு நாடு, நாட்டு மக்கள், சர்வதேசம் சார்ந்த விவகாரங்களிலும் ஈடுபாடு காட்டி வருகின்றது. இதனால் இன்று ஜம்இய்யாவின் முக்கியத்துவம் தேசத்திலும் சர்வதேசத்திலும் உணரப்பட்டு வருவதை அவதானிக்க முடிகின்றது.

அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா அதன் யாப்பை அடிப்படையாகக்கொண்டு தனது கருமங்களை செய்து வருவதுடன், அதற்கான காரியாலயத்தையும் கொண்டுள்ளது. அத்துடன், ஜம்இய்யா காலமாற்றத்திற்கு ஏற்ப தனது சட்டயாப்பில் தேவையான திருத்தங்களையும் மாற்றங்களையும் செய்து வந்துள்ளது. ஜம்இய்யாவின் மாவட்ட பிரதிநிதிகளின் பங்கேற்புடன் நடைபெறும் கூட்டங்களின்போதே திருத்தப் பிரேரணைகள் சமர்ப்பிக்கப்பட்டு சபையோரின் அங்கீகாரத்துடன் அவை நிறைவேற்றப்படும்.

முஸ்லிம் சமூகத்தின் எல்லா தரப்பினரையும் இஸ்லாமிய போதனைகளின் அடிப்படையில் ஆன்மீக ரீதியாக வழிகாட்டுவதற்காகவும் உலமாக்களினதும் இஸ்லாமியக் கல்வியினதும் மேம்பாட்டிற்காகவும் சமூகத்தினதும் நாட்டினதும் கல்வி, சமூக, பொருளாதார, கலாசார வளர்ச்சிக்காகவும் இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதற்காகவும் பல செயற்றிட்டங்களை துறைசார்ந்தவர்களின் ஆலோசனையுடனும் உதவியுடனும் ஜம்இய்யா திட்டமிட்டு நடைமுறைப்படுத்தி வருகின்றது.

ஆக்கப்பூர்வமான விமர்சனங்கள் ஒழுங்கு முறைகளைப் பேணி முன்வைக்கப்படும்போது அவற்றை ஜம்இய்யா எப்போதும் வரவேற்கும். எனினும் தீய நிகழ்ச்சி நிரல்களை அடிப்படையாகக் கொண்டு, ஜம்இய்யாவின் செயற்பாடுகளை சீர்குலைத்து, அதனை ஸ்தம்பிக்கச் செய்யும் நோக்கில் முன்வைக்கப்படும் போலி குற்றச்சாட்டுகளையும் தீய முயற்சிகளையும் ஜம்இய்யா ஒருபோதும் அங்கீகரிக்காது.

வரலாறு நெடுகிலும் உலகில் மாற்றுக் கருத்துகள் காணப்பட்டு வந்துள்ளன. அந்தவகையில் இமாம்கள், மார்க்க அறிஞர்கள், துறைசார்ந்தவர்கள் தீன் மற்றும் சமூகப் பணிகளில் ஈடுபடும் சந்தர்ப்பங்களில் கருத்து மோதல்களும் விமர்சனங்களும் இருந்தே வந்துள்ளன. எனினும், கீழ்க் குறிப்பிடும் இரண்டு அல்குர்ஆன் வசனங்களின் அடிப்படையில் அக்காலத்தில் வாழ்ந்தவர்கள் உரியவர்களிடம் சென்று அதற்கான தெளிவுகளைப் பெற்று தம் சந்தேகங்களை நிவர்த்தி செய்துகொண்டார்கள்.

ஜம்இய்யாவின் செயற்பாடுகள் மற்றும் அதன் நடவடிக்கைகள் தொடர்பில் சில காலமாக சமூக வலைத்தளங்களில் கருத்துகளும் விமர்சனங்களும் ஒருசிலரால் முன்வைக்கப்பட்டு வருவதை நாம் அவதானிக்கக்கூடியதாக உள்ளது. அவ்விடயங்கள் தொடர்பாக ஜம்இய்யாவிடம் தீர விசாரித்து தெளிவு பெற்றுக்கொள்வதே நம் ஒவ்வொருவரதும் பொறுப்பாகும்.

அந்தவகையில் மேற்படி விடயங்களை ஜம்இய்யாவுடன் நேரடியாக கலந்துரையாடி தெளிவுபெற விரும்புபவர்கள் மற்றும் குற்றச்சாட்டுகளை முன்வைப்பவர்கள் ஜம்இய்யாவின் பின்வரும் துரித இலக்கத்துடன் அல்லது மின்னஞ்சலுடன் தொடர்புகொண்டு தங்களுக்கான நேரத்தையும் திகதியையும் ஒதுக்கிக்கொண்டு, வழங்கப்படும் குறித்த தினத்தில் தமது விமர்சனங்களுக்கான உரிய அடிப்படைகள் மற்றும் ஆதாரங்களுடன் ஜம்இய்யாவுக்கு நேரடியாக வருகைதந்து தெளிவுபெற்றுக்கொள்ளுமாறு அன்புடன் தெரிவித்துக்கொள்கின்றோம். துரித இலக்கம்: 0117-490490 (வார நாட்களில் காலை 9.00 மணிமுதல் மாலை 5.00 மணி வரை) மின்னஞ்சல்: info@acju.lk








கேகாலை பிரதான வைத்தியசாலையின் இரத்த வங்கியின் வேண்டுகோளுக்கிணங்க மாவனல்லை தும்புலுவாவலையில் இரத்ததான முகாம் இடம்பெற்றது. அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவையின் தும்புலுவாவக் கிளையின் ஏற்பாட்டில் தும்புலுவாவ ரியோ ரிஷப்சன் மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வை, அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவையின் தேசியத் தலைவர் சஹீட் எம். ரிஸ்மி தனது 20ஆவது தடவையாக இரத்த தானம் வழங்கி உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தார். (படப்பிடிப்பு: இக்பால் அலி)

# மாத்தளையில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்




மாத்தளை நகரில் நேற்று முன்தினம் எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது. 'கோட்டா கோ கம' உருவாக்கப்பட்டு, நேற்று முன்தினத்துடன் 50 நாட்கள் நிறைவடைந்ததை முன்னிட்டும் மேலும் கடந்த 9ஆம் திகதி, கோட்டா கோ கம மீது நடத்தப்பட்ட தாக்குதலின் பிரதான சந்தேகநபர் முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்டவர்களை கைதுசெய்யுமாறு வலியுறுத்தியும் குறித்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் மாத்தளை மாவட்ட தலைவர் கமகெதர திசாநாயக்க உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# மலையகத்தில் டெங்கு பரவும் அபாயம்

செ.தி.பெருமாள்

மத்திய மலைநாட்டில் தொடர் மழை காரணமாக டெங்கு நோய் அதிக வேகத்தில் பரவும் அபாயநிலை தொன்றியுள்ளது என மத்திய மாகாண சுகாதார சேவைகள் அதிகாரி தெரிவித்தார்.

இது குறித்து மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில், வீட்டுப் பகுதியில் கழிவுநீர் தேங்கி நிற்பதை முற்றாக இல்லாமல் செய்யவேண்டும். அதேபோல் பொது இடங்களில் கழிவுநீர் தேங்கி நிற்பதை உடனே அகற்றல் அவசியம் எனவும் மக்கள் இது தொடர்பில் மிகவும் அவதானத்துடன் இருக்குமாறு வேண்டுகோள் விடுத்தார்.

இதனால் எதிர்வரும் தினங்களில் மத்திய மாகாணத்திலுள்ள அனைத்து பகுதிகளிலும் பொது சுகாதார அதிகாரிகள் மற்றும் சுகாதார சேவை அதிகாரிகள் மக்கள் குடியிருப்புகள் பகுதிகளில் நேரடியாக சென்று டெங்கு பரவாமல் இருக்க விழிப்புணர்வு செய்யவுள்ளனர். மக்களை மிகவும் அவதானமாக இருக்கு மாறும் நீர் தேங்கி நிற்கும் பகுதி யில் நீர் தேங்காவண்ணம் பார்த்துக் கொள்வது அவசியம் எனவும் அவர் கோரிக்கை விடுத்தார்.

# எரிபொருள் நிரப்பு நிலையத்தின் ஊழியர்களை தாக்கிய மூவர் கைது

## எல்பிட்டியவில் சம்பவம்

எல்பிட்டிய பகுதியிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தை சேதப்படுத்தி ஊழியர்கள் இருவரை கடுமையாக தாக்கிய மூவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

எல்பிட்டிய அதிவேக நெடுஞ்சாலைக்கு அருகில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நேற்றுமுன்தினம் இரவு இந்தத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு வந்த இளைஞர்கள் மூவர் பெற்றோல் கேட்டு வாக்குவாதப்பட்டுள்ளனர்.

பெற்றோல் இல்லாத காரணத்தை ஊழியர்கள் கூறியும் அதனைச் செவிமடுக்காது தாக்குதல் நடத்தத் தொடங்கியுள்ளனா.

இது தொடர்பில் எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளரால் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அதற்கமைய உடனடியாக செயற்பட்ட பொலிஸார் சந்தேக நபர்கள் மூவரை கைதுசெய்துள்ளதுடன், அவர்கள் பயணித்ததாகக் கூறப்படும் முச்சக்கரவண்டி யொன்றையும் மீட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் எல்பிட்டிய பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சாமர சில்வா தலைமையில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2022, மே 30ஆம் திகதி, திங்கட்கிழமை

# தேசிய சமாதானப் பேரவையின் நியாயமான கோரிக்கை

இலங்கையை தற்போதைய படுமோசமான பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்டெடுக்கவும் நாட்டுமக்கள் மூன்று வேளை சாப்பிடுவதை உறுதிசெய்யவும் பிரதமர் பதவியை பொறுப்பேற்ற ரணில் விக்ரமசிங்கவின் அரசாங்கத்தில் குறைந்தபட்ச எண்ணிக்கையில்தான் அமைச்சர்கள் இருக்கவேண்டும்.

குறைந்தது 15 அமைச்சர்களைக்கொண்ட ஒரு நெருக்கடிகால அமைச்சரவையே பொருத்தமானதாக இருக்கும். ஆனால், அமைச்சர்கள் நியமனம் தொடர்ந்துகொண்டே போகிறது. இவ்வாரமும் மேலும் அமைச்சர்கள் நியமிக்கப்படுவார்கள் என்று செய்திகள் வெளியாகியிருந்தன.

கூரையைப் பிரித்துக்கொண்டு வானளாவ உயர்ந்துகொண்டே போகும் வாழ்க்கைச்செலவினாலும் அத்தியாவசிய உணவுப்பொருட்களுக்கும் எரிபொருட்கள் மற்றும் மருந்துவகைகளுக்கும் நிலவும் கடுமையான தட்டுப்பாட்டினாலும் திணறும் மக்கள் விரக்தியின் விளிம்புக்கு வந்து வீதியில் இறங்கி நிற்கிறார்கள். இரவுபகலாக சுட்டெரிக்கும் வெயிலிலும் கொட்டும் மழையிலும் எரிபொருட்களைப் பெறுவதற்காக கிலோமீற்றர் கணக்காக நீண்ட வரிசைகளில் காத்துநிற்கிறார்கள். மக்களின் இத்தகைய அவலத்துக்கு மத்தியில் அமைச்சர் பதவிகளைப் பெறுவதற்கு முண்டியடிக்கும் அரசியல்வாதிகள் நாட்டின் இன்றைய நிலைமையை புரிந்துகொண்டிருக்கிறார்களா என்பது சந்தேகமாக இருக்கிறது.

மே 13ஆம் திகதி நான்கு அமைச்சர்கள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில் பதவியேற்றார்கள். பிறகு 7 நாட்கள் கழித்து 9 அமைச்சர்களும் அதையடுத்து மூன்று நாட்களுக்குப் பிறகு 8 அமைச்சர்களும் பதவியேற்றார்கள். ஜனாதிபதியையும் பிரதமரையும் சேர்த்து அமைச்சரவை உறுப்பினர்களின் எண்ணிக்கை தற்போது 23 ஆகும். இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கப் போகின்ற அதேவேளை, பல இராஜாங்க அமைச்சர்களும் நியமிக்கப்படவிருக்கிறார்கள். அமைச்சர்களுக்கு சம்பளம் வழங்கப்படப்போவதில்லை என்று பிரதமர் விக்ரமசிங்க ஏற்கனவே அறிவித்திருந்தார். சம்பளம் இல்லாத வேலைக்கா இந்த அரசியல்வாதிகள் ஆசைப்படுகிறார்கள்? இவர்களின் கடந்தகால செயற்பாடுகளை மனதிற்கொண்டு நோக்கும்போது பொருளாதார இடர்பாட்டிலிருந்து நாட்டையும் மக்களையும் மீட்பதற்காக தங்களை இவர்கள் அர்ப்பணிக்க முன்வருகிறார்கள் என்று எவராலும் நம்பமுடியுமா?

ஆனால், சிலர் தேசிய நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்பதே தற்போதைய முதற்கடமை. அதற்காகத்தான் அமைச்சர் பதவிகளை ஏற்றதாக ஊடகங்களுக்கு பேட்டிகளை வழங்குவதையும் காணக்கூடியதாக இருக்கிறது.

மக்களின் அபகீர்த்திக்குள்ளாகியிருக்கும் ஒரு ஜனாதிபதி, நாடாளுமன்றத்தில் தன்னந்தனி உறுப்பினராக இருக்கும் கட்சித்தலைவர் ஒருவரை பிரதமராக நியமித்திருக்கிறார். ஜனாதிபதியின் கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களின் தயவிலேயே அந்த பிரதமர் பதவியில் இருக்கவேண்டிய நிர்ப்பந்தம். ஜனாதிபதியின் கட்சி அவரின் சகோதரர்களில் ஒருவரினாலேயே திரைக்குப்பின்னால் இருந்து இயக்கப்படுகிறது. அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களில் எவரும் புதிய பிரதமரை மானசீகமாக ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்று நம்புவது கஷ்டம். அதனால் மற்றைய கட்சிகளைச் சேர்ந்தவர்களை தங்கள் பக்கத்துக்கு இழுத்து பெரும்பான்மை ஆதரவைப் பெறுவதற்கு ஜனாதிபதியும் பிரதமரும் வியூகங்களை வகுத்துச்செயற்படுகிறார்கள் என்பது தெரிகிறது. அதன் விளைவே இந்த தொடர்ச்சியான அமைச்சர் பதவி நியமனங்கள். துறைமுகத்துக்கு எரிபொருட்களுடன் வருகின்ற கப்பல்களிலிருந்து அவற்றை இறக்குவதற்கு டொலர்களை செலுத்துவதில் அரசாங்கம் பெரும் கஷ்டத்தை எதிர்நோக்கிக்கொண்டிருக்கின்ற ஒரு நேரத்தில் அரசாங்கத்தரப்புக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களை கவர்வதற்கு பெருந்தொகைப் பணம் கொடுக்கப்படுவதாகவும் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன.

இத்தகைய பின்புலத்தில் கலாநிதி ஜெகான் பெரேராவை நிறைவேற்றுப் பணிப்பாளராகக்கொண்ட இலங்கை தேசிய சமாதானப் பேரவை அண்மையில் வெளியிட்ட அறிக்கையில் முன்வைத்திருந்த ஒரு முக்கியமான கோரிக்கை எமது கவனத்தை ஈர்த்திருக்கிறது.

தொடர்கின்ற அமைச்சர்கள் நியமனங்களைச் சுட்டிக்காட்டியிருக்கும் தேசிய சமாதானப் பேரவை, தற்போதைய நாடாளுமன்றத்தில் உறுப்பினர்களின் வகையும் தொகையும் (Composition) நாடு இன்றைய இடர்மிகு நிலையில் வேண்டிநிற்கின்ற பயனுறுதியுடைய நிர்வாகத்தை அமைக்க அனுமதியாது. அதனால் உண்மையான மாற்றத்தைக் கொண்டுவரக்கூடியவர்களை மக்கள் தெரிவுசெய்வதற்கு வசதியாக சாத்தியமானளவு விரைவில் தேர்தல் நடத்தப்படவேண்டும் என்று வலியுறுத்தியிருக்கிறது.

தற்போதைய நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகளின் சார்பில் உறுப்பினர்களாக இருப்பவர்களில் அதிகப்பெரும்பான்மையானவர்கள் மக்களை முன்னென்றும் இல்லாத அளவுக்கு வாட்டிவதைத்துக்கொண்டிருக்கின்ற பிரச்சினைகளின் பாரதூரத்தன்மையை புரிந்து பொறுப்புணர்வுடன் நடந்துகொள்ளக்கூடியவர்களாக இல்லை என்பதையே சமாதானப் பேரவை சுட்டிக்காட்டியிருக்கிறது.

அதனால், புதிய தேர்தல்கள் மூலம் மக்களின் புதிய ஆணையை அதுவும் இலங்கை அரசியல் முன்னென்றும் காணாத நாடளாவிய மக்கள் கிளர்ச்சியின் விளைவாக ஏற்பட்டிருக்கக்கூடிய சிந்தனை மாறங்களின் பின்புலத்தில் பெறக்கூடிய புதிய ஆட்சியாளர்களினாலேயே நாட்டை மீட்டெடுக்க உருப்படியாக எதையும் செய்யக்கூடியதாக இருக்கும் என்பது சமாதானப் பேரவையின் நம்பிக்கையாக இருக்கிறது. இதை நாமும் முழுமையாக ஏற்றுக்கொள்கிறோம்.

நெருக்கடியான கட்டத்தில் சவால்களை எதிர்கொள்வதற்கு துணிச்சலுடன் முன்வந்து பிரதமர் பதவியை பொறுப்பேற்ற நாள்முதல் ரணில் விக்ரமசிங்க முன்னெடுத்துவருகின்ற நடவடிக்கைகள் வரவேற்கத்தக்கன. சர்வதேச சமூகத்தின் நல்லெண்ணத்தைக்கொண்ட அவரின் முயற்சிகளுக்கு உலக நாடுகள் பலவும் குறிப்பாக, மேற்குலக நாடுகள் ஆதரவை வழங்க முன்வந்துள்ளன. அடுத்துவரும் மாதங்கள் மேலும் கஷ்டங்களை மக்கள் அனுபவிக்க வேண்டியிருக்கும் என்பதை தினமும் அறிவிக்க பிரதமர் தவறுவதில்லை. நாட்டு பொருளாதாரத்தின் உண்மையான நிலையை ஒளிவுமறைவின்றி மக்களுக்கு விளங்கவைப்பதற்காகவே அவர் அவ்வாறு அபாயச்சங்கு ஊதுகிறார் என்பதைப் புரிந்துகொள்ளக்கூடியதாக இருக்கிறது. அதேவேளை, தனது முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்காவிட்டால் மக்களின் சீற்றத்துக்குள்ளாகவேண்டிவரும் என்று நாடாளுமன்றத்தில் உள்ளவர்களுக்கு அவர் மறைமுகமாக விடுக்கின்ற எச்சரிக்கையாகவும் இதை கருதலாம்.

இன்றைய சூழ்நிலையில் இலங்கையை அது வீழ்ந்துகிடக்கும் பாதாளத்திலிருந்து மீட்கக்கூடிய அனுபவ முதிர்ச்சிகொண்ட ஒரே அரசியல்வாதி பிரதமர் விக்ரமசிங்கவே என்று வெளிநாட்டுப் பத்திரிகைகளே ஆசிரிய தலையங்கங்களில் சுட்டிக்காட்டுகின்றன. “ரணில் தோற்றால் இலங்கை தோல்வியடைந்ததற்கு சமன்'' என்று சில அரசியல் அவதானிகள் வெளிப்படையாகவே கூறுகிறார்கள்.

ஆனால், அவரின் அமைச்சரவையில் இருப்பவர்களைப் பார்த்தால் அவர்களில் எவரும் புதியவர்களாக இல்லை. இன்றைய பொருளாதார அனர்த்தத்துக்குள் நாட்டையும் மக்களையும் தள்ளிவிட்ட அண்மைக்கால அரசாங்கங்களில் தொடர்ச்சியாக முக்கிய பதவிகளை வகித்தவர்களே அவர்கள். இன்றைய கவலைக்குரிய நிலைக்கு அவர்களும் பொறுப்பு. முன்னர் பதவிகளை வகித்த பலர் இவ்வாரம் மீண்டும் அமைச்சர்களாக நியமிக்கப்படுவதையும் காணப்போகிறோம்.

இவர்களால் நாட்டுமக்கள் கோருகின்ற மாற்றத்தையோ அல்லது பொருளாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வையோ தர இயலாது என்பதே உண்மை. அதனால், பொருளாதார முனையில் மக்களுக்கு நிவாரணம் அளிப்பதற்கு குறுகியகால நடவடிக்கைகளில் கவனம் செலுத்தியிருக்கும் பிரதமர் விக்ரமசிங்க சாத்தியமான விரைவில் புதிய தேர்தல்களை நடத்துவதற்கு வகைசெய்யவேண்டும். இதற்காக அவர் ஜனாதிபதியின் சம்மதத்தையும் பெறக்கூடிய தகுதியைக்கொண்டிருக்கிறார் என்பது எமது அபிப்பிராயம்.

இன்றைய பொருளாதார அனர்த்தத்தின் மத்தியில் நாடு தேர்தல் தாங்கமாட்டாது என்ற கருத்தும் இருக்கிறது. ஆனால், அதற்காக எவ்வளவு காலத்துக்கு இனறைய அரசியல்வாதிகளின் சித்து விளையாட்டுகளை மக்களால் பொறுத்துக்கொள்ளமுடியும்?

# பேச்சாற்றல் எனும் பெரும் கலை!



அகிலப் புகழ்பெற்ற ஆளுமைகள் பலரையும் சுமந்து பிரசவித்த கர்ப்பப்பைகளாகத் திகழ்வன அவர்கள் கற்ற கல்விக்கூடங்கள் என்றால் மிகையில்லை. கல்வி நிறுவனங்களில் கல்வி புகட்டுவதைக் கடந்து அறிவார்ந்த ஆளுமைகளை அடையாளம் காணும் ஆவல் கொண்டவர்கள் ஆசிரியப் பணியில் அமைந்துவிட்டால் அக்கல்விக்கூடம் மட்டுமல்ல, ஒட்டுமொத்த சமூகமும், தேசமும் பலனும், பலமும் பெற்றுவிடும் என்பதில் ஐயமில்லை.

பள்ளிக்கூட இலக்கிய மன்றங்கள் சிறப்பாகச் செயற்பட்டால், மாணவ மனங்களில் மறைந்திருக்கும் இலக்கியத் திறன்கள் உதய கதிராய் ஓங்கி எழுகின்றன. தேர்வுத் தீவிரவாதத்தால் பீடிக்கப்பட்ட, சுரண்டல் பாடசாலைகளில் சிக்கிவிட்டால் சுடர்வீசும் மாணவத் திறன்கள் சுருங்கி, சுண்டி, சூன்யமாகிப் போய்விடுகிற அபாயங்கள் அதிகம் உள்ளன.

தங்கள் மாணவர்களின் தேர்ச்சி வீதத்தை மட்டுமே தமது விளம்பரப் பலகையாக்கிக் கொள்கிற கல்வி நிறுவனங்களில், அசாத்தியத் திறன்கொண்ட அரிய மாணவர்களின் கலை, இலக்கிய முன்னேற்றம் காவுகொடுக்கப்பட்டு வருகிறது. மகாகவி அல்லமா இக்பால், பள்ளிக்கூட வகுப்பிற்குத் தாமதமாக ஒருநாள் வந்துள்ளார். ''இக்பால், ஏன் தாமதம்'' என்று கனிவாக வினவிய ஆசிரியரிடம், ''தாமதமாக வருவதுதானே இக்பால்'' என்று விடை பகிர்ந்துள்ளார் அவர்.

'இக்பால்' என்றால் 'புகழ்' என்று பொருள். ஒருவருக்கான புகழும் அங்கீகாரமும் உரிய காலத்தில் கிடைக்காமல் தாமதமாகக் கிடைக்கின்ற தன்மையைப் பாடசாலை மாணவப் பருவத்தில் தனது பதிலால் உணர்த்திய இக்பாலைத் தழுவிக்கொண்ட அந்த ஆசிரியர், சுடர் போன்ற கவியாற்றல் சூரிய ஒளியாய்ப் பெருகிட வகைசெய்து வளர்த்துள்ளார். அதே ஆசிரியர், ''வந்ததே தாமதம், திமிரான பதிலுமா சொல்கிறாய்'' என்று நரம்பு தெறிக்க, பிரம்பை எடுத்து விளாசி இருந்தால் விசாலத் திறன்கொண்ட இக்பால் விலாசம் தொலைத்திருப்பார் அல்லவா?

திறமைகளைத் தேடித்தேடி வளர்க்கும் ஆசிரியர்களும், அவர்களுக்கு வாய்ப்பையும் ஊக்கத்தையும் வழங்குகிற கல்வி நிறுவனங்களும் தற்காலத்தில் அருகிவருவது ஓர் அபாய எச்சரிக்கையே. மாணவக் கவிகள் பலரை 'மா நவ' கவிகளாய் பரிணமிக்கச் செய்ததில் ஆசிரியர்கள், கல்விக்கூடங்களின் பணி மிக அதிகம். பணம் செய்யும் கூடங்களாய் பள்ளிக்கூடங்களும் காசு பறிக்கும் கடைவீதியாய்க் கல்லூரிகளும் மாறி, கல்வியைக் கல்லா கட்டும் கருவியாக ஆக்கிவிட்டால், அங்கே ஆசிரியர்கள் கனிவை இழந்த கங்காணிகளாய் மாணவர்களிடமும், ஆளுமை துறந்த அடிமைகளாய் நிர்வாகத்திடமும் நிற்கவேண்டிய அவலம் நேர்ந்து விடுவது தவிர்க்க முடியாதது.

இதனால் உள்ளத்தில் ஊறிவரும் கலை இலக்கியத்தின் ஊற்றுக்கண் தூர்ந்து விடுகிறது. இன்றைய முன்னணி அரசியல், சமூகவியல், ஊடகவியல் ஆளுமைகள் பலரும் பேச்சுப் போட்டிகள், தொலைக்காட்சி பேச்சரங்க நிகழ்ச்சிகள் ஆகியவற்றின் ஒளிபட்டு வெளிப்பட்ட வித்தகர்களே.

இன்றைய காலகட்டத்தில் பாடசாலை, கல்லூரிகளில் இலக்கியச் செயற்பாடுகள் சற்று தேக்கமுற்றும், ஊக்கமற்றும் காணப்படுகின்றன என்கிற குற்றச்சாட்டை மறுப்பதற்கில்லை. பாடங்களை மட்டும் பயிலாமல், பாடத்திற்கு அப்பாற்பட்ட கலையை, இலக்கியத்தை, பண்பாட்டுச் செழுமையை அறிந்தும் உணர்ந்தும் கொள்கிற தலைமுறையால்தான் தேசம் புத்தொளி பெறுகிறது.

மாணவ மனங்களில் மகத்தான இலட்சியத்தை விதைக்கும் பணியை இலக்கிய மன்றங்கள் மூலம் இனிதாகச் செய்யமுடியும். நான் பயின்ற திருவாரூர் வ.சோ.ஆ. மேல்நிலைப் பள்ளியின் இலக்கிய மன்ற விழாவில் தவத்திரு குன்றக்குடி அடிகளார் உரையாற்றும்போது, ''ஆடு மாடுகளைக் கால்நடைகள் என்கிறோம். அவை காலால் நடப்பதால் அவ்வாறு அழைக்கிறோம். மனிதர்கள் என்ன தலையாலா நடக்கிறார்கள்? காலால்தானே நடக்கிறார்கள், பிறகு ஏன் மனிதர்களைக் கால்நடைகள் என்று அழைப்பதில்லை? ஏனெனில், மனிதன் காலால் மட்டும் நடப்பவனாய் இருக்கக்கூடாது, அறிவால், பண்பால் நடக்கக்கூடியவனாக இருக்க வேண்டும்'' என்று பேசினார். மண் தரையில் அமர்ந்துகொண்டு ஒன்பதாம் வகுப்பு மாணவனாக அன்று நான் கேட்ட இந்த உரை இன்றும் என் நெஞ்சில் நிற்கிறது.

பேச்சுப் போட்டிகள் 2022 மாணவத் திறன்களின் மறுமலர்ச்சிக்கு வித்திட்டுள்ளன என்றால் மிகையில்லை.

'தம்மின் தம்மக்கள் அறிவுடமை மாநிலத்து மன்னுயிர்க்கு எல்லாம் இனிது' என்ற குறளின் பொருளாக மாணவத் திறன்கள், மேடைகளில் கோலோச்சின. பொங்கி வந்த இந்த புதுமை ஆற்றல்கள் மங்கிவிடாமல், மாபெரும் இலக்கை நோக்கிய பயணமாக மாறவேண்டும். மாணவர்களின் நுண்கலைத் திறன்களை வளர்த்தெடுக்க அரசு மேலும் அக்கறை காட்ட வேண்டும்.

பேச்சுக் கலை என்பது தமிழின் தொன்மையான கலை. பழந்தமிழ் இலக்கியங்களிலிருந்து பேச்சுக் கலையின் நுண்கலைப் பாரம்பரியங்களை அறிய முடிகிறது. ஆட்சியாளர்களுக்கு அறிவுரை கூறவும், பாதிக்கப்பட்டோர்க்கு நீதி கேட்கவும், வீழ்ந்த சமூகத்தில் விழிப்புணர்வை விதைக்கவும் பேச்சுக் கலை பெரிதும் பயன்பட்டு வந்துள்ளது. இயேசுநாதரின் மலைப்பொழிவும், நபிகள் நாயகத்தின் இறுதிப் பேருரையும், பல நூற்றாண்டுகள் கடந்தும் வரலாற்றில் நிலைபெற்று சமுதாயத்தை வழிநடத்துகின்றன.

'நாமார்க்கும் குடியல்லோம்' என்ற நாவுக்கரசரின் முழக்கம், ஒடுக்குமுறைக்கு எதிராக நிற்போரின் உள்ளத்திற்கு உறுதி தருகிறது.

சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை
இகல்வெல்லல் யார்க்கும் அரிது”

என்பது வள்ளுவரின் வாக்கு. சொல்லாற்றல் மிக்கவராகவும் சோர்வு அற்றவராகவும் அஞ்சாநெஞ்சம் கொண்டவராகவும் திகழ்பவரை யாரும் வெல்ல முடியாது என்ற ஒரு குறளே ஓங்கும் குரல்களுக்கு உற்சாகம் புகட்டும் ஊற்றுக்கண்ணாகும்.

'வில்லேர் உழவர் பகைகொளினும் கொள்ளற்கச்
சொல்லேர் உழவர் பகை'

என்றும் வள்ளுவர் எச்சரிக்கிறார். அதாவது, வில்கொண்ட வேந்தனைப் பகைத்தாலும்கூட வெல்லும் சொல்கொண்ட நாவலனைப் பகைத்திடக்கூடாது என்று பாங்குற அறிவுறுத்துகிறது திருக்குறள்.

மாணவ மனங்களில் கனிமங்களாய் மறைந்து கிடக்கும் கலைத்திறன்கள் வெளிப்படுத்தப்படும்போது, சமுதாயம் அறிவின் வெளிச்சம் பெறும்.

ஒளிபடைத்த கண்களோடு
உறுதிகொண்ட நெஞ்சோடு
களிபடைத்த மொழியோடு
கடுமைகொண்ட தோளோடு

முண்டாசுக் கவிகண்ட கனவின் வடிவாக, இளைய தலைமுறை எழுவதற்கு, பேச்சுக் கலை ஒரு பேரியக்கமாய் விரிய வேண்டும்.

கலைகள் என்ற போர்வையில் உள்ள களைகளைக் களைந்து, வீண் அரட்டைக் கச்சேரியால் வீழ்த்தும் சில சமூக ஊடக விலங்குகளிலிருந்து விடுபட்டு இளைய தலைமுறை செழுமைப் பெறுவதற்கும், சிறகு விரிக்கும் அவர்களின் ஆற்றல் சிகரம் அளப்பதற்கும் கல்வி நிலையங்கள் கதவு திறக்க வேண்டும்.

திறன்மிகு கலைகளை எல்லாம் தேர்வு தீவிரவாதத்தால் தீர்த்துக் கட்டிவிட்டு, வெறும் சான்றிதழ்களை மட்டும் வழங்கி, நாட்டின் தலைமுறையை நடைப்பிணங்களாய் ஆக்கினால் அவை கல்விக்கூடம் என்று கருதப்படாது; திறமைகளின் சமாதி என்றே தீர்ப்பிடப்படும்.

ஒளிந்திருக்கும் இலக்கியத் திறன்கள் ஒளிவீசி வெளிவரும் களங்களாக, கலங்கரை விளக்கங்களாக கல்விக்கூடங்கள் பரிணமிக்கட்டும்.

**பேராசிரியர். ஜெ. ஹாஜாகனி**
**நன்றி - தினமணி**

# இன்றைய நாளில்...

- 1381 – இங்கிலாந்தில் விவசாயிகளின் கலகம் ஆரம்பமானது.
- 1539 – தங்கம் கண்டுபிடிக்கும் நோக்கில் எர்னாண்டோ டி சோட்டோ தனது 600 படையினருடன் புளோரிடாவை அடைந்தான்.
- 1602 – முதலாவது டச்சுக் கப்பல் (லா பிரேபிசு) இலங்கையில் தென்பட்டது.
- 1631 – முதலாவது பிரெஞ்சு மொழிப் பத்திரிகை கசெட் டி பிரான்ஸ் வெளிவந்தது.
- 1642 – இங்கிலாந்தின் முதலாம் சார்ள்ஸ் மன்னர் வழங்கியிருந்த அனைத்து விருதுகளும் இந்நாளிலிருந்து செல்லுபடியாகாது என இங்கிலாந்து நாடாளுமன்றம் அறிவித்தது.
- 1815 – இலங்கையிலிருந்து காயப்பட்ட போர்வீரர்களை ஏற்றி வந்த பிரித்தானியக் கிழக்கிந்தியக் கம்பனியின் ஆர்னிஸ்டன் என்ற கப்பல் தென்னாபிரிக்காவுக்கு அருகில் அகுல்யாஸ் முனையில் மூழ்கியதில் அதில் பயணம் செய்த 378 பேரில் 372 பேர் உயிரிழந்தனர்.
- 1913 – லண்டன் உடன்பாடு எட்டப்பட்டு முதலாம் பால்கன் போர் முடிவுக்கு வந்தது. அல்பேனியா தனி நாடாகியது.
- 1958 – இலங்கை இனக்கலவரம், 1958: இலங்கையின் தெற்கே கலவரங்களால் பாதிக்கப்பட்ட தமிழர்கள் அகதிகளாக கொழும்பு றோயல் கல்லூரி, புனித பீட்டர் கல்லூரி ஆகியவற்றில் தங்க வைக்கப்பட்டனர்.
- 1971 – செவ்வாய்க் கோளின் 70 பாகையை படம் பிடிப்பதற்காகவும் அதன் வளிமண்டலத்தை ஆராயவும் என மரைனர் 9 விண்ணுக்கு ஏவப்பட்டது.
- 1974 – எயார்பஸ் பஸ் ஏ300 பயணிகள் ஹெலிகொப்டர் முதலாவது சேவையை ஆரம்பித்தது.
- 1975 – ஐரோப்பிய விண்வெளி நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது.
- 1981 – பங்களாதேஷில் இடம்பெற்ற இராணுவப் புரட்சியின்போது அரச தலைவர் சியாவுர் ரகுமான் இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.
- 1987 – கோவா இந்தியாவின் தனி மாநிலமாகியது.
- 1998 – பாகிஸ்தான் கரான் பாலைவனத்தில் அணுகுண்டு சோதனையை மேற்கொண்டது.
- 2012 – லைபீரியாவின் முன்னாள் அரச தலைவர் சார்ள்ஸ் டெய்லருக்கு சியேரா லியோனியின் உள்நாட்டுப் போரில் நிகழ்த்திய குற்றங்களுக்காக 50 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.
- 2013 – நைஜீரியாவில் ஒருபால் திருமணம் தடை செய்யப்பட்டது.

# நக்கல் நமசிவாயம்

நாளை முதல் குடிக்க மாட்டேன் என்று சொல்லும் குடிகாரன் பேச்சு விடிஞ்சா போச்சு என்ற கதைதான் அரசாங்கத்தின் கதை... நாளை முதல் சிலிண்டர் வரும் எண்டு சொல்லிச் சொல்லியே காலத்தை ஓட்டுறாங்கள்...





# உடப்பு பகுதியில் தீவிரமடையும் கடலரிப்பு

## நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் வேண்டுகோள்

ரஸீன் ரஸ்மின்

புத்தளம் மாவட்டத்தின் கரையோரப் பிரதேசங்களில் ஒன்றான உடப்பு பகுதியில் தீவிரமடைந்துவரும் கடலரிப்பின் காரணமாக அப்பகுதியிலுள்ள மக்கள் மற்றும் மீனவர்கள் தொடர்ந்தும் பாரிய பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வருவதாக விசனம் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு கடலரிப்பின் உக்கிரத்தால் இந்தப் பகுதியிலுள்ள ஒரு வீடு முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளதுடன், இரண்டு வீடுகளும், நான்கு மீன்வாடிகளும் பகுதியளவிலும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.



அத்துடன், கடலரிப்பு காரணமாக உடப்பு பகுதியிலுள்ள கரையோர வீதிகளும் கடுமையாக சேதமடைந்து காணப்படுவதாகவும் மக்கள் குறிப்பிடுகின்றனர்.

மேலும், மீனவர்கள் தங்களின் படகுகளை கரையோரங்களில் நிறுத்திவைக்க முடியாத நிலையில், கடலரிப்பின் அகோரம் காணப்படுவதாகவும் மீனவர்கள் விசனம் தெரிவிக்கின்றனர். உடப்பு கிராமத்தில் வாழும் மக்கள் மீன்பிடித் தொழிலை ஜீவனோபாய தொழிலாக மேற்கொண்டுவரும் நிலையில், இவ்வாறு கடலரிப்பால் மீன்பிடித் தொழிலை மேற்கொள்வதிலும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக மக்கள் கூறுகின்றனர்.

அண்மைக்காலமாக உடப்பு பிரதேசத்தில் கடலரிப்பு மிகவும் தீவிரமடைந்துள்ளதால், அதனைத் தடுக்கும் தற்காலிக நடவடிக்கையாக கரையோரப் பகுதிகளில் மணல் நிரப்பப்பட்ட மூடைகள் அடுக்கிவைக்கப்பட்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது.

அத்துடன், கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம் தற்காலிகமாக பாரிய கருங்கற்களை கொண்டுவந்து அரிப்புக்குள்ளாகும் பகுதிகளில் தடுப்புக்காக போட்டாலும் அது பாதுகாப்பதற்கு போதுமானதாக இல்லை என உடப்பு பிரதேச மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன், பாரிய கருங்கற்களை போட்டாலும் கடலரிப்பின் தீவிரம் இன்னமும் குறையவில்லை எனவும் அவை அதிகரித்துக்கொண்டே செல்வதாகவும் மக்கள் குறிப்பிடுகின்றனர்.

இதேவேளை, குறித்த கடல் அரிப்பு காரணமாக உடப்பு பகுதியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பாலமும் சேதமடைந்துள்ளதாகவும் மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

குறித்த பாலத்தின் மூன்று இடங்களில் வெடிப்பு ஏற்பட்டு சேதமடைந்துள்ளதுடன், பாலத்திற்கு அருகே பாதுகாப்புக்காக வைக்கப் பட்டுள்ள கருங்கற்களும் உடைந்து பெரும் ஆபத்தை ஏற்படுத்தும் நிலையில் உள்ளதாகவும் மக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

புத்தளம் மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக அந்த வெள்ளநீரை கடலுக்குள் அனுப்பும் நோக்கில் உடப்பையும் ஆண்டி முனையையும் இணைக்கும் முகத்துவாரம் பாலத்திற்கு கீழாக வெட்டப்பட்டமையே இந்தப் பகுதி இவ்வாறு கடலரிப்புக்கு உள்ளாகியுள்ளதென மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

எனவே, கடலரிப்பினால் உடப்பு கிராமத்தின் கரையோரப் பகுதிகளிலுள்ள வீடுகள் மற்றும் மீன்வாடிகளை கடல் அலைகள் இரவோடு இரவாக சுருட்டிவிடுமோ என்கின்ற அச்ச நிலையில் இந்தப் பகுதி மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

கடல் அரிப்பு அதிகரித்துவருவதை அதிகாரிகள் கண்டுகொள்ளாமல் அக்கறையின்றி உள்ளதாக குற்றஞ்சாட்டும் மக்கள், இதனால், தங்கள் வாழ்விடத்தையும், தொழில்வாய்ப்புகளையும் இழக்க நேரிடுமோ என்ற அச்சம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

எனவே, உடப்பு கரையோரப் பிரதேசம் முழுமையாக அழிவடையும் முன்னர் அதற்கான பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்யும் முகமாகவும் இப்பகுதி மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும், கடல் அரிப்பைத் தடுக்கவும் கருங்கற்களைக் கொட்டி தடுப்புகளை அமைக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பிரதேச மக்களும், மீனவர்களும் கோரிக்கை விடுக்கின்றனர்.

# குறுகிய கால தெரிவுகள் நிலைமையை மோசமாக்கும்

## மக்கள் விடுதலை முன்னணி சுட்டிக்காட்டு



நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமைக்கு நியாயமான தீர்வு காணப்பட வேண்டும் - என மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

பிரச்சினைக்கு விரைவான தீர்வாக குறுகிய நோக்குடன் தீர்மானங்களை எடுப்பது தவறான தெரிவுகளை மேற்கொண்டு நாட்டின் நிலைமையை மோசமாக்கும் என கட்சியின் செயலாளரான ரில்வின் சில்வா தெரிவித்தார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தில் பதவியை ஏற்று நாட்டை அபிவிருத்திசெய்யுமாறு கட்சியின் ஆதரவாளர்கள் பலர் தன்னிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

எனினும், குறுகிய கால தீர்வுகள் மூலம் பாரிய பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது.

பல தசாப்தங்களில் ஏற்பட்டுள்ள மோசமான பொருளாதார நெருக்கடியிலிருந்து இலங்கை மக்களை யாரும் வந்து காப்பாற்றப்போவதில்லை.

அரசியல்வாதிகளின் பொய்ப் பிரசாரங்களில் சிக்கிக்கொள்ளாமல் பொறுப்புள்ள கட்சிக்கு வாக்களிக்க வேண்டும் என அவர் மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

# 800 ரூபாவுக்கு பெற்றோல் விற்பனைசெய்த பெண் கைது

அலுத்கம கூட்டுறவு எரிபொருள் நிரப்பு நிலையத்தில் வேலைசெய்யும் ஒருவரின் மனைவி 800 ரூபாவுக்கு பெற்றோல் விற்பனை செய்யும்போது கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இவர் பெற்றோல் போத்தல் ஒன்றை 800 ரூபாவுக்கு விற்பனை செய்யும்போது பெற்றோல் கையிருப்புடன் கைதுசெய்யப்பட்டுள்ளார் என பேருவளை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட பெண்ணிடம் விசாரணை நடத்தியபோது, தனது கணவர் கொண்டுவரும் பெற்றோலை தான் விற்பனைசெய்வதாக கூறியுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் பேருவளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி லலித் பத்ம குமார விசாரணைகளை முன்னெடுத்துள்ளார்.

# தமிழக நிவாரணங்களை வைத்து யாரும் அரசியல் செய்யக்கூடாது

## மத்திய மாகாண சபை முன்னாள் உறுப்பினர் இராஜாராம் வலியுறுத்து



(தலவாக்கலை நிருபர்)

இலங்கையில் தற்பொழுது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் மக்களுக்கு தமிழ்நாட்டு மக்களும் தமிழ்நாட்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலினும் மனிதாபிமானத்துடன் இலங்கைக்கு அனுப்பப்பட்டுள்ள நிவாரண உணவுப் பொருட்களை வைத்து எவரும் அரசியல் செய்ய வேண்டாம். நல்லெண்ணத்துடன் வழங்கப்பட்ட நிவாரண உணவுப்பொருட்கள் தேவைப்பட்ட வறிய குடும்பங்களை சென்றடைய வேண்டும் - என மலையக மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளரும் மத்திய மாகாண சபை முன்னாள் உறுப்பினருமான ஆர்.இராஜாராம் தெரிவித்துள்ளார்.

நுவரெலியாவில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தெரிவிக்கையில்,

தமிழ்நாட்டிலிருந்து ஒருதொகை நிவாரணப்பொருட்கள் இலங்கையில் பொருளாதார நெருக்கடியினால் கஷ்டப்படும் மக்களுக்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. இந்த நிவாரணப்பொருட்கள் இந்த நாட்டிற்கு வந்தடைந்த பின்னர் பல்வேறு கருத்துகளும் முரண்பாடுகளும் சமூகவலைத்தளங்களிலும் முகநூல் புத்தகத்திலும் பதிவீடுகள் செய்யப் பட்டுள்ளன. இந்தியாவின் தொப்புள்கொடி உறவு என்று கூறப்படும் எமது மூதாதையர்கள் இலங்கைக்கு வந்து இந்த நாட்டில் சொல்லொண்ணா துயரங்களை அனுபவித்து இன்றும் உழைத்துக் கொடுத்துக் கொண்டிருக்கின்றோம். அத்தோடு நாட்டையும் வளப்படுத்திக்கொண்டிருக்கின்றோம். இந்நாட்டின் பொருளாதார நெருக்கடி காரணமாக இந்திய நாட்டின் தமிழ்நாட்டு மக்கள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் தலைமையின் கீழ் ஒருமித்து ஒருதொகை நிவாரண உணவுப்பொருட்களை இலங்கைக்கு வழங்கியமை எங்களுக்குப் பெருமையாக இருக்கின்றது.

இன்றைய பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டு மிகவும் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் அனைத்து மக்களையும் இந்த நிவாரணப் பொருட்கள் சென்றடைய வேண்டும்.

அதற்கான சரியான நடவடிக்கைகளை இந்த அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும். இலங்கையில் ஒரு வேளையேனும் உணவு உண்ண முடியாமல் இருக்கும் வறுமையான குடும்பங்களுக்கு சென்றடைய வேண்டும் என்பதற்காகவே இங்கு நிவாரண உணவுப் பொருட்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

மாவட்ட செயலாளர் அல்லது பிரதேச செயலாளர் மூலம் கிராம உத்தியோகத்தர்கள் ஊடாக வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மிகவும் வறுமையான குடும்பங்களுக்கு இந்த நிவாரணப் பொருட்கள் சென்றடையவேண்டும் என்பதனை நாம் விரும்புகின்றோம்.

யாழ்ப்பாணம் தொடக்கம் காலி மற்றும் மாத்தறை பிரதேசங்களில் வாழும் மக்களுக்கும் நிவாரணப்பொருட்கள் கிடைக்க வேண்டும். இந்த நிவாரணப்பொருட்கள் மக்களை சென்றடையும் பொழுது அரசியல் பின்னணி அல்லது அரசியல் தலையீடுகள் இல்லாதிருக்க வேண்டும் - என்றார்.

# 76 கஜமுத்துகளுடன் நபர் ஒருவர் கைது

## 65 இலட்சம் ரூபா பெறுமதியானவை என பொலிஸார் தெரிவிப்பு



சட்டவிரோதமான முறையில் 76 கஜமுத்துகளை வைத்திருந்த குற்றச்சாட்டில் சந்தேகநபர் ஒருவரை விசேட அதிரடிப் படையினர் கைதுசெய்துள் ளனர்.

அம்பாறையின் விசேட அதிரடிப்படையினருக்குக் கிடைத்த இரகசிய தகவலுக்கமைய இங்கினியாகல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வைத்து குறித்த நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இதன்போது, சந்தேக நபரிடமிருந்து 76 கஜமுத்துகளை விசேட அதிரடிப்படையினர் கைப்பற்றியுள்ளனர். இதன் பெறுமதி 65 இலட்சம் ரூபாவாகும் என பொலிஸார் தெரிவித்தனர்.

இதுவே, நாட்டில் ஓர் இடத்தில் கைப்பற்றப்பட்ட அதிகளவான கஜமுத்துகள் தொகையென்பது குறிப்பிடத்தக்கது.

பெரும்பாலும், பல யானைகளை கொன்று இவ்வாறு கஜமுத் துகள் பெறப்பட்டிருக்கலாம் எனவும் அஞ்சப்படுகிறது. இச்சம்பவம் தொடர்பிலான விரிவான விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# மகளை துஷ்பிரயோகம் செய்த தந்தை கைது

கெலும் குணதிலக்க

மொனராகலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹுலந்தாவவில் 14 வயதான மகளை பாலியல் துஷ்பிரயோகத்துக்குட்படுத்திய குற்றச்சாட்டில் சிறுமியின் தந்தை நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சிறுமியின் தாயாரால் பொலிஸ் நிலையத்தில் அளிக்கப்பட்ட முறைப்பாட்டுக்கமையவே சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார். இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர் 37 வயதான நபர் என பொலிஸார் தெரிவித்தனர்.

மதுபோதையில் வீட்டுக்கு வந்த சந்தேக நபர் இரவுவேளையில் சிறுமியின் அறைக்குச் சென்று பாலியல் குற்றம் புரிந்துள்ளார். பாதிக்கப்பட்ட சிறுமி மொனராகலை மாவட்ட வைத்தியசாலையில் மருத்துவ பரிசோதனைகளுக்காக பொலிஸாரால் சேர்க்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் மொனராகலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# செய்தித் துளிகள்

பொல்கஹவெல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட யட்டிகல்லோலுவ பகுதியில் அனுமதிப் பத்திரமின்றி 203 லீற்றர் டீசலை தம்வசம் வைத்திருந்த 55 வயதான நபர் ஒருவரை பொலிஸார் நேற்றுமுன்தினம் இரவு கைது செய்துள்ளனர்.

★★★

சுன்னாகத்தில் பொலிஸார் நடத்திய விசேட சுற்றிவளைப்பின்போது ஆயிரத்து 670 லீற்றர் மண்ணெண்ணெய், 250 லீற்றர் டீசல், 306 லீற்றர் பெற்றோலுடன் சந்தேக நபர்கள் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்கள் மயிலங்காடு மற்றும் சுன்னாகம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 49, 51 வயதுடையவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

★★★

கொஸ்கொட, துவேமோதர பகுதி ஆற்றிலிருந்து ஆணொருவரின் சடலம் நேற்று முன்தினம் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது. சுமார் நான்கரை அடி உயரமுடைய 20 முதல் 25 வயதுக்குட்பட்ட இளைஞரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

★★★

கலேவெல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கலகிரியாகமவில் கிணற்றில் விழுந்து பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார். கலகிரியாகமவைச் சேர்ந்த 56 வயதுடைய பெண்ணே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

★★★

கொஸ்கொட, பியகம ரயில் நிலையத்துக்கருகில் மருதானையிலிருந்து பெலியத்த நோக்கிப் பயணித்த ரயிலில் மோதுண்டு 06 வயது சிறுமியொருவர் நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார்.

★★★

மொனராகலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கும்புக்கணவில் ஏற்பட்ட காட்டுத் தீயினால் சுமார் 10 ஏக்கர் நிலப்பரப்பு எரிந்து சாம்பராகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

★★★

சிறுபோகத்துக்குத் தேவையான உரவகைகளை பெற்றுக்கொடுக்க முடியாமை காரணமாக நூற்றுக்கு 50 சதவீதமாக விளைச்சல் குறைவடையலாம் என விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

★★★

நாட்டில் ஏற்பட்டுள்ள டொலர் நெருக்கடி காரணமாக தங்கத்தின் விலை எதிர்வரும் வாரங்களில் மேலும் அதிகரிக்கும் என வர்த்தகர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

★★★

படல்கும்புர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புஸ்ஸல்லேவவில் வீடொன்றை உடைத்து 4 இலட்சத்து 30 ஆயிரம் பெறுமதியான தங்க நகைகள், மாணிக்கக் கற்கள் ஆகியவை நேற்றுமுன்தினம் இரவு கொள்ளையிடப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

★★★

கொஸ்கொடையில் திருடன் என பொதுமக்களால் துரத்திவரப்பட்ட நபர் ஒருவர் ஆற்றில் பாய்ந்து தற்கொலை செய்துகொண்டுள்ளார். இச்சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# இலங்கை மாணவர்களுக்கு எகிப்தில் கல்வி பயிலும் வசதிகளை மேம்படுத்த நடவடிக்கை

## அந்நாட்டு உயர்ஸ்தானிகர் தெரிவிப்பு





இக்பால் அலி

இலங்கைக்கான எகிப்பு நாட்டு உயர்ஸ்தானிகர் மெகத் முஸ்லிஹ் - கண்டி மாவட்ட பள்ளிவாசல்களின் சம்மேளனத்திற்கும் இடையில் விசேட சந்திப்பொன்று கண்டி கட்டுகலை ஜும்ஆப் பள்ளிவாசலில் அமைந்துள்ள சமூக நல்லிணக்க மையத்தில் நடைபெற்றது.

கண்டி மாவட்ட பள்ளிவாசல்கள் சம்மேளனத்தின் தலைவர் கே.ஆர்.ஏ.சித்தீக் மற்றும் அதன் முக்கிய உறுப்பினர்கள், கண்டி ஓராபி பாஷா நிலையத்தின் பணிப்பாளர் எஸ்.சலீம்டீன், கண்டி மாவட்ட ஜம்மிய்யதுல் உலமா சபையின் தலைவர் மௌலவி எச்.உமர்தீன் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

எகிப்து நாட்டுப் பல்கலைக்கழகங்களில் இலங்கை மாணவர்களுக்கு மேலும் புலமைப் பரிசில் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என இதன்போது கண்டி மாவட்ட பள்ளிவாசல்கள் சம்மேளனம், தூதுவரிடம் கோரிக்கை விடுத்தது. அத்துடன், நாம் எல்லோரும் மனிதர்கள் என்ற அடிப்படையில் பல்லின மக்கள் மத்தியில் நேசமாகவும் அன்பாகவும் பரஸ்பரத்தோடும் பழக வேண்டும் எனவும் கலந்துரையாடப்பட்டது.



# தமிழக அரசின் நிவாரணப் பொருட்கள் நுவரெலியாவுக்கு கொண்டுவரப்பட்டன

## ஒரு இலட்சத்து 71 ஆயிரத்து 283 குடும்பங்களுக்கு பகிர்ந்தளிக்க தீர்மானம்





(பி.கேதீஷ், செ.திவாகரன், மனுர சுதத்செல்லஹேவா, செ.தி.பெருமாள்)

தமிழ்நாட்டிலிருந்து இலங்கைக்கு பெறப்பட்ட மனிதாபிமான நிவாரண உணவுப் பொதிகள் நுவரெலியா மாவட்ட மக்களுக்கு வழங்குவதற்காக நேற்று முன்தினம் (28) நுவரெலியா, நானுஓயா புகையிரத நிலையத்தை வந்தடைந்தது. இந்நிவாரணப் பொதிகளை நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலபட பொறுப்பேற்றுக்கொண்டார்.

இதன்போது நுவரெலியா மாவட்ட அபிவிருத்தி இணைப்புக்குழு இணைத் தலைவரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தேசிய ஆலோசகரும் முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினருமான ஏ.பி.சக்திவேல், நுவரெலியா பிரதேச சபை தலைவர் வேலு யோகராஜ், பிரதேச செயலாளர் விதுர சம்பத் உட்பட அரச அதிகாரிகளும் பிரதேச மக்கள் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

தமிழ்நாடு அரசாங்கத்தினால் இலங்கைக்கு அண்மையில் வழங்கப்பட்ட மனிதாபிமான உதவிகள் வழங்கும் திட்டத்தின் கீழ் நுவரெலியா மாவட்டத்திலுள்ள குறைந்த வருமானம் பெறுவோர் மற்றும் பெருந்தோட்ட மக்களுக்கான நிவாரணப் பொதிகள் வழங்கும் நிகழ்வு சனிக்கிழமை நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலபட தலைமையில் இடம்பெற்றது.

புகையிரதத்தில் கொண்டுவரப்பட்ட மனிதாபிமான உதவிகளின் முதல் தொகுதி நானுஓயா புகையிரத நிலையத்தில் மாவட்ட செயலாளரினால் பெற்றுக்கொள்ளப்பட்டது. நுவரெலியா பிரதேச செயலாளர் ஊடாக சம்பந்தப்பட்ட தோட்டக் கம்பனிகளுக்கு மாவட்ட செயலாளரினால் உரிய உதவிகள் வழங்கப்பட்டன.

நுவரெலியா மாவட்டத்திற்கு இந்திய உதவியின்கீழ் 1,750 மெற்றிக் தொன் அரிசியும் 21 மெற்றிக் தொன் பால்மாவும் வழங்கப்படவுள்ளதுடன், நுவரெலியா, கொத்மலை, வலப்பனை, ஹங்குராங்கெத்த மற்றும் அம்பகமுவ பிரதேச செயலகங்களுக்குட்பட்ட பிரதேச செயலகங்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் விநியோகிக்கப்படும்.

குறைந்த வருமானம் பெறும் ஒவ்வொரு குடும்பத்திற்கும் தலா 10 கிலோ அரிசி வழங்கப்படும். இதன் கீழ் நுவரெலியா பிரதேச செயலகத்தில் 60 ஆயிரத்து 314 குடும்பங்களுக்கும், கொத்மலை பிரதேச செயலகத்தில் 34 ஆயிரத்து 12 குடும்பங் களுக்கும், வலப்பனை பிரதேச செயலகத்தில் 36 ஆயிரத்து 502 குடும்பங்க ளுக்கும், ஹங்குரன்கெத்த பிரதேச செயலகத்தில் 32 ஆயிரத்து 305 குடும்பங்களுக்கும், அம்பகமுவ பிரதேச செயலகத்தில் 8 ஆயிரத்து 150 குடும்பங்களுக்கும் பகிர்ந்தளிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நுவரெலியா மாவட்டத்திலுள்ள ஐந்து பிரதேச செயலகங்களுக்கும் தலா 1 கிலோ வீதம் 4 ஆயிரம் கிலோ பால்மா பொதிகள் விநியோகிக்கப்படவுள்ளதுடன், தெரிவு செய்யப்பட்ட தாய்மார்கள், கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளைக்கொண்ட குடும்பங்களுக்கு இந்த பால்மா பொதிகள் விநியோகிக்க திட்டமிடப்பட்டுள்ளன.

# எரிவாயு சிலிண்டர்களை விநியோகிக்க ஹட்டனில் புதிய திட்டம் அறிமுகம்



ஹட்டன் நகருக்கு லிட்ரோ மற்றும் லாப்ஸ் ஆகிய நிறுவனங்களால் விநியோகிக்கப்படும் மட்டுப்படுத்தப்பட்ட சமையல் எரிவாயு சிலிண்டர்களை நியாயமான முறையில் நுகர்வோருக்கும் ஹோட்டல் உரிமையாளர்களுக்கும் விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு, ஹட்டன் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி விஜித அல்விஸ் விற்பனை முகவர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஹட்டன் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி விஜித அல்விஸ் மற்றும் ஹட்டன் நகர சமையல் எரிவாயு விற்பனை முகவர்களுக்கும் இடையில் நேற்று முன்தினம் (28) நடைபெற்ற கலந்துரையாடலிலேயே அவர் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

ஹட்டன் நகரில் சில ஹோட்டல்களின் உரிமையாளர்கள், தரகர்களைப் பயன்படுத்தி சிலிண்டர்களை சேகரித்து, பின்னர் அதனை அதிக விலைக்கு விற்பனை செய்வதாகவும் இதனால் சாதாரண நுகர்வோர் சிலிண்டர்களைப் பெற்றுக்கொள்வதில் சிரமத்தை எதிர்நோக்குவதாகவும் தெரிவித்தே குறித்த கலந்துரையாடல் முன்னெடுக்கப்பட்டது.

எனவே, ஹட்டன் நகரில் முகவர் நிலையமொன்றின் ஊடாக மாத்திரம் உரிமையாளர்களுக்கு எரிவாயு சிலிண்டரை விநியோகிக்கவும் ஏனைய விற்பனை முகவர் நிலையங்கள் ஊடாக கிராம உத்தியோகத்தரால் உறுதிப்படுத்தப்பட்ட நுகர்வோருக்கு மாதத்துக்கு ஒரு சிலிண்டரை விநியோகிக்கும் திட்டமொன்றை கொண்டுவருமாறு பொலிஸ் அதிகாரியால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

குறித்த கோரிக்கைக்கு சமையல் எரிவாயு விற்பனை முகவர்கள் இணக்கம் தெரிவித்துள்ளதுடன், விநியோக நடவடிக்கையின்போது, பொலிஸாரின் ஒத்துழைப்பைப் பெறவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்தக் கலந்துரையாடலையடுத்து, ஹட்டன் நகரின் நடைபாதைகளில் ஒன்றன் பின் ஒன்றாக கட்டி வைக்கப்பட்டிருந்த வெற்று சிலிண்டர்களை உரிமையாளர்கள் எடுத்துச் சென்றுள்ளனர்.

மலையக செய்திகள்

thamilanmalayagam@gmail.com

# அதிக விலைக்கு பெற்றோல் விற்பனை செய்தவர் கைது



மடுல்சீமை - பிட்டமாறுவை பகுதியில் வியாபார நிலையம் ஒன்றில் அதிக விலைக்கு பெற்றோல் விற்பனை செய்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். இது தொடர்பில் மடுல்சீமை பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலையடுத்து உடன் விரைந்து சென்ற பொலிஸார் சுற்றிவளைப்பை மேற்கொண்டனர்.

இதன்போது, குறித்த வியாபார நிலையத்தில் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த 20 லீற்றர் பெற்றோல் கொள்கலன்கள் 12 மீட்கப்பட்டதோடு, மொத்தமாக 240 லீற்றர் பெற்றோலை பொலிஸார் கைப்பற்றினர். குறித்த சந்தேக நபரை அன்றைய தினம் பதுளை நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக மடுல்சீமை பொலிஸார் தெரிவித்தனர்.

# பலாங்கொடையில் கடும் மழை காரணமாக பலா மரங்கள் வீழ்ந்து வீடுகளுக்கு சேதம்



(பலாங்கொடை நிருபர்)

நாடுபூராகவும் பெய்துவரும் அடைமழை காரணமாக பொதுமக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர். அந்தவகையில், இரத்தினபுரி, பலாங்கொடை பகுதிகளில் நேற்று முன்தினம் (28) பெய்த கடும் மழை மற்றும் காற்றின் வேகம் காரணமாக பல பகுதிகளில் வீடுகளின் மீது மரங்கள் உடைந்து வீழ்ந்துள்ளன.



பலாங்கொடை வேலெக்கும்புர பகுதியில் தோட்ட வீடொன்றின் மீது பாரிய பலா மரம் ஒன்று முறிந்து வீழ்ந்ததில் அந்த வீடு பகுதியளவில் சேதமாகியது. தெய்வாதீனமாக வீட்டில் இருந்தவர்களுக்கு பாதிப்புகள் ஏதும் ஏற்படவில்லை.

பலாங்கொடை வெள்ளவல பகுதியிலும் தோட்டக் குடியிருப்பு மீது பாரிய பலா மரம் ஒன்றின் கிளை உடைந்து வீழ்ந்துள்ளது. அவ்வேளையில் குறித்த வீட்டில் இரண்டு பிள்ளைகள் இருந்துள்ளதுடன், அவர்கள் அதிர்ஷ்டவசமாக உயிர்த் தப்பியுள்ளனர். குறித்த வீடும் பகுதியளவில் சேதமாகியதுடன், எவருக்கும் பெரிதாக பாதிப்புகள் ஏதும் ஏற்படவில்லை.

வீட்டு உரிமையாளர் தோட்ட நிர்வாகத்திற்கு குறித்த சம்பவம் தொடர்பில் தெரிவித்தபோதிலும் அவர்கள் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதனால் தோட்ட நிர்வாகத்திற்கு எதிராக வீட்டு உரிமையாளர் வெள்ளவல பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

வெள்ளவல தோட்டத்தில் மாத்திரம் தோட்டக் குடியிருப்புகள் அருகில் ஆபத்தை ஏற்படுத்தும் சுமார் 150 பாரிய மரங்கள் உள்ளதாகவும் அதனை விரைவில் அகற்றித் தருமாறும் அப்பகுதி மக்கள் உரிய அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுக்கின்றனர். அவ்வாறு செய்யாவிட்டால் மழைக் காலங்களில் குறித்த மரங்கள் ஆபத்தை ஏற்படுத்தும் எனவும் அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

# பலாங்கொடை மியனவல பகுதியில் காட்டு யானைகளால் தொல்லை

## மின்சாரவேலி அமைத்துத் தருமாறும் அப்பகுதி மக்கள் கோரிக்கை





(பலாங்கொடை நிருபர்)

பலாங்கொடை இம்புள்பே பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட மியனவல பகுதிக்கு நாளாந்தம் இரவுவேளைகளில் வரும் காட்டு யானைகள் அப்பகுதியிலுள்ள வயல் நிலங்களை சேதப்படுத்திச் செல்வதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றார்கள்.

இதனால் தமது வாழ்வாதார ஜீவனோபாயம் பாதிக்கப்படுவதாகவும் அவர்கள் மேலும் தெரிவிக்கின்றனர்.

இம்புள்பே பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட புதுன்வெல, நெல்லிவல, மலப்பே, மியனவல, வெரகொட, ஊவ கொஸ்கம, இம்பிலியவத்த, பல்லேவெல போன்ற பகுதிகளுக்கு நாளாந்தம் இரவுவேளைகளில் காட்டு யானைகள் வருகின்றன.

அவ்வாறு இரவுவேளைகளில் வரும் காட்டு யானைகள் பயன் தரும் பல மரங்களையும் வயல் காணிகளையும் சேதப்படுத்திச் செல்கின்றன. கடந்த 28ஆம் திகதி இரவு மியனவல பகுதிக்கு காட்டு யானைகள் வந்துள்ளன. அவ்வாறு வந்த காட்டு யானைகள் அப்பகுதியிலுள்ள வயல் நிலங்களை சேதப்படுத்திச் சென்றுள்ளன.

அப்பகுதியிலுள்ள விவசாயிகள் தமது வயல் நிலங்களை பாதுகாத்துக்கொள்வதற்காக இரவுவேளையில் வயலுக்குச் சென்று கூடாரம் அமைத்துக்கொண்டு காவல் காத்தும் வருகின்றார்கள். அவ்வாறு காவல் காத்தும் தமது விவசாய நிலங்களை பாதுகாத்துக்கொள்ள முடியாமல் போய்விடுவதால் சிலர் விவசாயத்தை கைவிட்டுள்ளார்கள் என்றும் தெரிவித்தனர்.

காட்டு யானைகள் ஊருக்குள்ளேயே இருக்கின்றது. மின்சார வேலி ஊருக்கு வெளியில் இருக்கின்றன. அதனால்தான் காட்டு யானைகள் தினமும் எமது விவசாய நிலங்களை சேதப்படுத்துகின்றன.

நாம் பல தடவைகள் உரிய அதிகாரிகளுக்கு தெரிவித்தோம். கடந்த சில மாதங்களுக்கு முன் அதிகாரிகள் சிலர் வந்து யானைகளை விரட்டும் நடவடிக்கையில் ஈடுபட்டார்கள். ஆனால், அதனால் எந்தப் பயனுமில்லை. அன்றிரவே மறுபடியும் காட்டு யானைகள் ஊருக்குள் வந்து விவசாய நிலங்களை சேதப்படுத்தின. உரிய அதிகாரிகளே எம்மைப் பற்றி கொஞ்சம் தேடிப் பாருங்கள். எமக்கு விவசாயத்தை விட்டால் வேறு தொழில் இல்லை.

காட்டு யானைகள் இவ்வாறு தினமும் எமது விவசாய நிலங்களை சேதப்படுத்தினால் நாங்கள் உணவுக்கு என்ன செய்வது? நாம் மீண்டும் ஒருமுறை உங்களிடம் கேட்கின்றோம். இந்த காட்டு யானைகளை ஊரிலிருந்து வெளியில் விரட்டி மின்சார வேலியை அமைத்துத் தாருங்கள் என்று அப்பகுதி விவசாயி ஒருவர் கேட்டுக்கொண்டார்.

# இலங்கை அரசியலில் மாற்றங்கள் ஏற்படும் சாத்தியங்கள் இல்லை

## திஸ்ஸ அத்தநாயக்க எம்.பி.



(கண்டி நிருபர்)

இலங்கை அரசியல் புலத்தில் இதுவரை எந்தவித மாற்றமும் ஏற்படவில்லை, தொடர்ந்தும் மாற்றங்கள் ஏற்படும் சாத்தியங்கள் இல்லை - என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

மேலும், கடந்த 9ஆம் திகதி நடந்த சம்பவங்களையடுத்து அரசியலில் புதுவிதமான மாற்றங்களை மக்கள் எதிர்பார்த்தனர். ஆனால், நடந்த சம்பவங்களைத் தொடர்ந்து புதிய போத்தலில் பழைய மதுவை ஊற்றிய கதைதான் நடந்து வருகிறது.

கண்டியில் நேற்று(29) இடம்பெற்ற வைபவம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நிதி அமைச்சை பிரதமர் பொறுப்பேற்ற போதும் ஏனைய அமைச்சர்கள் ஏற்கனவே இருந்த அமைச்சர்கள்தான் தொடர்ந்தும் உள்ளனர். அதே அமைச்சர்களும் அதிகாரிகளும் எதுவித மாற்றத்தையும் ஏற்படுத்தப்போவதில்லை. ஒரு ட்ரில்லியன் பணம் புதிதாக அச்சிடவுள்ளதாக நிதியமைச்சர் முதலாவதாக அறிவித்துள்ளார். இது நல்ல சகுனம் அல்ல. மேலும் மேலும் பணவீக்கம் ஏற்பட்டு மக்கள் பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கும் ஒரு நிலையேயாகும்.

புதிதாக பணம் அச்சிட்டு அரசாங்கத்தை நடத்துவதென்பது எவராலும் செய்ய முடிந்த காரியமாகும். அதற்கு ஆட்சியோ நாடாளுமன்றமோ அமைச்சுகளோ தேவையில்லை. இன்னும் பழைய ஆட்சியாளர்களை வலுப்படுத்தும் நடவடிக்கைகளே நடக்கின்றன. நாடும் நாமும் எதிர்பார்த்தது அரசியலமைப்பில் 19 பிளஸ் திருத்தத்தையாகும். அதாவது 19ஆவது திருத்தத்தை விடவும் சக்திமிக்க ஒன்றை எதிர்பார்த்தோம். ஆனால், உத்தேச 20ஆவது திருத்தம் அப்படி எதையும் திருப்திப்படுத்துவதாக இல்லை.

நிறைவேற்று அதிகாரத்தை நீக்குவதை எதிர்பார்த்தனர். அது நடப்பதாக இல்லை. 21ஆவது திருத்தத்தில் நல்ல அம்சங்கள் இருப்பின் நாம் அதை ஆதரிப்பதில் பிரச்சினை இல்லை. ஐ.ம.ச நாடாளுமன்ற உறுப்பினர்களான ஹரீன் பெர்னாண்டோ மற்றும் மனுஷ நாணயக்கார முதலானோர் மீதான குற்றச்சாட்டுகளுக்கு தக்க நியாயம் தெரிவிக்காதபட்சத்தில் அவர்கள் கட்சியால் ஒழுக்காற்று விசாரணைக்கு உட்படுத்தப்படுவர் - என்றார்.

# இலங்கையில் புகைத்தல் பாவனையால் தினமும் 55 பேர் மரணமடைகின்றனர்

## மதுசாரம் – போதைப்பொருள் தகவல் நிலையம் தெரிவிப்பு

(யாழ். நிருபர்)

இலங்கையில் புகைத்தல் பாவனையின் காரணமாக தினமும் சராசரியாக 55 பேர் அகால மரணத்தைத் தழுவுகின்றனர். அதேவேளை, வருடத்திற்கு சராசரியாக 20,000 இலங்கையர்கள் மரணிக்கின்றனர் என மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையம் தெரிவித்துள்ளது.

மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையத்தின் விசேட ஊடக சந்திப்பு யாழ். ஊடக அமையத்தில் கடந்த வியாழக்கிழமை (26) இடம்பெற்றபோதே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டது. மேலும் தெரிவிக்கையில்,

உலக சுகாதார ஸ்தாபனத்தால் ஒவ்வொரு வருடமும் மே மாதம் 31ஆம் திகதி சர்வதேச புகைத்தல் எதிர்ப்புத் தினமாக பிரகடனப்படுத்தப்பட்டிருப்பதுடன், விழிப்புணர்வு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அந்தவகையில், 2022ஆம் ஆண்டின் உலக புகையிலை எதிர்ப்புத் தினம் "சுற்றுச்சூழலைப் பாதுகாத்தல்" என்ற கருப்பொருளில் இடம்பெறவுள்ளது.

புகைப்பொருள் பாவனையானது சூழலை மாசடையச்செய்யும் பிரதான காரணிகளில் ஒன்றாகும். குறிப்பாக, சிகரெட் தயாரிப்பதற்கு உலகளாவிய ரீதியில் சுமார் 600 பில்லியன் மரங்கள் வருடாந்தம் வெட்டப்படுகின்றன. சுமார் 84 பில்லியன் தொன் காபன் டயொக்சைட் துணிக்கைகள் சூழலில் சேர்வதனால் புவியின் வெப்பநிலை அதிகரிக்கப்படுகின்றது. மேலும் வருடாந்தம் சிகரெட் தயாரிக்க சுமார் 22,000 பில்லியன் லீற்றர் தண்ணீர் பயன்படுத்தப்படுகிறது. புகையிலை உற்பத்தியினால் 2 மில்லியன் தொன் கழிவுகள் தேங்குகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

சிகரெட் உற்பத்தி செய்வதற்கு பயன்படுத்தப்படும் பிரதான மூலப்பொருளான புகையிலை பயிர்ச்செய்கையானது, சூழலிற்கு பாரியளவில் தீங்கு விளைவிக்கின்றது. அதாவது, புகையிலை உற்பத்திக்கு அதிகமான இரசாயனங்கள் பாவிக்கப்படுகின்றன. புகையிலை உற்பத்தி செய்யப்படும் மண் வளமற்றுப்போவதுடன் அரிய வகை உயிரினங்கள் அம்மண்ணில் வாழ்வதும் குறைவடையும். இதனால் இலங்கையில் அதிகமான நிலங்கள் தரிசு நிலங்களாக மாறியிருக்கின்றன.

எமது நாட்டில் புகைத்தல் பாவனையின் காரணமாக வருடத்திற்கு சராசரியாக 20,000 இலங்கையர்கள் மரணிக்கின்றனர். புகையிலை நிறுவனத்தின் வாடிக்கையாளர்கள் தினமும் இறப்பதால் அவ்வெற்றிடத்தை பூரணப்படுத்துவதற்காக அந்நிறுவனம் இளைஞர்களையும் சிறுவர்களையும் பிரதானமான இலக்காகக் கொண்டுள்ளது.

எமது நாடு தற்போது பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியிருப்பதோடு, அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்துகொள்வதற்குத் தேவையான டொலர்கள் பற்றாக்குறை காணப்படும் இத்தருணத்திலும், வீணாக சிகரெட்டுக்கு செலவழிக்கப்படுவதால் எஞ்சியிருக்கின்ற டொலர்களையும் பிரித்தானியா, அமெரிக்கா ஆகிய நாடுகள் சுரண்டியெடுக்கின்றன. மேலும் சிகரெட் நிறுவனத்திடம் வரி அறவிடப்பட்டாலும் அத்தொகையையும் விட பாரிய தொகையொன்று புகைத்தலினால் ஏற்படும் பாதிப்புகளுக்கு செலவிடப்படுகிறது.

அனைத்து அத்தியாவசியமான பொருட்களின் விலைகளும் சடுதியாக உயர்வடைந்தபோதிலும் சிகரெட்டிற்கான விலை மிகவும் குறைவான சதவீதத்திலேயே அதிகரிக்கப்பட்டிருக்கின்றது. அதாவது தற்போதைய பணவீக்கத்திற்கு ஏற்ப சிகரெட் விலை அதிகரிக்கப்படவில்லை என்பதுடன், அதிகரிக்கப்பட்ட விலையின் அளவானது சிகரெட் உற்பத்தி நிறுவனத்திற்கு இலாபம் பயக்கும் விதமாகவே அமைந்துள்ளது. இதன் பின்புலத்தில் சிகரெட் உற்பத்தி நிறுவனத்தின் தலையீடு இருப்பதாகவே துறை சார்ந்த நிபுணர்களினால் சந்தேகிக்கப்படுகிறது. இது சிந்திக்க வேண்டிய ஒன்றாகும்.




சிகரெட் பாவனையினால் ஏற்படும் சூழல் பாதிப்புகளை கட்டுப்படுத்துவதற்கும் மக்களுக்கு ஏற்பட்டுள்ள பொருளாதார, சுகாதார, சமூக பிரச்சினைகளை குறைப்பதற்கும் மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையத்தினால் சிகரெட் புகைப்பதனால் ஏற்படும் சூழல் மாசடைவுகளை கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்தல், பொருளாதாரப் பிரச்சினை அதிகரித்திருக்கும் இக்காலப் பகுதியில் வீணாக சிகரெட்டிற்கு செலவாகும் பணத்தை சேமித்து பொருளாதார நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்க பாவனையாளர்களை ஊக்கப்படுத்தல், எமது நாட்டிலிருந்து பிரித்தானியா, அமெரிக்கா சிகரெட் உற்பத்தி நிறுவனத்தினால் சுரண்டியெடுக்கப்படும் டொலர்களை சிகரெட் புகைப்பதை நிறுத்துவதன் மூலம் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுத்தல், புகைத்தல் பாவனையினால் ஏற்படுகின்ற பிரச்சினைகளின் கனதியை கருத்திற்கொண்டு புகைத்தல் எதிர்ப்புத் தினத்தை ஒரு சந்தர்ப்பமாக பயன்படுத்தி புகைத்தல் பாவனையை நிறுத்துவதற்கு ஊக்கமளித்தல், அரசாங்கத்திற்கு இலாபமீட்டும் வகையிலான தற்போதைய பணவீக்கத்திற்கு அமைய, சிகரெட் மீதான வரி அறவீட்டு முறைமை ஒன்றை உருவாக்குவதற்கு அரசாங்கத்திற்கு அழுத்தங்களை கொடுத்து, அரசாங்கத்திற்கு அதிகளவு வருவாயை ஈட்டிக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல், சிகரெட் உற்பத்தி நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படும் ஊக்குவிப்பு நடவடிக்கைகளை வெளிக்கொணர்ந்து அவற்றிலிருந்து இளைஞர்களையும் சிறுவர்களையும் பாதுகாப்பதற்கு முயற்சித்தல் போன்ற பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டன.

இவ்வூடக சந்திப்பில் மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் புபுது சுமணசேகர உட்பட அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

# நெல்லியடி வீடொன்றில் திருட்டு: பெண் உள்ளிட்ட இருவர் கைது



(யாழ். நிருபர்)

நெல்லியடியில் வீடொன்றை உடைத்து நகைகள் மற்றும் அலைபேசி உள்ளிட்ட பெறுமதியான பொருட்களைத் திருடிய குற்றச்சாட்டில் பெண் உள்ளிட்ட இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இரண்டு மாதங்களுக்கு முன்னர் நெல்லியடி நகரப் பகுதியிலுள்ள வீடொன்றை பட்டப்பகலில் உடைத்து நகைகள் மற்றும் அலைபேசி உள்ளிட்ட பெறுமதியான பொருட்கள் திருட்டுப் போயிருந்தன.

சம்பவம் தொடர்பில் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் காங்கேசன்துறை பிராந்தியத்துக்குப் பொறுப்பான மூத்த பொலிஸ் அத்தியட்சகரின் கீழான மாவட்ட குற்றத்தடுப்புப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

இந்நிலையில், 28 வயதுடைய ஆண் ஒருவரும் 20 வயதுடைய பெண் ஒருவரும் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.

சந்தேக நபர்களிடமிருந்து ஐ போன் ஒன்றும் ஐ பாட் ஒன்றும் 6 கிராம் எடையுடைய தோடுகளும் மற்றும் 35 ஆயிரம் ரூபா பணமும் கைப்பற்றப்பட்டன.

சந்தேக நபர்கள் இருவரும் நீதிமன்ற நடவடிக்கைகளுக்காக நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முற்படுத்தப்பட்டுள்ளனர்.

# வவுனியாவில் தலை சிதறிய நிலையில் வெளிநாட்டவரின் சடலம் மீட்பு

## பொலிஸார் தீவிர விசாரணை

(வவுனியா நிருபர்)

வவுனியா பஜார் வீதியிலுள்ள வர்த்தக நிலையத்திற்கு முன்பாக கடந்த வெள்ளிக்கிழமை (27) 11.30மணியளவில் தலை சிதறிய நிலையில் வெளிநாட்டவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருகையில்,

வவுனியா பஜார் வீதியிலுள்ள வர்த்தக நிலையத்தின் முன்னால் தலை சிதறிய நிலையில் ஒருவர் காணப்பட்டபோது உடனடியாக மக்கள் செயற்பட்டு வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்த்தனர்.

எனினும், அவர் முன்னரே உயிரிழந்துள்ளதாக வைத்தியர் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் முன்னெடுத்த நிலையில் குறித்த நபர் வர்த்தக நிலையத்தின் மேற்பகுதியில் விடுதி அமைந்துள்ள மூன்றாம் மாடி கட்டிடத்திலிருந்து கீழே விழுந்து மரணித்துள்ளமை விசாரணைகளின் ஆரம்ப கட்டத்தில் தெரியவந்துள்ளது.

குறித்த நபரின் மரணம் கொலையா அல்லது தற்கொலையா என்ற கோணத்தில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இந்தியாவைச் சேர்ந்த 36 வயதுடைய சன்டிப் மலிக் என்ற நபரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.



சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், தடயவியல் பொலிஸாரின் உதவியுடன் மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com

# நகைகளை திருடிய 21வயது இளம் யுவதி வவுனியாவில் கைது

(வவுனியா நிருபர்)

வவுனியாவில் பெண் ஒருவருக்கு மயக்க மருந்து கொடுத்து நகைகளை திருடிய சம்பவம் தொடர்பில் நேற்று முன்தினம் (28) 21 வயது பெண் ஒருவரை கைதுசெய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வவுனியா, பண்டாரிக்குளம் நாவலர் வீதியில் வசிக்கும் முதிய பெண் ஒருவர் சுகயீனம் காரணமாக, கடந்த புதன்கிழமை மருந்து எடுப்பதற்காக வவுனியா வைத்தியசாலைக்கு சென்றுள்ளார்.

மருந்து எடுத்துவிட்டு குறித்த முதிய பெண் வைத்தியசாலையில் சிறிது இளைப்பாறி இருந்தபோது அங்கு வந்த யுவதி ஒருவர் குறித்த முதிய பெண்ணுடன் நீண்டநேரமாக அனுதாபமாக உரையாடி முதிய பெண் தொடர்பான தகவல்களை பெற்றுள்ளார்.

உடல் சுகயீனம் என்பதால் தனியாக வீட்டிற்கு செல்ல வேண்டாம் எனத் தெரிவித்த அந்த யுவதி முச்சக்கரவண்டி ஒன்றில் முதிய பெண்ணின் வீட்டிற்கு அழைத்து சென்றதுடன் மயக்கமருந்து கலந்த சோடாவையும் பருக கொடுத்துள்ளார்.

வீட்டுக்குசென்று சிறிதுநேரத்தில் முதிய பெண் மயக்கமடைந்ததும், அவர் அணிந்திருந்த சங்கிலி, மோதிரம் மற்றும் வீட்டிலிருந்த நகைகள் என ஏழரைப் பவுண் நகையை திருடிக்கொண்டு அங்கிருந்து தப்பியோடியுள்ளார்.

மயக்கம் தெளிந்து குறித்த முதிய பெண் எழும்பியதும் நகைகள் திருட்டுப்போனதை அறிந்துகொண்டு உடனடியாக வவுனியா குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக்கமைவாக வவுனியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜே.ஏ.எஸ்.ஜெயக்கொடியின் வழிகாட்டலில், வவுனியா குற்றத்தடுப்புப் பிரிவு உப பொலிஸ் பரிசோதகர் கியான் தலைமையில் பொலிஸ் சார்ஜன்ட்களான திசாநாயக்க, விக்கிரமசூரிய, டிலீபன், உபாலி பொலிஸ் கான்ஸ்டபிள்களான சங்கயரொஹான், தயாளன், திசாநாயக்க ஆகியோர் அடங்கிய பொலிஸ் குழுவினர் தீவிர விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

இதன்போது, வவுனியா, மதீனாநகரில் வசித்துவந்த யாழ். பண்டத்தரிப்பு பகுதியைச் சேர்ந்த 21 வயது பெண் ஒருவரை கைதுசெய்துள்ளனர். திருடப்பட்ட நகையில் நாலரைப் பவுண் நகை குறித்த யுவதியிடமிருந்து பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகளின் பின் குறித்த யுவதியை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# எரிபொருளுடன் வியாபாரி கைது

(யாழ். நிருபர்)

சுன்னாகம் பொலிஸ் பிரிவில் 11 பரல்களில் எரிபொருட்களைப் பதுக்கிவைத்திருந்த குற்றச்சாட்டில் வியாபாரியொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

8 பரல்களில் மண்ணெண்ணெய், 2 பரல்களில் பெற்றோல் மற்றும் ஒரு பரல் டீசல் என்பனவே கைப்பற்றப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சுன்னாகம் மயிலங்காடு பகுதியிலுள்ள வீடொன்றோடு இணைந்த கடை ஒன்றிலிருந்தே நேற்று முன்தினம் மாலை இவ்வாறு எரிபொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

பெற்றோல் ஒரு லீற்றர் 500 ரூபாவுக்கு விற்பனை செய்தபோதே சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டார் என்றும் பொலிஸார் கூறினர். சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையிலான குழுவினரே இந்த கைது நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

மண்ணெண்ணெய் சுமார் 1600 லீற்றர், பெற்றோல் சுமார் 400 லீற்றர், டீசல் சுமார் 200 லீற்றர் கைப்பற்றப்பட்டுள்ளன.

திகதி 27.05.2022 வெள்ளிக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB
மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம்: 4768
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 6,532,960.00
ஆங்கில எழுத்து P வெற்றி இலக்கங்கள் 8 3 9 8 1 6
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 12,302,941.00
கொவிசெத Govisetha — சீட்டிழுப்பு இலக்கம் 3010
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 5,285,740.00
ஆங்கில எழுத்து A வெற்றி இலக்கங்கள் 23 34 62 66
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 65,236,652.96
தன நிதானய — டிக்கெட் அச்சிடப்பட்ட திகதி : 2022 /05 /22 சீட்டிழுப்பு இலக்கம் : 798
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,411,100.00
வெற்றி இலக்கினம் P வெற்றி இலக்கங்கள் 03 17 19 39
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 111,873,777.20
ராசீ சுப பலன் Handahana — சீட்டிழுப்பு இலக்கம்: 0077
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,381,960.00
லொத்தர் சீட்டு அச்சிடப்பட்ட திகதி 22.05.2022
இலக்கினம் மீனம் வெற்றி இலக்கங்கள் 04 08 21 29 விசேட இலக்கினம் மீனம்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,579,552.00
கோடி 25+ Mega POWER மெகா பவர் — சீட்டிழுப்பு இலக்கம் 1116
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,157,400.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 253,132,050.00
B 02 04 16 38 65
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00 அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
தேசிய லொத்தர் சபை National Lotteries Board தொலைபேசி: 011-4607000, 011-4607001-2 பெக்ஸ்: 011-4669475 Email : info@nlb.lk Web : www.nlb.lk

திகதி 28.05.2022 சனிக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB
மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம்: 4769
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 8,232,270.00
ஆங்கில எழுத்து V வெற்றி இலக்கங்கள் 0 4 3 7 1 2
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 12,621,551.00
ஜாதிக சம்பத — அச்சிடப்பட்ட திகதி 22.05.2022 சீட்டிழுப்பு இலக்கம் 1249
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,490,960.00
வெற்றி இலக்கினம் கடகம் வெற்றி இலக்கங்கள் 5 5 4 5 3 0
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 11,361,208.40
கொவிசெத Govisetha — சீட்டிழுப்பு இலக்கம் 3011
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 5,093,040.00
ஆங்கில எழுத்து I வெற்றி இலக்கங்கள் 05 16 43 57
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 65,317,781.36
தன நிதானய — டிக்கெட் அச்சிடப்பட்ட திகதி : 2022 /05 /23 சீட்டிழுப்பு இலக்கம் : 799
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,209,420.00
வெற்றி இலக்கினம் K வெற்றி இலக்கங்கள் 22 38 45 47
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 112,025,446.80
ராசீ சுப பலன் Handahana — சீட்டிழுப்பு இலக்கம்: 0078
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,028,640.00
லொத்தர் சீட்டு அச்சிடப்பட்ட திகதி 23.05.2022
இலக்கினம் தனுசு வெற்றி இலக்கங்கள் 32 36 42 54 விசேட இலக்கினம் தனுசு
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,635,580.00
கோடி 25+ Mega POWER மெகா பவர் — சீட்டிழுப்பு இலக்கம் 1117
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,051,760.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 253,328,538.00
M 19 32 35 44 76
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00 அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
தேசிய லொத்தர் சபை National Lotteries Board தொலைபேசி: 011-4607000, 011-4607001-2 பெக்ஸ்: 011-4669475 Email : info@nlb.lk Web : www.nlb.lk

# அநாச்சாரங்களை ஏற்று கலாசாரத்தை மறுக்கும் ஞானசாரரின் செயலணி!

## மேலும் ஒரு முஸ்லிம் உறுப்பினர் குழுவிலிருந்து விலகல்!

(மாளிகைக்காடு நிருபர்)

ஒரே நாடு ஒரே சட்டம் ஜனாதிபதி செயலணியிலிருந்து மூன்றாவது முஸ்லிம் உறுப்பினர் ஒருவரும் விலகியுள்ளார். ஏற்கனவே இன்டிகாப் சூபர் மற்றும் நிஸார்தீன் ஆகியோர் விலகிய நிலையில் கலீல் உல் ரஹ்மானும் தமது பதவி விலகல் கடிதத்தை ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ளார்.

இதன்படி ஒரு முஸ்லிம் உறுப்பினர் மாத்திரமே ஒரே நாடு ஒரே சட்டம் ஆணைக்குழுவில் தற்போது அங்கம் வகிக்கிறார்.

இந்நிலையில், ஒரே நாடு ஒரே சட்டம் ஜனாதிபதி செயலணி, முஸ்லிம் தனியார் சட்டங்களில் திருத்தம் செய்து அவற்றை பாதுகாப்பதற்குப் பதிலாக அந்த சட்டங்களை பறித்தெடுப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருப்பதாக அவர் ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்துள்ள தமது 6 பக்கக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, இதற்கு தாம் உடன்படமுடியாது என்றும் அத்துடன், முஸ்லிம் இனத்தின் முன்னோர்கள் பெற்றுத்தந்த உரிமைகளை காட்டிக்கொடுக்கவோ, பறித்துக்கொடுக்கவோ முடியாது என்றும் கலீலுள் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

இந்த ஆணைக்குழு, இனங்களின் உரிமைகள் தொடர்பில் இணக்கங்களை ஏற்படுத்தாமல் அந்த உரிமைகளை பறிக்கத் துணிகிறது.



முஸ்லிம் இன முன்னோர்கள் இலங்கையின் சட்டங்களுக்கு இணங்கவே முஸ்லிம் தனியார் சட்டங்களை இயற்றியுள்ளனர். எனவே, அது அடிப்படைவாதமாக அமையாது.

அந்தவகையில், கண்டிய சட்டம் மற்றும் தேச வழமைச் சட்டங்கள் பிராந்தியங்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் சட்டமாக அமைகின்ற நிலையில், முஸ்லிம் தனியார் சட்டம் என்பது முஸ்லிம்களின் வாழ்க்கைத் திட்டமாகும் என்று கலீலுள் ரஹ்மான் சுட்டிக்காட்டியுள்ளார்.

காதி நீதிமன்றத்தில் வழங்கப்படும் தீர்ப்புகளுக்கு மேன்முறையீட்டை செய்யவேண்டுமானால் இலங்கையின் மேல்நீதிமன்றத்தில் அதனை செய்யமுடியும்.

இதன்போது அந்தச் சட்டத்தை எவ்வாறு அடிப்படைவாதமென்று கூறமுடியும் என்று வினவியுள்ளார். இந்தச் சட்டத்தில் பிரச்சினைகள் இருந்தால் அதனை திருத்தியமைக்க முடியும். எனினும், அதனை இரத்துச்செய்ய முடியாது என்றும் ரஹ்மான் குறிப்பிட்டுள்ளார்.

முஸ்லிம் சொத்துச் சட்டமும் அடிப்படைவாத சட்டம் அல்ல. அது ஒரு குடும்பத்தில் சொத்துகள் எவ்வாறு பிரிக்கப்படவேண்டும் என்பதை வரையறுக்கிறது.

இதேவேளை, அரச பணிகளில் முஸ்லிம் பெண்களின் உரிமை என்ற விடயத்திலும் அடிப்படைவாதம் இல்லை என்று கலீலுள் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

ஒரே நாடு ஒரே சட்டம் ஆணைக்குழுவின் வரைவுகளில் ஓரினச் சேர்க்கை குற்றமாக பார்க்கப்படாது என்று கூறப்படுகின்ற நிலையில் அநாச்சாரங்களை ஏற்றுக்கொள்ளும் ஜனாதிபதி செயலணி, முஸ்லிம் இனத்தின் கலாசாரத்தை ஏன் மறுக்கிறது என்று அவர் ஜனாதிபதிக்கான கடிதத்தில் கேள்வி எழுப்பியுள்ளார்.

# ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரியின் 125ஆவது ஆண்டு நிறைவு விழா

## முதலாம் திகதி விசேட ஏற்பாடுகள்

(திருமலை நிருபர்)

திருகோணமலை ராமகிருஷ்ண சங்கம் ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரியின் 125ஆவது ஆண்டு நிறைவு விழாக் கொண்டாட்ட நிகழ்வு ஏற்பாடுகள் நிறைவு செய்யப் பட்டுள்ளதாக கல்லூரியின் அதிபர் எஸ்.பத்மசீலன தெரிவித்தார்.




அந்தக் கல்லூரியின் ஆரம்பப் பிரிவு கேட்போர் கூடத்தில் கல்லூரின் அதிபர் தலைமையில் நேற்று முன்தினம் (28) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

1897ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட ராமகிருஷ்ண சங்கம் ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி திருகோணமலை மாவட்ட சைவப் பெரியார்களினால் ஆரம்பிக்கப்பட்டு 28 வருடங்களின் பின்னர் சுவாமி விபுலானந்தரின் ராமகிருஷ்ண மிஷனுக்கு கையேற்கப்பட்டு 1925ஆம் ஆண்டிலிருந்து 1962ஆம் ஆண்டுவரை ராமகிருஷ்ண மிஷன் தலைமைத்துவத்தின் கீழ் இயங்கிவந்தது அதே ஆண்டு பாடசாலைகள் சுவீகரிப்புச் சட்டத்தின் கீழ் குறித்த பாடசாலையும் அரசால் சுவீகரிக்கப்பட்டது.

1997ஆம் ஆண்டு திருகோணமலை மாவட்டத்தின் முதலாவது தேசிய பாடசாலையாக அங்கீகரிக்கப்பட்டதுடன், கிழக்கு மாகாணத்தின் இரண்டாவது தேசிய பாடசாலையாகவும் ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி அங்கீகரிக்கப்பட்டது என திருகோணமலை கோணேஸ்வரா இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபரும் கிழக்கு மாகாண சபையின் முன்னாள் கல்வி அமைச்சருமான சிங்காரவேலு தண்டாயுதபாணி தெரிவித்தார்.

மேலும் கல்லூரியின் 125ஆவது நிறைவையொட்டி பாடசாலை மட்டத்தில் மட்டுமல்லாது மாவட்டத்தின் ஏனைய பாடசாலைகளில் கல்வி மற்றும் அபிவிருத்தி தொடர்பான பல செயற்பாடுகளை முன்னெடுக்க தீர்மானித்துள்ளதாகவும் கல்லூரியின் அதிபர் எஸ்.சத்தியசீலன் தெரிவித்தார்.

திருகோணமலை கோணேஸ்வரா இந்துக் கல்லூரியின் 125ஆவது வருட நிறைவையொட்டி எதிர்வரும் முதலாம் திகதி தபால் தலை வெளியீடும் கல்லூரியின் வரலாறு தொடர்பில் நூல் வெளியீடும் செய்ய தீர்மானித்துள்ளதாகவும் தெரிவித்த கல்லூரியின் அதிபர், குறித்த பாடசாலையின் 125ஆவது வருட நிறைவைக் கொண்டாடும் முகமாக கல்லூரியில் கல்வி கற்ற பழைய மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கக் குழு, நாட்டில் ஏனைய பிரதேசங்களில் அமைந்துள்ள பழைய மாணவர் சங்கத்தின் கிளை உறுப்பினர்கள் மற்றும் வெளிநாடுகளிலுள்ள கல்லூரியின் பழைய மாணவர்களால் நிதி ஒதுக்கப்பட்டு ஒதுக்கப்பட்ட நிதியை சரியான முறையில் கண்காணித்து கல்லூரியின் 125ஆவது வருட நிறைவை விழாவாகக் கொண்டாடுவதற்கு ஏற்பாட்டுக் குழு ஒன்றும் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

# பரீட்சை ஆள்மாறாட்டத்தில் ஈடுபட்ட சந்தேக நபர்கள் பிணையில் விடுதலை

(பாறுக் ஷிஹான்)

பரீட்சையில் ஆள்மாறாட்டத்தில் ஈடுபட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்ட இரு சந்தேக நபர்களுக்கு கல்முனை நீதிவான் நீதிமன்றத்தால் பிணை வழங்கப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டம் கல்முனை வலயக்கல்விப் பணிமனைக்குட்பட்ட மத்திய நிலையத்திலேயே இந்த ஆள்மாறாட்டச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதற்கமைய குறிப்பிட்ட கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்கு 21 வயது மதிக்கத்தக்கவர் தனிப்பட்ட போலி பரீட்சார்த்தியாக தோற்றுவதற்கு அம்பாறை புற நகர்ப் பகுதியிலிருந்து வருகை தந்துள்ளதுடன், சம்பவ தினமன்று இடம்பெற்ற சிங்கள மொழி மூலம் சமய பாட பரீட்சையை 32 வயதுடைய தனிப்பட்ட பரீட்சார்த்தியின் அனுமதி அட்டையை பாவித்து அவருக்குப் பதிலாக ஆள்மாறாட்டம் செய்து எழுதியுள்ளதுடன், தனது அடையாள அட்டையின் புகைப்படத்தை மாற்றியுள்ளமை விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

இந்த ஆள்மாறாட்டமானது கல்முனை கல்வி வலயத்திற்குட்பட்ட மருதமுனை பகுதியிலுள்ள பிரபல பாடசாலையில் இடம்பெற்றுள்ளதுடன், இதில் ஈடுபட்ட இரு சந்தேகநபர்களும் அடையாளம் காணப்பட்டு பெரியநீலாவணை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு கடந்த செவ்வாய்க்கிழமை (24) கல்முனை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட நிலையில் இரண்டு நாட்கள் சந்தேக நபர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

மேலும் கடந்த வெள்ளிக்கிழமை குறித்த வழக்கு கல்முனை நீதிவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருந்த நிலையில், ஆள்மாறாட்டத்தில் ஈடுபட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்ட இரு சந்தேக நபர்களையும் பிணையில் விடுவிக்குமாறு உத்தரவிட்டமை குறிப்பிடத்தக்கது.

# ஊடகர் ஐயாத்துரை நடேசனின் 18ஆவது ஞாபகார்த்த நிகழ்வும் கட்டுரைத் தொகுப்பு நூல் வெளியீடும்

(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பில் கடந்த 2004ஆம் ஆண்டு சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட சிரேஷ்ட ஊடகவியலாளர் ஐயாத்துரை நடேசனின் 18ஆவது ஞாபகார்த்த தினம் இன்றாகும்.

இந்நிலையில், அவரின் நினைவுத் தினத்தை முன்னிட்டு ஊடகவியலாளர் ஐயாத்துரை நடேசனின் 18ஆவது ஞாபகார்த்த நிகழ்வும் "ஊடகர் ஜீ.நடேசன் நினைவலைகள்" கட்டுரைத் தொகுப்பு நூல் வெளியீடும் நேற்று (29) இடம்பெற்றது.

கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவர் இ.தேவஅதிரன் தலைமையில் மட்டக்களப்பு பொது நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில், படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளரின் திருவுருவப்படத்திற்கு வீரகேசரி பத்திரிகையின் முன்னாள் பிரதம ஆசிரியர் பீ.தேவராஜாவும் கிழக்கு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் அருட்பணி நவரட்ணம் நவாஜி அடிகளாரும் இணைந்து மலர்மாலை அணிவித்து, நினைவுச் சுடரேற்றப்பட்டதனைத் தொடர்ந்து மலரஞ்சலி செலுத்தப்பட்டு, மௌன அஞ்சலியும் இடம்பெற்றது.

அதனைத் தொடர்ந்து கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியமும், சிவராம் ஞாபகார்த்த மன்றமும் (சுவிஸ்) இணைந்து வெளியிட்ட "ஊடகர் ஜீ.நடேசன் நினைவலைகள்" கட்டுரைத் தொகுப்பு நூல் வெளியீடும் இடம்பெற்றது.

நிகழ்வின் வரவேற்புரையை கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றிய உபதலைவர் க.ஜெகதீஸ்வரனும், தலைமையுரையை கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியத்தின் ஆலோசகரும் சிரேஷ்ட ஊடகவியலாளருமான, இ.பாக்கியராஜா நிகழ்த்தியதுடன், நூல் வெளியீட்டுரையை கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியத் தலைவர் இ.தேவஅதிரன் நிகழ்த்தினார்.





கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியத்தின் ஆலோசகரும் சிரேஷ்ட ஊடகவியலாளருமான ஏ.எல்.எம்.சலீமால் குறித்த நூல் வெளியிட்டு வைக்கப்பட்டதுடன், இலங்கை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கம் ஆகியவற்றின் முன்னாள் தலைவரும் சிரேஷ்ட ஊடகவியலாளருமான இரா.துரைரெத்தினம், வீரகேசரியின் முன்னாள் பிரதம ஆசிரியர் பீ.தேவராஜா மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஊடகவியலாளருமான பா.அரியநேந்திரன், ஆகியோரால் ஊடகர் ஜீ.நடேசன் தொடர்பான சிறப்பு நினைவுப்பகிர்வுகளும் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இக்கட்டுரைத் தொகுப்பு நூலில் நடேசனின் நண்பர்கள், பத்திரிகையாளர்கள், நெருக்கமானவர்கள் எனப் பலரும் தமது நினைவுகளைப் பகிர்ந்துள்ளனர். கடந்த 2021ஆம் ஆண்டு 17ஆவது ஞாபகார்த்த தினத்தில் வெளியிட வென உத்தேசிக்கப்பட்டிருந்த போதும் கொவிட் சூழல் காரணமாக குறித்த நூல் வெளியீடானது பிற்போடப்பட்ட நிலையில் இன்று வெளியிட்டு வைக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

நாடாளுமன்ற உறுப்பினர்களான கோவிந்தன் கருணாகரன், இரா.சாணக்கியன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.சிறிநேசன், முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர்களான இந்திரகுமார் பிரசன்னா, மா.நடராசா ஊடகவியலாளர்கள், சமூக நலன்விரும்பிகள், மதகுருமார், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் என அதிகளவிலானோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தியதுடன், சிறப்பு நூல் பிரதிகளையும் பெற்றுக்கொண்டிருந்தனர்.







பெரியகல்லாறில் வருடம் ஒரு தடவை நடைபெறும் கிழக்கில் புகழ் பெற்ற கடல்நாச்சி அம்மன் திருச்சடங்கின் எட்டாம் நாள் திருச்சடங்கு பக்திபூர்வமாக பக்தர்கள் புடைசூழ வெகு சிறப்பாக பூசகர் சிவத்திரு த.அரசன் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. (படங்கள் - கல்லடி நிருபர்)

கிழக்கு
செய்திகள்
easttthamilan@gmail.com

# சட்டவிரோதமாக மதுபான தயாரிப்பில் ஈடுபட்ட ஒருவர் கைது!

(கல்லடி நிருபர்)

மட்டக்களப்பு வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மீராவோடை தீவுப் பகுதியில் வாழைச்சேனை பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது, சட்டவிரோத மதுபான தயாரிப்பில் ஈடுபட்ட ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது கோடா அடங்கிய 04 பீப்பாய்களுடன் 02 வெற்று பீப்பாய்கள் உள்ளிட்ட சட்டவிரோத மதுபான தயாரிப்புக்கு பயன்படுத்திய பல்வேறு பொருட்களும் இதன்போது கைப்பற்றப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த தகவலுக்கமைய, வாழைச்சேனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி வசந்த பண்டாரவின் ஆலோசனைக்கமைய உப பொலிஸ் பரிசோதகர் ஜீ.ஆர்.எஸ்.அமரபந்துவின் வழிகாட்டலில் மீராவோடை பகுதிக்கு சென்று சுற்றிவளைப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதன்போது சந்தேகத்தின்பேரில் 19 வயதுடைய நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், 74 ஆயிரத்து 375 லீற்றர் கோடா கைப்பற்றப் பட்டுள்ளது. அத்துடன், மதுபான உற்பத்தி நடவடிக்கைகளுக்கு பயன்படுத்திய பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைப்பற்றப்பட்ட பொருட்கள் மற்றும் சந்தேக நபரை வாழைச்சேனை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கையை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

# சம்மாந்துறையில் இடம்பெற்ற உணவு பாதுகாப்பு தொடர்பான கலந்துரையாடல்





(சம்மாந்துறை நிருபர்)

எமது குடும்பத்தினதும் நாட்டினதும் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் நோக்கில் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் ஜே.எம்.ஏ. டக்ளஸின் ஆலோசனை மற்றும் வழிகாட்டல்களின் கீழ் சம்மாந்துறை பிரதேசத்திலுள்ள ஒவ்வொரு வீடுகளிலும் வயல் மற்றும் மேட்டுக் காணிகளிலும் வீட்டுத் தோட்டச் செய்கை, உப உணவு உற்பத்திகளை மேற்கொள்ளல் போன்ற வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பான கலந்துரையாடல் சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம்.ஹனிபாவின் தலைமையில் சம்மாந்துறை பிரதேச செயலகத்தில் அண்மையில் நடைபெற்றது.

பிரதேச செயலக முற்றத்தில் பிரதேச செயலாளரினால் உப உணவு நாற்றுகள் நட்டுவைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் சம்மாந்துறை பிரதேச சபை தவிசாளர், ஏ.எம்.எம்.நௌஷாட், உதவித் திட்டமிடல் பணிப்பாளர் ஏ.எல்.ஏ.மஜீட், சம்மாந்துறை பொலிஸ் நிலைய உப பொலிஸ் பரிசோதகர் ஜனோசன், கிராம நிலதாரி, நிர்வாக உத்தியோகத்தர் , விவசாய போதனாசிரியர்கள், சமூகசேவை உத்தியோகத்தர், சமுர்த்தி கருத்திட்ட முகாமையாளர், சமுர்த்தி முகாமையாளர்கள், விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராமசேவக உத்தியோகத்தர், முதியோர் மேம்பாட்டு உத்தியோகத்தர் மற்றும் மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் என பலர் கலந்துகொண்டனர்.

# இலவச மூக்குக்கண்ணாடி வழங்கிவைப்பு



(கிண்ணியா நிருபர்)

கிண்ணியாவில் கண் பார்வை குறைபாடுடையவர்களுக்கான மூக்குக்கண்ணாடி இலவசமாக வழங்கும் நிகழ்வு நேற்று (29) கிண்ணியா பிரதேச செயலக மண்டபத்தில இடம்பெற்றது.

மனித சமூகத்தில் அனைத்து மட்டங்களில் வாழும் மக்களின் உணர்வுகளை அறிந்து தேசிய விடுதலை மக்கள் முன்னணி கட்சி இதனை ஏற்பாடு செய்திருந்தது.

சுமார் 150 பேருக்கு இலவச மூக்குக் கண்ணாடி வழங்கப்பட்டது. மூக்குக்கண்ணாடி வழங்கும் வைபவத்தில் கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச்.ஹனி, கிண்ணியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சமிந்த பெர்னாண்டோ உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# தேங்காயெண்ணெய் திருடியவர் கைது

(மீராவோடை நிருபர்)

வர்த்தக நிலையமொன்றிலிருந்த தேங்காயெண்ணையை திருடிய இளைஞன் ஒருவரையும் அதனை குறைந்த விலைக்கு கொள்வனவு செய்த நபரையும் கைது செய்துள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மீராவோடை பகுதியிலுள்ள வர்த்தக நிலையம் ஒன்றிற்கு நேற்றுமுன்தினம் சென்ற இளைஞன் அங்கிருந்த 20 லீற்றர் தேங்காயெண்ணையை திருடிச் சென்றுள்ளார்.

இத் திருட்டுச் சம்பவம் அங்கிருந்த சி.சி.ரி.வி. கெமராவில் பதிவாகியுள்ளது.

திருடனை கண்டுபிடிக்க சி.சி.ரி.வி. காணொளியை வர்த்தக நிலைய உரிமையாளர் பேஸ்புக் பக்கத்தில் பதிவிட்டதன் பின்னர் திருடன் பொதுமக்களின் உதவியுடன் கண்டு பிடிக்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு திருடிய தேங்காயெண்ணையை திருடன் ஓட்டமாவடியிலுள்ள வர்த்தக நிலையம் ஒன்றுக்கு குறைந்த விலையில் விற்பனை செய்துள்ள விடயம் தெரிய வந்துள்ளது.

குறித்த சம்பவத்தில் தொடர்புபட்ட திருடனையும் தேங்காயெண்ணையை குறைந்த விலைக்கு வாங்கிய நபரையும் வாழைச்சேனை பொலிஸார் கைதுசெய்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## போடியார் புலம்பல்!



வறுமையால நாட்டில பலர் தொழிலை இழக்க நேரிடுமாம் எண்டு இப்ப இருக்கிற மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்க எச்சரிக்கிறாரு எலுவா. ஆனா பிரதமர் ரணில் அரச ஊழியர்களுக்கு சம்பளத்த கூட்டப்போறதாக சொல்லுறாரு. சம்பளத்த கூட்டினால் காசி எங்க இருந்து எடுக்கப்போறாரோ. ஒருவேள அநுராதபுரம் ஞானம் அக்காட மந்திரத்தால வானத்தால காசி எடுக்கப்போறாரு போல. நரி கதையாலே காலத்த ஓட்டும்!

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# நாட்டிலுள்ள காதி நீதிமன்றங்களுக்கு புதிய உறுப்பினர்கள் நியமிக்கப்பட வேண்டும்

**அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷவிடம் ஐக்கிய காங்கிரஸின் தலைவர் வலியுறுத்து**

(மாளிகைகாடு நிருபர்)

முஸ்லிம் திருமணச் சட்டம் என்பது இந்நாட்டு முஸ்லிம்கள், பிரித்தானியர் ஆட்சிக்காலம் முதல் அனுபவிக்கும் தனியார் சட்டமாகும். இச்சட்டத்தை நீக்கவேண்டும் அல்லது திருத்த வேண்டுமென்ற கோரிக்கை இனவாதிகளாலும் ஐரோப்பாவுக்கு அடிமைப்பட்ட சில பெண்களாலும் முன்னெடுக்கப்பட்டு வந்தது - என ஐக்கிய காங்கிரஸ் சார்பில் அக்கட்சியின் தலைவர் கலாபூஷணம் மௌலவி முபாரக் அப்துல் மஜீத், நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ஷவுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவித்திருப்பதாவது,

எம்மைப் பொறுத்தவரை தற்போதுள்ள முஸ்லிம் திருமணச் சட்டத்தில் எத்தகைய திருத்தத்துக்கும் கை வைக்க வேண்டாம். அகில இலங்கை ஜம்மியதுல் உலமா மற்றும் உலமா கட்சியின் அனுமதியுடன் சில சரத்துகள் புதிதாக சேர்க்கப்பட வேண்டும் என்பதை ரவூப் ஹக்கீம் நீதி அமைச்சராக இருந்த காலம்முதல் வலியுறுத்தி வருகிறோம். இவ்விடயத்தை ஓர் இனவாத பிரசாரமாகவே முஸ்லிம் சமூகம் பார்ப்பதால் இதனை அப்படியே இருப்பதுபோல் விட்டு விடும்படி நாம் கேட்டுக்கொள்கிறோம்.

அண்மையில் தாங்கள் பேசும்போது முஸ்லிம் திருமண சட்டதிருத்தம் சம்பந்தமாக முன் வைக்கப்பட்ட அறிக்கையில் நல்ல விடயங்களை சேர்ப்பதாக கூறியிருந்தீர்கள். ஒரு விடயம் நல்லதா கெட்டதா என்பது அவரவரின் சூழலை வைத்தே தீர்மானிக்கப்படும். உங்களுக்கு நல்லதாக தெரிவது எமக்கு கெட்டதாகவே தெரியும். ஆகவே, எந்த



திருத்தத்துக்கும் இடமளிக்க வேண்டாம் என கூறிவைக்க விரும்புகின்றோம். அதேபோல் நாட்டில் 65 காதி நீதிமன்றங்கள் உள்ளன. 65 காதி நீதிபதிகளில் 20 பேர் பதவி இராஜினாமா அல்லது பதவியிலிருந்து நீக்கப்பட்டமை மற்றும் பதவிக்காலம் முடிவு ஆகிய காரணங்களினால் வெற்றிடங்கள் நிலவுகின்றன. தற்போது நீண்ட காலமாக இந்த காதி நீதிமன்றப் பிரிவுகளின் செயற்பாடுகள் அருகிலிருக்கும் காதி நீதிமன்றங்களால் முன்னெடுக்கப்படுகின்றன. இதனால் காதி நீதிபதியொருவர் இரண்டு அல்லது மூன்று நீதிப் பிரிவுகளில் கடமை செய்ய வேண்டியுள்ளது . இது வேலைப்பளுமிக்கதாகும்.

இந்த 20 வெற்றிடங்களுக்கு நிரந்தரமாக காதி நீதிபதிகளை நியமிக்கும் நடவடிக்கை நீதிச் சேவை ஆணைக்குழுவினால் முன்னெடுக்கப்படவில்லை. மேலும் 45 காதி நீதிபதிகளின் பதவிக்காலம் எதிர்வரும் ஜூன் 30ஆம் திகதியுடன் காலாவதியாகிறது. இவற்றில் 25 காதி நீதிப் பிரிவுகளுக்கு விண்ணப்பங்கள் ஏற்கனவே கோரப்பட்டிருந்தாலும் நேர்முகப் பரீட்சை நடத்தப்படவில்லை. இதனால் பொதுமக்கள் நீதியைப் பெற்றுக்கொள்வதில் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்ளவேண்டியுள்ளது . தாமதங்களுக்கு காதி நீதிபதிகளே காரணம் என பொதுமக்கள் குற்றஞ்சுமத்துகின்றனர். காதி நீதிபதிகளுக்கு நீதிச் சேவை ஆணைக்குழுவினால் எந்தப் பயிற்சியும் வழங்கப்படுவதில்லை என்பதை சுட்டிக்காட்டுகிறோம் .

பல நீதிப் பிரிவுகளில் காதி நீதிபதி வெற்றிடம் நிலவுவதால் பொதுமக்கள் தங்கள் தேவைகளுக்கு ஏனைய பகுதிகளிலுள்ள காதி நீதிமன்றங்களுக்கு செல்லவேண்டியுள்ளது. அவர்கள் நீண்டதூரம் பயணிக்கவேண்டியுள்ளது. இதுவெல்லாம் மஹிந்த ஆட்சியின் தவறுகளாகும். ஆகவே, அதே தவறை இந்த அரசும் செய்யாது உடனடியாக புதிய காதிகளை நியமிக்க பொது நிர்வாக அமைச்சும் நீதி அமைச்சும் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

கடந்த மஹிந்த ஆட்சியில் அமைச்சரவையில் இருந்துகொண்டு முஸ்லிம் திருமணச் சட்டத்தை ஒழிக்க வேண்டும், காதி நீதிமன்றத்தை கலைக்க வேண்டும் என பேசிய முன்னாள் அமைச்சர்களான விமல் வீரவங்க, உதய கம்மன்பில போன்றோரால் தான் மஹிந்த அரசுக்கும் கெட்ட பெயர் வந்தது என்பதை அறிவீர்கள். இதையெல்லாம் இறைவனின் தண்டனையாகவே நாம் பார்க்கிறோம்.

ஆகவே, முஸ்லிம் திருமண சட்டதிருத்தம் பற்றி தாங்கள் பேசுவதை விடுத்து நாட்டிலுள்ள காதி நீதிமன்றங்களை பலப்படுத்தி அதில் புதிய காதிகளை நியமிக்க உடனடி நடவடிக்கை எடுக்குமாறு தங்களையும் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவையும் எமது கட்சி கேட்டுக்கொள்கிறது - என்று அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

# பெண்ணொருவரை தாக்கிய நபர் கைது

(திருமலை நிருபர்)

உறங்கிக்கொண்டிருந்த பெண்ணை அவரது மருமகன் தாக்கிய சம்பவமொன்று திருகோணமலை, மயிலவெவ பகுதியில் பதிவாகியுள்ளது. இந்நிலையில், குறித்த நபர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை (27) இரவு இடம்பெற்றுள்ளது. இதுதொடர்பில் தெரியவருவதாவது,

இச்சம்பவத்தில் அதே பகுதியைச் சேர்ந்த 52 வயதுடைய நான்கு பிள்ளைகளின் தாயாரான எஸ்.சுவர்ணலதா என்பவர் காயமடைந்த நிலையில் திருகோணமலை பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மதுபோதையில் வீட்டுக்கு வந்த மருமகன் உறங்கிக்கொண்டிருந்த மாமியாரை பொல்லால் அடித்துத் தாக்கியதாகவும் ஏற்கனவே குடும்பத்தகராறு காரணமாக மாமியார் தனிமையாக ஒரு வீட்டில் வசித்து வந்த நிலையிலேயே இச்சம்பவம் இடம் பெற்றதாகவும் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவத்தில் மாமியாரை தாக்கிய 33 வயதுடைய சிவில் பாதுகாப்புப்படை உத்தியோகத்தர் ஒருவரை கைது செய்துள்ள தாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட குறித்த சந்தேகநபரை திருகோணமலை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் கோமரங்கடவல பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# சிறுவனை துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் தேடப்பட்டுவந்த சந்தேகநபர் சடலமாக மீட்பு

(பாறுக் ஷிஹான்)

சிறுவனை பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில், சந்தேகத்தின் அடிப்படையில் தேடப்பட்டுவந்த மின்சார சபை உத்தியோகத்தரொருவர் சடலமாக மீட்கப்பட்ட சம்பவம் பெரியநீலாவணை பொலிஸ் பிரிவில் பதிவாகியுள்ளது.

குறித்த சம்பவம் குறித்து மேலும் தெரிய வருவதாவது

கடந்த வியாழக்கிழமை (26) வழமைபோன்று மட்டக்களப்பு மாவட்டம், கல்லடி இலங்கை மின்சார சபை காரியாலயத்தில் கடமையாற்றும் 57 வயதான நுகர்வோர் ஒருங்கிணைப்பாளர் ஒருவர் கடமை நிமித்தம் களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவிலுள்ள வீடொன்றிற்கு சென்று மின்மானியை பரீட்சித்துள்ளார்.

அதன்பின்னர் அந்த வீட்டில் தாயுடன் இருந்த சிறுவனை அருகிலுள்ள வீட்டின் மின்மானியை பார்வையிட துணைக்கு அழைத்துச் சென்றுள்ளதுடன், அங்கு சிறுவனை பாலியல் துஷ்பிரயோகம் செய்துவிட்டு அங்கிருந்து தப்பிச்சென்றுள்ளார்.

இவ்வாறு குறித்த மின்வாசிப்பாளர் சென்ற பின்னர் சிறுவன் தனக்கு நடந்த அனைத்து விடயங்களையும் தனது பெற்றோரிடம் கூறியுள்ளார். அதனையடுத்து இந்தச் சம்பவம் தொடர்பில் சிறுவனின் பெற்றோர் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளதுடன், இதனையறிந்த சந்தேகநபரான மின்சார சபை ஊழியர் பெரியநீலாவணை பொலிஸ் பிரிவில் அமைந்துள்ள தனது வீட்டின் அறையில் தூக்கிட்டு தற்கொலை செய்துகொண்டுள்ளார்.

இதனையடுத்து மனைவி உள்ளிட்ட உறவினர் தூக்கில் தொங்கியவரை மீட்டு கல்முனை ஆதார வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர். எனினும், தூக்கில் தொங்கியவர் ஏற்கனவே இறந்துவிட்டதாக வைத்தியசாலை தகவல்கள் தெரிவித்துள்ளன.

இவ்வாறு உயிரிழந்த நபர் திருமணமாகியுள்ளதுடன், இரு பிள்ளைகளின் தந்தை என்பதும் குறிப்பிடத்தக்கது. குறித்த சம்பவம் தொடர்பில் பெரியநீலாவணை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# சஹ்ரானின் மனைவிக்கு எதிரான குற்றப்பத்திரிகை தொடர்பிலான ஆவணங்கள் தமிழில் மொழிபெயர்ப்பு

(பாறுக் ஷிஹான்)

உயிர்த்த ஞாயிறு தின தொடர் தற்கொலை தாக்குதல்களின் பிரதான குண்டுதாரியான சஹ்ரான் ஹாஷிமின் மனைவிக்கு எதிராக பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் சட்ட மா அதிபர் தாக்கல் செய்துள்ள குற்றப்பத்திரிகை தொடர்பிலான இணைப்பு ஆவணங்கள் அனைத்தும் தமிழ் மொழி மூலமாக கடந்த வெள்ளிக்கிழமை (27) அவருக்கு கையளிக்கப்பட்டுள்ளன.

இது குறித்த வழக்கு கல்முனை மேல் நீதிமன்ற நீதிவான் ஜயராம் ட்ரொக்ஸி முன்னிலையில் விசாரணைக்கு வந்தபோதே இவ்வாறு அவை கையளிக்கப்பட்டுள்ளன.

கடந்த தவணையின்போது சஹ்ரானின் மனைவி சார்பில் நீதிமன்றில் ஆஜராகிய சட்டத்தரணி, பிரதிவாதிக்கு எதிரான சான்றாக முன்வைக்கப்படும் அவரின் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் சிங்கள மொழியில் உள்ளதால்,



அதன் தமிழ் மொழிபெயர்ப்பு அவசியம் என நீதிமன்றில் சுட்டிக்காட்டியிருந்தார்.

அதற்கமைய குற்றப்பத்திரத்தின் இணைப்பு ஆவணங்கள்சிங்கள மொழியில் காணப்படுவதால் அவை தமிழுக்கு மொழிபெயர்க்கப்பட வேண்டும் எனவும் அப்போதே பிரதிவாதிக்கு தன் பக்க நியாயங்களை முன்வைக்க முடியுமாக இருக்கும் எனவும் ஹாதியாவின் சட்டத்தரணியினால் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

அதன்படி கடந்த தவணையில் நீதிமன்றம் விடுத்த உத்தரவுக்கமைய பிரதிவாதியான சஹ்ரானின் மனைவிக்கு எதிரான குற்றப்பத்திரத்தின் இணைப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்பு குறித்த வழக்கு விசாரணையின்போது அரச சட்டவாதி மாதினி விக்னேஸ்வரனால் பிரதிவாதி தரப்பு சட்டத்தரணியிடம் கையளிக்கப்பட்டது.

மீண்டும் நீதிபதி ஜயராம் ட்ரொக்ஸினால் எதிர்வரும் ஜூலை மாதம் 21ஆம் திகதி குறித்த வழக்கு மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

இவ்வழக்கு விசாரணைக்கு வந்தபோது ஷஹ்ரான் ஹாஷிமின் மனைவி அப்துல் காதர் பாத்திமா ஹாதியா பலத்த பாதுகாப்புடன் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டிருந்தார்.

# ஆலையடிவேம்பில் சமய - சமூகப் பணிகள்



(ஆலையடிவேம்பு நிருபர்)

ஆலையடிவேம்பு பிரதேச சமூக நலன் அமைப்பினர் பல்வேறு சமய, சமூகப் பணிகளில் ஈடுபட்டுவருவதுடன், அமைப்பின் உறுப்பினர்கள் தன்னார்வ தொண்டர்களாக இணைந்து முன்னின்று செயற்பட்டும் வருகின்றனர்.

குறிப்பாக, அம்பாறை மாவட்டத்தில் ஆலயங்களில் இடம்பெறும் சிரமதானப்பணிகளில் கலந்துகொண்டு அவர்களது பங்களிப்பை வழங்குவதுடன், அன்னதானம், தாகசாந்தி போன்ற பணிகளையும் முன்னெடுத்து வருகின்றனர். இதேநேரம், கடந்த கொரோனா காலகட்டத்தில் மக்களுக்கான நிவாரணப்பணி வழங்கும் பணிகளிலும் தொண்டர்களாக இருந்து உதவி புரிந்தனர்.

மரண வீடுகளுக்கும் இலவசமாக பந்தல் மற்றும் கதிரை வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்தல், வருமானம் குறைந்த குடும்பங்களின் வீடுகளில் இடம்பெறும் நிகழ்வுகளுக்கு இலவசமாக சமைத்துக் கொடுத்தல் போன்ற நற்காரியங்களிலும் முன்னின்று பணியாற்றுகின்றனர்.

இதற்கமைவாக அக்கரைப்பற்று ஸ்ரீவம்மியடிப் பிள்ளையார் ஆலயத்தில் இடம்பெறவுள்ள மகோற்சவத்தை முன்னிட்டு ஆலய நிர்வாக சபையின் வேண்டுகோளில்பேரில் அமைப்பின் தலைவர் க.சுந்தரலிங்கம் தலைமையில் சிரமதானப் பணிகளில் ஈடுபட்டனர். தொடர்ந்து ஆலய வெளிவளாகத்தை துப்புரவுசெய்து அங்கிருந்து அகற்றியதுடன் வடிகானையும் சுத்தப்படுத்தினர்.

அத்தோடு பற்றைகள் யாவும் வெட்டி அகற்றப்பட்டதுடன், ஆலய வெளிவளாகத்தில் அமையவுள்ள தற்காலிக சிறிய மடம் ஒன்றை அமைக்கும் செயற்பாடுகளில் ஆலய நிர்வாகத்தினரோடு இணைந்து வழிநடத்தினர்.

இவ்வாறான சமய, சமூகப் பணிகளில் ஈடுபடும் குறித்த அமைப்பினருக்கு ஆலய நிர்வாகத்தினர் நன்றி தெரிவித்தனர்.

# திருமலை - கண்டி பிரதான வீதியில் வாகன விபத்து

**நபரொருவர் உயிரிழப்பு**



(நிலாவெளி நிருபர்)

திருகோணமலை - கண்டி பிரதான வீதியில் வேன் ஒன்றும் லொறியொன்றும் மோதி விபத்துக்குள்ளானதில் வேனின் சாரதி உயிரிழந்துள்ளதாக ஹபரணை பொலிஸார் தெரிவிக்கின்றனர். இவ்விபத்துச் சம்பவம் நேற்று முன்தினம் (27) மாலை இடம்பெற்றுள்ளது

விபத்தில் கந்தளாய் பேராறு பகுதியைச் சேர்ந்த 40 வயதுடைய ஏ.எம்.நிசார் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக தெரியவருகின்றது.

ஹதரஸ்கொட்டுவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கொழும்பிலிருந்து கந்தளாய் பகுதிக்குச் சென்ற வேனும், திருகோணமலை பிரதேசத்திலிருந்து குருநாகலைக்கு உமி மூடைகளை ஏற்றிச்சென்ற லொறியுமே இவ்வாறு நேருக்கு நேராக மோதி விபத்துக்குள்ளாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மாலையர்கட்டு பகுதியில் யானையொன்றின் உடலம் மீட்பு



(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தின் வன ஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் வெல்லாவெளி சுற்றுவட்டார காரியாலயத்திற்குட்பட்ட மாலையர்கட்டு கிராமத்தின் வயல் பகுதியிலிருந்து உயிரிழந்த நிலையில் காட்டு யானை ஒன்று சடலமாக கடந்த வெள்ளிக்கிழமை (27) மீட்கப்பட்டதாக வன ஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் வெல்லாவெளி சுற்று வட்டார காரியாலயத்தின் உத்தியோகத்தர்கள் தெரிவித்தனர்.

வயற்பகுதியில் யானை ஒன்று வீழ்ந்து கிடப்பதாக அப்பகுதி பொதுமக்கள் வழங்கிய தகவலையடுத்து அங்கு விரைந்து சென்ற வன ஜீவராசிகள் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் யானை உயிரிழந்து கிடப்பதை உறுதிப்படுத்தியுள்ளனர்.

இவ்வாறு உயிரிழந்த யானை தொடர்பில் நீதிமன்ற உத்தரவைப் பெற்று பிரேத பரிசோதனையின் பின்னர்தான் என்ன காரணத்திற்காக குறித்த யானை உயிரிழந்துள்ளது என்பதை அறிய முடியும் என அவர்கள் தெரிவிக்கின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவாங்கரைப் பகுதியில் மிக நீண்டகாலமாக இவ்வாறு காட்டு யானைகள் மக்கள் குடியிருப்புகள் மீது புகுந்து அங்குள்ள பயிரினங்களை துவம்சம் செய்து வருவதோடு, பல மனித உயிர்களையும் காவுகொண்டு வருகின்றன. அப்பகுதியில் சிறுபோக வேளாண்மை மேற்கொள்ளப்பட்டுள்ள இந்நிலையில், வேளாண்மைச் செய்கையை காட்டுயானைகள் அழித்துவருவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

# ஓட்டமாவடியை பொலித்தீன் பாவனையற்ற பிரதேசமாக மாற்ற விழிப்புணர்வு வேலைத்திட்டம்





(மீராவோடை நிருபர்)

கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச சபை பிரிவுக்குட்பட்ட பகுதியை பொலித்தீன் பாவனையற்ற பிரதேசமாக மாற்ற ஒன்றிணைவோம் எனும் தொனிப்பொருளில் பாரிய வேலைத்திட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

வை.எம்.சீ.ஏ. மற்றும் சீ.பீ.எம்.நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் கோறளைப்பற்று மேற்கு பிரதேச சபையுடன் இணைந்து ஓட்டமாவடி சிகரம் மாற்றுத்திறனாளிகள் அமைப்பு இந்த வேலைத்திட்டத்தை முன்னெடுத்துள்ளது.

அந்தவகையில், நேற்று முன்தினம் (28) ஓட்டமாவடி பிரதேசத்தில் பொலித்தீன் பாவனை தொடர்பான விழிப்பூட்டல் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டதுடன், ஒலிபெருக்கி மூலம் பொதுமக்கள், வியாபாரிகளுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு, துண்டுப்பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டன.

சிகரம் மாற்றுத்திறனாளிகள் அமைப்பின் தலைவர் என்.எம்.இஸ்மாயில் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச சபை தவிசாளர் ஏ.எம்.நௌபர் மற்றும் நிறுவனங்களின் உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# வடக்கு, கிழக்கு மக்களுக்கான விவசாய ஊக்குவிப்புத் திட்டம் ஆரம்பித்துவைப்பு

(வாழைச்சேனை நிருபர்)

''சமகால பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்வோம், தற்சார்பு வாழ்வை நோக்கிப் பயணிப்போம்" என்னும் கருத்திட்டத்திற்கமைய வடக்கு, கிழக்கு தமிழ் மக்களுக்கான விவசாய ஊக்குவிப்புத் திட்டம் கிண்ணையடி சுங்காங்கேணி பிரதேசத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதனடிப்படையில் கொண்டையன்கேணி, சுங்காங்கேணி மற்றும் கிண்ணையடி போன்ற கிராமங்களைச் சேர்ந்த 100 பயனாளிகள் தெரிவுசெய்யயப்பட்டு அவர்களுக்கான 10 வகையான விதைப் பருப்புகள் வழங்கப்பட்டன. உற்பத்திசெய்யப்படும் பயிர் தோட்டங்களை நேரடியாக கண்காணித்து அதற்கான ஊக்குவிப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என இதன்போது தெரிவிக்கப்பட்டது.

குறித்த திட்டமானது தமிழ்த் தேசிய மக்கள்



முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் செல்வராஜா கஜேந்திரன் ஆகியோரது ஆலோசனையின்படி முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி நிகழ்வில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் கோறளைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் கு.குணசேகரம், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளர் க.குககுமாரராஜா ஆகியோர் கலந்து கொண்டனர்.

# 21ஆம் திருத்தம் என்று சொல்லி மாகாண சபைகளையும் தேர்தல் முறைமையையும் மாற்றுவதற்குப் பார்க்கிறார்கள்

## விழிப்பாக இருக்குமாறு அனைத்து தமிழ், முஸ்லிம் கட்சிகளுக்கும் மனோ எம்.பி. அறைகூவல்

மாகாண சபை முழுமையான அதிகாரப் பரவலாக்கல் தீர்வல்ல. ஆனால், குறைந்தபட்சமாக இருக்கும் அதையும் வெட்டிக்குறைக்க வேண்டுமென சிங்களக் கட்சிகள் கூறுகின்றன. அதேபோல் குறைந்தபட்சமாக தமிழ், முஸ்லிம் பிரதிநிதிகளை நாடாளுமன்றம், மாகாண சபைகள் ஆகியவற்றுக்கு செல்ல வழிகாட்டும் விகிதாசார தேர்தல் முறைமையையும் மாற்ற வேண்டும் என்ற குரல்கள் தெற்கில் எழுகின்றன. இது தொடர்பில் தமிழ் பேசும் மக்களை பிரதிநிதித்துவம் செய்யும் கட்சிகள் விழிப்பாக இருக்கவேண்டும் - என தமிழ் முற்போக்கு கூட்டணித் தலைவர் மனோ கணேசன் அனைத்து தமிழ், முஸ்லிம் கட்சிகளுக்கும் அறைகூவல் விடுத்துள்ளார்.

இது தொடர்பில் மனோ எம்.பி. மேலும் கூறியுள்ளதாவது,

21ஆம் திருத்தம் என்று சொல்லி நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை அகற்றினால், 13ஆம் திருத்தம், தேர்தல் முறைமை ஆகியவையும் மாற வேண்டும் என இங்கே பலர் சொல்லத் தொடங்கியுள்ளார்கள்.

தென்னிலங்கை சிவில் சமூகத்துக்கு நல்லாட்சி, சுயாதீனக் குழுக்கள், நீதிமன்ற சுதந்திரம், ஊடக சுதந்திரம், ஊழல் எதிர்ப்பு போன்ற பல்வேறு முன்னுரிமை பிரச்சினைகள் தொடர்பாக தேசிய கோரிக்கைகள் உள்ளன. இவற்றை நாங்களும் கடுமையாக ஆதரிக்கின்றோம். அதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

ஆனால், எங்களது முன்னுரிமை பிரச்சினைகள்



வேறு. ஒரே நாட்டுக்குள் வடக்கு, கிழக்கில் தமிழ், முஸ்லிம் மக்களுக்கு அதிகாரப்பகிர்வு, மலையகத்தில் அதிகாரப்பகிர்வு, தோட்டக் குடியிருப்புகளை தேசிய நிர்வாக வலையமைப்புக்குள் கொண்டுவரல், மொழி உரிமை, மத வழிபாட்டு உரிமை, அகழ்வாராய்ச்சி, வனம் மற்றும் வனஜீவி திணைக்களங்கள், மகாவலி அதிகாரசபை ஆகியவற்றின் மூலம் வட-கிழக்கில் காணி பிடிப்பு, பௌத்த மயமாக்கல், பயங்கரவாத தடுப்பு சட்டம், அரசியல் கைதிகள், காணாமல் போனோர்... என்று பல்வேறு பிரச்சினைகள் உள்ளன.

தேசிய கோரிக்கைகளை ஆதரிக்கும் அதேவேளை எமது பிரச்சினைகளையும் நாம் களத்துக்கு கொண்டுவர வேண்டும். எமது பிரச்சினைகளுக்கு நாம் முன்னுரிமை கொடுக்க வேண்டும்.

எனவேதான், ஜனாதிபதி முறைமையை முழுமையாக அகற்றுகிறீர்களோ, இல்லையோ, 13ஆம் திருத்தம், தேர்தல் முறைமை இவற்றில் கைவைக்க ஒருபோதும் இணங்கமாட்டோம். இருப்பதையும் இழக்க இணங்கமாட்டோம். பழைய பிரச்சினையை தீர்க்கப் போய், புது பிரச்சினைகளை உருவாக்காதீர்கள் என்று நேற்று நான் பிரதமர் ரணில் விக்ரமசிங்க தலைமையில் நடைபெற்ற அனைத்து கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் உரக்க கூறினேன்.

இந்த நிலைப்பாட்டுடன் உடன்படும்படி அனைத்து தமிழ், முஸ்லிம் கட்சிகளையும், அக்கட்சி தலைவர்களையும், எம்.பிக்களையும் தமிழ், முஸ்லிம் அரசியல் ஆய்வாளர்களும், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களும், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்களும், கட்சி உறுப்பினர்களும் வலியுறுத்தவேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

# அமெரிக்கத் தூதுவர் சபாநாயகருடன் சந்திப்பு

இலங்கைக்கான ஐக்கிய அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங், சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவை கடந்த வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்தில் சந்தித்தார்.

அரசியல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்தி தற்போதைய பொருளாதார நெருக்கடியை வெற்றிகொள்ள புதிய பிரதமர் உள்ளிட்ட அரசாங்கத்தால் முடியும் என தான் நம்புவதாக அவர் இதன்போது குறிப்பிட்டார். அதேபோன்று மக்கள் எதிர்பார்க்கும் அரசியல் மறுசீரமைப்புகளை மேற்கொண்டு ஜனநாயகத்தைப் பாதுகாக்கவேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார்.



இலங்கை - ஐக்கிய அமெரிக்க நாடாளுமன்ற நட்புறவுச் சங்கத்தின் ஊடாக இரு நாடுகளுக்குமிடையிலான உறவுகளை மேலும் மேம்படுத்த எதிர்பார்ப்பதாகவும் ஜூலி சங் தெரிவித்தார். நாடாளுமன்ற பெண் உறுப்பினர்களின் ஒன்றியம் மேற்கொள்ளும் பணிகளை பாராட்டிய அவர் நாடாளுமன்றத்தில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்கும் அவசியம் குறித்தும் கலந்துரையாடினார்.

இலங்கையில் ஜனநாயகத்தை வலுப்படுத்த ஐக்கிய அமெரிக்கா தொடர்ந்தும் வழங்கிவரும் பங்களிப்புக்கு சபாநாயகர் தனது நன்றியைத் தெரிவித்தார். இச்சந்திப்பில் நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக்கவும் கலந்துகொண்டிருந்தார்.

ஜூலி சங் இந்நாட்டுக்கான ஐக்கிய அமெரிக்கத் தூதுவராக நியமிக்கப்பட்டதையடுத்து சபாநாயகருடன் இடம்பெற்ற முதலாவது சந்திப்பு இதுவாகும்.

# ஆசிரியர்களுக்கான வாழ்க்கைச் செலவை அதிகரிக்குமாறு அரசாங்கத்திடம் கோரிக்கை

## இலங்கை ஆசிரியர் சேவை சங்கச் செயலாளர் கல்வி அமைச்சுக்கு கடிதம்

வாழ்க்கைச் செலவு அதிகம் உள்ள நிலையில், ஆசிரியர்களுக்கான மாதாந்த உதவித் தொகையான ரூ. 5000 பற்றாக்குறையாக உள்ளமை தொடர்பாக இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் பிரதம செயலாளர் மஹிந்த ஜயசிங்கவால் கல்வி அமைச்சின் செயலாளருக்கு கடிதம் ஒன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இக்கடிதத்தில் பின்வரும் விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

இதுவரை ரூ.5000 ஆகவுள்ள கொடுப்பனவினை குறைந்தபட்சம் ரூ. 10,000 ஆக அதிகரிக்க நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்துகிறோம். மேலும் ஆசிரியர்களுக்கான தங்குமிடம் மற்றும் போக்குவரத்து வசதிகளுக்கான கட்டணம் குறுகிய



காலத்தில் கணிசமாக அதிகரித்துள்ளதையும் அதற்கேற்ப தற்போது வழங்கப்படும் 5,000 ரூபா என்ற சொற்ப கொடுப்பனவின் மூலம் அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளையும் நாங்கள் உங்களுக்கு விளக்கவேண்டியதில்லை. அரசாங்கம் வழங்கும் இச்சிறிய கொடுப்பனவு எந்த வகையிலும் போதுமானதாக இல்லை.

அத்துடன், 19 தேசிய கல்வியியல் கல்லூரிகளில் கல்வி கற்கும் 12 ஆயிரம் ஆசிரிய மாணவர்கள் எதிர்நோக்கும் கடுமையான நிதிப் பிரச்சினைகள் தொடர்பாகவும் தீர்வுகாணவும், கல்விப் பட்டப்படிப்பை வெற்றிகரமாக முடிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளையும் உடனடியாக எடுக்குமாறு இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் சார்பாக வேண்டுகோள் விடுப்பதாகவும் இக்கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் பீரிஸுடன் பிரித்தானிய உயர்ஸ்தானிகர் ஹல்டன் சந்திப்பு

## அண்மைய அபிவிருத்திகள் குறித்து விரிவாக கலந்துரையாடல்

இலங்கைக்கான ஐக்கிய இராச்சியத்தின் உயர்ஸ்தானிகர் சாரா ஹல்டன், வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸை 2022 மே 26ஆம் திகதி வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சில் வைத்து சந்தித்து, இலங்கையின் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சராக மீண்டும் நியமிக்கப்பட்டதற்கு வாழ்த்துகளைத் தெரிவித்தார்.

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் பீரிஸ் மற்றும் உயர்ஸ்தானிகர் ஹல்டன் ஆகியோர் இருதரப்பு ஈடுபாடுகள், உள்நாட்டு அபிவிருத்திகள் மற்றும் இலங்கை எதிர்கொள்ளும் தற்போதைய பொருளாதார சவால்களை வெற்றிகொள்வதில் சர்வதேச சமூகத்தின் உதவிகள் குறித்து கலந்துரையாடினர்.

பல பொருளாதார சவால்களை சமாளிக்க ஒத்திசைவான உத்திகளை வகுக்கும் அதேவேளை, அத்தியாவசியப் பொருட்களின் விநியோகத்தை உறுதிசெய்வதில் அரசாங்கம் கவனம் செலுத்துவதாக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் விளக்கினார். நீண்டகால பொருளாதார மீட்சியில் பலதரப்பு நிறுவனங்களுடன் ஈடுபடும் அதேவேளைல், இந்தக் காலகட்டத்தில் கிடைத்த இருதரப்பு உதவிகளை இலங்கை பாராட்டியது.



இலங்கை எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடிகளை தாங்கள் புரிந்துகொண்டுள்ளதாக தெரிவித்த உயர்ஸ்தானிகர், இருதரப்பு மற்றும் பலதரப்பு வழிகள் உட்பட இலங்கைக்கு ஆதரவளிப்பதற்கான வழிகளை ஆராய்ந்து வருவதாகவும் தெரிவித்தார். வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் சமூகத்தின் மிகவும் பாதிக்கப்படக்கூடிய பிரிவினரை இலக்காகக்கொண்டு மேற்கொள்ளப்படவேண்டிய நலன்புரி நடவடிக்கைகளை எடுத்துரைத்தார்.

சட்டம், ஒழுங்கைப் பேணுதல் மற்றும் குடிமக்களின் வாழ்வுக்கு இடையூறு விளைவிக்கும் வன்முறைச்சம்பவங்களைத்தடுப்பதில் கவனம் செலுத்தும் அரசாங்கத்தின் முயற்சிகள் குறித்தும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் உயர்ஸ்தானிகரிடம் விளக்கினார். அரசியலமைப்பின் 21ஆவது திருத்தம் குறித்து தற்போது அரசியல் கட்சிகள் ஆய்வுசெய்து வருவதாக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் விளக்கமளித்தார். தற்போதைய பொருளாதார சவால்களுக்கு மத்தியிலும், மோதல்களின் பின்னரான நல்லிணக்கம் தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் அரசாங்கம் முன்னேற்றம் காண தீர்மானித்துள்ளதாக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் குறிப்பிட்டார்.

இலங்கையில் முதலீட்டுத் தெரிவுகளை இங்கிலாந்து அரசாங்கம் ஆராய்ந்துவருவதாக உயர்ஸ்தானிகர் ஹல்டன் தெரிவித்தார். காலநிலை மாற்றத்தின் தாக்கங்களை நிவர்த்திசெய்யும் நிலையானஆற்றல் திட்டங்கள் மற்றும் பசுமைப் பிணைப்புகளில் இலங்கை கணிசமான ஆற்றலைக் கொண்டுள்ளது. வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் பீரிஸ் மற்றும் உயர்ஸ்தானிகர் ஹல்டன் ஆகியோர் பொதுநலவாயம் தொடர்பான முன்னேற்றங்கள், மகத்துவ மகாராணியின் பிளாட்டினம் விழாக் கொண்டாட்டங்கள் மற்றும் ருவாண்டாவின் கிகாலியில் நடைபெறவுள்ள பொதுநலவாய அரச தலைவர்கள் மாநாடு ஆகியன குறித்தும் கலந்துரையாடினர்.

இந்த சந்திப்பின்போது வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகள் மற்றும் பிரித்தானியாவின் உயர்ஸ்தானிகராலயத்தின் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

# சட்டவிரோத கடற்பயணம் குறித்து தீவிர விசாரணைகள் ஆரம்பம்

## 45 பேர் கைதானதையடுத்து பொலிஸார் நடவடிக்கை

ரஸீன் ரஸ்மின்

புத்தளம், நீர்கொழும்பு மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளிலிருந்து சட்டவிரோதமாக வெளிநாடு செல்ல முயற்சித்த 45 பேர் கடற்படையினரால் கடந்த வெள்ளிக்கிழமை (27) கைதுசெய்யப்பட்ட நிலையில் அது தொடர்பில் தீவிர விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இலங்கையின் தெற்கு மற்றும் மேற்கு கடற்பகுதிகளில் விசேட ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்ட கஜபா கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனை நடவடிக்கைகளின்போதே குறித்த சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்கள் கற்பிட்டி, சிலாபம், புத்தளம், நீர்கொழும்பு மற்றும் கிளிநொச்சி பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளதாக கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

குறித்த சந்தேக நபர்கள் கடல் வழியாக சட்டவிரோதமாக வெளிநாடுகளுக்குச் செல்லும் நோக்கில் பயணம் செய்திருக்கலாம் என தாம் சந்தேகிப்பதாகவும் கடற்படையினர் குறிப்பிட்டுள்ளனர்.

அத்துடன், சந்தேக நபர்கள் பயணித்ததாக கூறப்படும் 02 உள்ளூர் மீன்பிடி இழுவைப்படகுகளையும் கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

இதேவேளை, உலகின் பல்வேறு பகுதிகளில் அரசியல் முன்னேற்றங்களைத் தொடர்ந்து, மனித கடத்தல்காரர்கள் திட்டமிட்டு பொதுமக்களை ஏமாற்றி அதிக பணத்தை அறவிடுகிறார்கள்.

எனவே, கடலுக்குச் செல்லத் தகுதியற்ற கப்பல்கள் மூலம் ஆபத்தான கடல் பயணங்களில் ஈடுபடுவதையும், கடத்தல்காரர்களின் சதிகளில் இருந்து விடுபட விழிப்பாக செயற்படுமாறும் கடற்படை பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

# மாடுகளை கடத்திய இருவர் கைது

(கெலும் குணதிலக்க)

சட்டவிரோதமான முறையில் பசுமாடுகளை ஏற்றிச்சென்ற லொறியொன்றை கைப்பற்றிய மொனராகலை பொலிஸார், சந்தேக நபர்கள் இருவரை கைதுசெய்துள்ளனர்.

மொனராகலை, எத்திலிவெவ பகுதியிலிருந்து நிந்தவூருக்கு மாடுகள் கடத்தப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். சிறிய ரக லொறியொன்றில் போதிய இடவசதி இல்லாத நிலையில் 11 மாடுகள் இவ்வாறு கடத்தப்பட்டுள்ளன.

பொலிஸ் விசேட சோதனை நடவடிக்கையின் போது லொறியை நிறுத்தியபொது மாடுகள் ஒன்றுக்கு மேல் இன்னொன்று காணப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். இச்சம்பவம் தொடர்பில் மொனராகலை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பீ.எஸ்.சாமிந்த சஞ்சீவ தலைமையில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

# 21ஆவது திருத்தம் தனிநபரை இலக்காகக்கொண்டதல்ல

## நீதி அமைச்சர் விஜேதாச தெரிவிப்பு

அரசியலமைப்பின் 21ஆவது திருத்தம் ஒரு நபரை இலக்காகக்கொண்டு முன்னெடுக்கப்படவில்லை என்றும் அந்தத் திருத்தச் சட்டத்தை நிறைவேற்றி மக்கள் மத்தியில் நம்பிக்கையை கட்டியெழுப்புவது அரசாங்கத்தின் எதிர்பார்ப்பாகும் என்றும் நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.

20ஆவது யாப்பு திருத்தத்திலுள்ள குறைகளை சரிசெய்து 21ஆவது அரசியல் யாப்பு திருத்தத்தை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டின் அரசியல் யாப்பு தொடர்பில் பல ஜனாதிபதிகளின் கீழ், அடிக்கடி திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. சில சந்தர்ப்பங்களில் சர்ச்சைக்குரிய வகையில் அரசியல் யாப்பை முன்னெடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

21ஆவது அரசியல் யாப்பு திருத்ததில் பெரும்பாலான நிறுவனங்கள் அரசியல்வாதிகளின் தலையீடின்றி சுதந்திரமாக செயற்படுவதற்கு



வழிவகுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

21ஆவது அரசியல் யாப்பு திருத்தம் ஒரு நபரை இலக்காகக்கொண்டு முன்னெடுக்கப்படவில்லை. எதிர்காலத்தில் பிரச்சினைகள் ஏற்படாத வகையில் இந்த அரசியல் யாப்பு செயற்பாடுகள் இடம்பெற வேண்டும்.

நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மை ஏற்படும் வரை பொருளாதாரத்தை முன்னேற்ற முடியாது. பல தடவைகள் நாட்டின் பிரதமராக பதவி வகித்த ரணில் விக்ரமசிங்க அந்தப் பதவிக்காக மீண்டும் நியமிக்கப்பட்டமை பொருத்தமான விடயம் என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

மஹிந்த ராஜபக்ஷ பதவியிலிருந்து விலகியதனால் பிரதமர் பதவிக்கு வெற்றிடம் நிலவிய சந்தர்ப்பத்தில் அதனை பொறுப்பேற்பதற்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச முன்வரவில்லை. பிரதமர் பதவியை பொறுப்பேற்பதைவிட பொதுத் தேர்தலுக்குச் செல்வதே பொருத்தம் என்பதே எதிர்க்கட்சித் தலைவரின் நிலைப்பாடாகும்.

எனினும், குறித்த சந்தர்ப்பத்தில் பொதுத் தேர்தலுக்கு செல்வது பொருத்தமில்லை. நாடு ஸ்திரத்தன்மையினை இழந்த சந்தர்ப்பத்தில் அரசாங்கத்தைப் பொறுப்பேற்கும் வகிபாகம் எதிர்க்கட்சிக்கு உண்டு.

எனினும், பிரதான எதிர்க்கட்சி குறித்த பொறுப்பினை நிறைவேற்றாமை கவலைக்குரிய விடயம் என்றும் அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ மேலும் தெரிவித்தார்.

# உலக செய்திகள்

# 22 பேருடன் சென்ற நேபாள விமானம் மாயம்

நேபாளத்தில் 22 பேருடன் பயணித்த விமானமொன்று காணாமல்போயுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

பொக்காராவிலிருந்து ஜோம்சோமுக்கு நேற்று காலை 9.55 மணியளவில் புறப்பட்ட விமானத்தில் இந்தியர்கள் 4 பேர், ஜேர்மனியைச் சேர்ந்த பயணிகள் 2 பேர், நேபாளத்தைச் சேர்ந்த 16 பேர் (விமானப் பணியாளர்கள் 3 பேர்) உள்ளடங்கலாக 22 பேர் இருந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தாரா எயார் நிறுவனத்தின் 9 NAET இரட்டை எஞ்சின் விமானம், தலைநகர் காத்மண்டுவிலிருந்து வடமேற்கே 200 கிலோமீற்றர் தொலைவிலுள்ள பொக்ராவிலிருந்து வடமேற்கில் 80 கிலோமீற்றர் தொலைவிலுள்ள ஜோம்சோம் நகருக்கு காலை 9.55 மணியளவில் புறப்பட்டது.

தலகிரி என்ற மலைப்பகுதிக்கு சென்றபோது விமானம் கட்டுப்பாட்டு அறையில் இருந்து தகவல் தொடர்பை இழந்ததாக விமான நிலைய அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர்

இதற்கிடையில், காணாமல்போன விமானத்தில் நான்கு இந்தியர்கள் மற்றும் மூன்று ஜப்பானியர்கள் இருந்ததாக உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மீதமுள்ளவர்கள் நேபாள குடிமக்கள் மற்றும் விமானத்தில் பணியாளர்கள் மூவர் உட்பட 22 பேர் இருந்துள்ளனர். ஜோம்சோம் விமான நிலையத்தின் ஏடிசியின்படி கடைசியாக தொடர்பிலிருந்த பகுதிகளுக்கு ஹெலிகொப்டரொன்று அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, விமானம் ஜோம்சோம் பகுதியை அடைந்திருந்தபோது பாரிய சத்தம் கேட்டதாக விமான நிலையக் கட்டுப்பாட்டாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

மோசமான வானிலை காரணமாக விமானத்தை தேடும் பணிகளில் சிரமமேற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.




# மூன்று வருடங்கள்தான் புட்டின் உயிர்வாழ்வார்

## வைத்தியர்கள் தெரிவித்ததாக உளவுப் பிரிவிலிருந்து கசிந்தது தகவல்



ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் எதிர்வரும் மூன்று வருடங்களுக்கு மாத்திரமே உயிர்வாழ்வார் என பெடரல் சிக்கியூரிட்டி சேர்விஸ் என்றழைக்கப்படுகின்ற உளவுப் பிரிவு தகவல் வெளியிட்டுள்ளது.

புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ள புட்டினுக்கு வைத்தியர்கள் இதனைத் தெரிவித்ததாக உளவுப் பிரிவிலிருந்து கூறப்பட்டுள்ளது.

இதன் காரணமாக உளவுப் பிரிவின் உயர் அதிகாரிகள் கடும் மன உளைச்சலுக்கு ஆளாகியுள்ளனர்.

புட்டினுக்கு பாதிப்பை ஏற்படுத்தியுள்ள புற்றுநோய் வேகமாக தனது இயல்பை மாற்றுவதாக உளவுப் பிரிவின் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார். இதன் காரணமாக அவருக்கு கண்பார்வையும் குறைவடைந்து வருவதாக வைத்தியசாலை தகவல்கள் தெரிவித்துள்ளன.

மூக்குக் கண்ணாடியை அணிவதற்கு புட்டின் மறுத்து வருகிறார். அவ்வாறு மூக்குக் கண்ணாடி அணிந்தால் தனது உடல் பலவீனமுற்றிருப்பதை உலக நாடுகள் அறிந்துகொள்ளும் என அவர் அச்சப்படுவதாக உளவுப் பிரிவு மேலும் சுட்டிக்காட்டியுள்ளது.

புட்டினுக்கு அண்மையில் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் வைத்தியர்களின் ஆலோசனையின்பேரில் தொடர்ந்தும் ஓய்வில் இருந்துவருகிறார்.

# பிரிட்டன் சொகுசு கப்பலில் தீ!



பிரித்தானியாவில் பல கோடி ரூபா மதிப்பிலான சொகுசு கப்பலில் தீ பற்றியதில் வானுயரும் அளவுக்கு கரும் புகை வெளியேறியது.

சொகுசு கப்பலில் எட்டாயிரம் லீற்றர் டீசல் இருந்ததே தீ விபத்திற்கான காரணமாக இருக்கலாம் என தீயணைப்பு வீரர்கள் தெரிவித்துள்ளனர். கட்டுக்கடங்காத அளவில் கரும் புகை வெளியேறியதால் சுகாதார சீர்கேடு ஏற்பட்டுள்ளது.

அருகாமை பகுதி மக்கள் வீட்டுக் கதவு மற்றும் ஜன்னல்களை திறக்க வேண்டாம் என்றும், கடற்கரைப் பகுதிகளில் உலாவ வேண்டாம் என்றும் பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

# நைஜீரிய தேவாலயத்தில் கூட்ட நெரிசல்: குழந்தைகள் உட்பட 31 பேர் பலி; 7 பேர் காயம்

நைஜீரியாவில் கிறிஸ்தவ தேவாலயமொன்றில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி குழந்தைகள் உட்பட 31 பேர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளதுடன், 7 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

தென்கிழக்கு நகரமான போர்ட் ஹார்கோர்ட்டில் கிங்ஸ் அசெம்பிளி கிறிஸ்தவ தேவாலயம் அமைந்துள்ளது. இதில், நடந்த நிகழ்வொன்றில் ஏராளமானோர் கலந்து கொண்டிருந்தனர்.

தேவாலயத்தில் உணவு பெற வந்த நூற்றுக்கணக்கான மக்கள், சிறிய வாசல் வழியே முண்டியடித்துக்கொண்டு செல்ல முயன்றுள்ளனர். இதன்போது ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி குழந்தைகள் 31 பேர் உயிரிழந்த நிலையில், 7 பேர் காயமடைந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.



# ரஜினி - கமல் திடீர் சந்திப்பு



லோகேஷ் கனகராஜ் இயக்கியுள்ள 'விக்ரம்' திரைப்படம் வெள்ளிக்கிழமை (ஜூன் 3ஆம் திகதி) வெளியாகவுள்ள நிலையில், கமல்ஹாசனும் ரஜினிகாந்தும் சந்தித்துக்கொண்டனர்.

லோகேஷ் கனகராஜ் இயக்கியுள்ள 'விக்ரம்' திரைப்படத்தில் கமல்ஹாசன், விஜய் சேதுபதி, ஃபகத் ஃபாசில், நரேன், காளிதாஸ் ஜெயராம், காயத்ரி என ஏராளமான நட்சத்திரங்கள் நடித்துள்ளனர். இப்படத்தில் சூர்யா கௌரவ வேடத்தில் நடித்துள்ளார். படத்தின் ட்ரெய்லர், அனிருத்தின் பாடல்கள் நல்ல வரவேற்பைப் பெற்றன. இதனால், படத்தின் மீதான எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது.

எதிர்பார்ப்புகளை மேலும் அதிகரிக்கும் வகையில் பல்வேறு வகையில் படத்தினை விளம்பரம் செய்து வருகிறது படக்குழு. 'பஞ்ச தந்திரம்' நண்பர்கள் மூலம் உருவாக்கப்பட்ட ப்ரோமோவும் நல்ல வரவேற்பைப் பெற்றது.

இந்நிலையில், நடிகர் ரஜினிகாந்தும், கமல்ஹாசனும் சந்தித்துக்கொண்டனர். சந்திப்பானது போயஸ் கார்டனிலுள்ள ரஜினியின் இல்லத்தில் நடைபெற்றது. சந்திப்பின்போது விக்ரம் பட இயக்குநர் லோகேஷ் கனகராஜும் உடனிருந்தார்.

# உக்ரைனுக்கு ஆயுதமளிப்பது ஆபத்தானது: பிரான்ஸ் - ஜேர்மனிக்கு புட்டின் எச்சரிக்கை



உக்ரைனுக்கு தொடர்ந்து ஆயுதங்களை வழங்குவது மிகவும் ஆபத்தானது என்று பிரான்ஸ், ஜேர்மன் தலைவர்களிடம் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அது மேலும் பிரச்சினையை அதிகரிக்கும் என்று புட்டின் தெரிவித்துள்ளார். பிரான்ஸ் ஜனாதிபதி மெக்ரொனும் ஜேர்மன் பிரதமர் ஸ்கோல்சும் மூன்று வழிப்பாதை தொலைபேசி உரையாடலில் புட்டினுடன் 80 நிமிடங்களுக்கு பேச்சு நடத்தியுள்ளனர். அப்போது உக்ரைனுக்கு ஆயுத விநியோகம் செய்வது குறித்து புட்டின் எச்சரித்துள்ளார்.

இதன்போது உக்ரைனின் மரியுபோல் நகரிலுள்ள உருக்கு ஆலையில் சிறைப்பிடிக்கப்பட்ட 2,500 உக்ரைன் வீரர்களை விடுதலை செய்யுமாறு ரஷ்ய ஜனாதிபதி புட்டினை பிரான்ஸும் ஜேர்மனியும் வலியுறுத்தியுள்ளன.

நேட்டோ கூட்டமைப்பில் இணைவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கடந்த பெப்ரவரி 24ஆம் திகதி உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்தது. இந்த மோதல் இன்று 96ஆவது நாளாகவும் தொடரும் நிலையில், உக்ரைன் தலைநகர் கீவ் மற்றும் இரண்டாவது பெரிய நகரான கார்க்கீவ் மற்றும் கடற்கரை நகரான மரியுபோல் உட்பட பல்வேறு நகரங்கள் உருக்குலைந்துள்ளன.

**ரஷ்யா வசமான லைமன்**

இந்நிலையில், கிழக்கு உக்ரைனிய நகரமான லைமனை முழுவதுமாக கைப்பற்றிவிட்டதாக ரஷ்ய பாதுகாப்புத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

டொனெட்ஸ்க் குடியரசின் ரஷ்ய ஆதரவு பிரிவினைவாத குழுக்கள், சீவிரோடோனெட்ஸ்கிற்கு மேற்கேயுள்ள ரயில்வே மைய நகரமான லைமனை கைப்பற்றியதாக தெரிவித்திருந்த நிலையில், ரஷ்ய பாதுகாப்பு அமைச்சு செய்தித் தொடர்பாளர் இகோர் கொனாஷென்கோவ் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

இதனை ஒப்புக்கொண்ட உக்ரைன் அதிகாரிகள், லைமனுக்கு அருகில் இருக்கும் ஸ்லோவியன்ஸ்க் நகரை நோக்கி ரஷ்யப் படைகள் முன்னேறுவதை தடுத்து வருவதாக கூறியுள்ளனர்.

**சோலார் மின் உற்பத்தி ஆலை மீது ஏவுகணை தாக்குதல்**

மேலும், உக்ரைனில் சோலார் மின்உற்பத்தி ஆலை மீது ரஷ்யா ஏவுகணைத் தாக்குதல் நடத்திய சிசிடிவி காட்சிகள் வெளியாகியுள்ளன.

# பிரேஸிலில் கடும் மழை - மண்சரிவில் சிக்கி 37 பேர் பலி; 5 ஆயிரம் பேர் முகாம்களில் தஞ்சம்



பிரேஸிலில் பெய்துவரும் கடும் மழை மற்றும் மண்சரிவில் சிக்கி 37 பேர் உயிரிழந்துள்ளதுடன், சுமார் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் முகாம்களில் தஞ்சமடைந்துள்ளனர்.

வடகிழக்கு பிரேஸிலில் சில நாட்களாக தொடர்ந்தும் பெய்துவரும் கடும் மழை காரணமாக வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ள. குடியிருப்புப் பகுதிகளில் வெள்ளநீர் சூழ்ந்துள்ளதால் ஆயிரக்கணக்கான வீடுகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

வெள்ளம் காரணமாக வடகிழக்கு பிரேஸிலின் பெர்னாம்பகோ, அலகோவால் மாகாணங்கள் பெரும் பாதிப்பை சந்தித்துள்ளன. வெள்ளத்தால் ஏற்பட்ட மண்சரிவில் சிக்கி 37 பேர் உயிரிழந்துள்ளதுடன், சுமார் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு தகவல்கள் தெரிவிக்கின்றன.

பெர்னாம்பகோ மாகாண தலைநகரான ரெசிஃப் சிட்டியில் வீடுகள் இடிந்து தரைமட்டமாகியுள்ளன. இதில், 35 பேர் உயிரிழந்துள்ளதுடன், சுமார் 1,000 பேர் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறி முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

அதேபோன்று, அலகோவாஸ் மாகாணத்தில் இரண்டு பேர் இறந்தனர், சுமார் 4,000இற்கும் மேற்பட்டோர் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறி முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

# உக்ரைன் - ரஷ்யப் போரால் உலகம் முழுவதும் பட்டினிச்சாவின் பிடிக்குள் 220 மில்லியன் பேர்

உக்ரைன் நெருக்கடியால் உலகம் முழுவதும் பசியால் வாடும் மக்களின் எண்ணிக்கை 220 மில்லியனாக அதிகரிக்கும் - என ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் விவசாய அமைப்பின் அதிகாரி தெரிவித்துள்ளார்.

கடந்த 2021ஆம் ஆண்டு 53 நாடுகளில் பசியால் வாடும் மக்களின் எண்ணிக்கை 200 மில்லியனாக இருந்ததாக தெரிவித்த அவர், ரஷ்யா - உக்ரைன் போரால் இந்த எண்ணிக்கை மேலும் 18 மில்லியன் அதிகரிக்கும் என்றும் தெரிவித்தார்.

# அவருக்கு 76 வயது - எனக்கு 19: கவனம் ஈர்த்த காதல் ஜோடி!



இத்தாலியில் 18 வயது இளைஞர் ஒருவர், 76 வயதான பெண்ணின் மீது கொண்டுள்ள காதல் பலரையும் வியப்பில் ஆழ்த்தியுள்ளது.

இத்தாலியைச் சேர்ந்தவர் 19 வயதான கியூசெப் டிஅன்னா. இவரை டிக்டொக்கில் ஒரு இலட்சத்துக்கும் அதிகமான நபர்கள் பின்தொடர்கிறார்கள். இவர் கடந்த மே 24ஆம் திகதி தனது டிக்டொக் பக்கத்தில் வீடியோவொன்றை பகிர்ந்திருந்தார். அதில், அன்னா தனது 76 வயதான காதலியை அறிமுகப்படுத்தியிருந்தார். மேலும், தாங்கள் இருவரும் நிச்சயம் செய்துகொண்டதாகவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

இதனைத் தொடர்ந்து அவர்களது புகைப்படங்கள் சமூக வலைத்தளங்களில் வைரலாகின. பலரும் அவர்களது காதல் குறித்து கேள்வியெழுப்பத் தொடங்கினர்.

“நீங்கள் பணத்திற்காகத்தானே அந்தப் பெண்ணை காதலிக்கிறீர்கள்..?” “அவர் உங்களுக்கு பாட்டியைபோல் உள்ளார்” என்று நெட்டிசன்கள் பலரும் அன்னாவின் பதிவின் கீழே பதிவிட்டனர்.

அதற்கு அன்னா, "இல்லை... நான் அவரை காதலிக்கிறேன். எங்கள் காதல் அழகானது" என்று பதிலளித்திருந்தார். சிலர் இவர்களது காதலுக்கு ஆதரவாக கருத்துகளைப் பதிவிட்டிருந்தனர்.

காதலுக்கு வயதில்லை என்பதையும் மெய்ப்பித்துள்ள இந்த காதல் இணையர் இப்போது இத்தாலியில் பிரபலமாகி வருகின்றனர்.

## வெற்றிக் கிண்ணத்துடன் நாடு திரும்பிய இலங்கை அணி



பங்களாதேஷ் அணியுடனான டெஸ்ட் தொடரைக் கைப்பற்றிய இலங்கை அணி, நேற்று முன்தினம் வெற்றிக் கிண்ணத்துடன் நாடு திரும்பியது.

திமுத் கருணாரத்ன தலைமையிலான இலங்கை அணி பங்களாதேஷுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு ஐ.சி.சி. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் இரு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்றது. முதல் போட்டி சமநிலையில் நிறைவடைய, இரண்டாவது போட்டி கடந்த திங்கட்கிழமை ஆரம்பமானது.

குறித்த இரண்டாவது டெஸ்ட் போட்டியின் இறுதி நாளன்று இலங்கை அணி 10 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றியிலக்கை அடைந்தது. இதன் மூலம் இலங்கை அணி இரு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை 1-0 என்ற அடிப்படையில் கைப்பற்றி, பங்களாதேஷ் அணியுடன் இதுவரையில் டெஸ்ட் தொடரை இழக்கவில்லை என்ற பெருமையை பெற்றது.

இந்நிலையில், தொடரை வென்ற இலங்கை அணி நேற்று முன்தினம் மாலை கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்த போது இலங்கை அணி வீரர்களுக்கு வரவேற்பளிக்கப்பட்டது.

Sri Lanka Cricket
தேசிய கிரிக்கெட் அணியின் உத்தியோகப்பூர்வ அனுசரணையாளர்
Dialog

## மூன்றாவது முறையாக சம்பியன் பட்டத்தை வென்ற சுப்பர் நோவாஸ்

இந்தியாவில் நடைபெற்ற மகளிர் இருபதுக்கு 20 செலஞ்ச் கிரிக்கெட் தொடரில் வெலாசிட்டியை வீழ்த்தி சூப்பர் நோவாஸ் அணி 3ஆவது முறையாக சம்பியன் பட்டம் வென்றது.

மகளிருக்கான 4ஆவது செலஞ்ச் ரி20 கிரிக்கெட் போட்டிகள் கடந்த சில நாட்களாக நடைபெற்று வந்தன. மகளிர் ஐ.பி.எல். கிரிக்கெட்டிற்கு முன்னோட்டமாக கருதப்படும் இந்தத் தொடரின் இறுதிப்போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்தப் போட்டியில் சுப்பர் நோவாஸ் மற்றும் வெலாசிட்டி அணிகள் மோதின.

முதலில் துடுப்பெடுத்தாட களமிறங்கிய சுப்பர் நோவாஸ் 20 ஓவர் முடிவில் 7 விக்கெட் இழப்பிற்கு 165 ஓட்டங்கள் குவித்தது. தொடர்ந்து 166 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய வெலாசிட்டி அணி ஆரம்பம் முதலே தடுமாறியது. அந்த அணியின் வீராங்கனைகள் அனைவரும் சீரான இடைவெளியில் தங்கள் விக்கெட்டை பறிகொடுத்தனர். மறுமுனையில் பொறுப்புடன் ஆடிய லாரா வெல்வெட் 65 ஓட்டங்கள் குவித்தார். ஆனாலும் 20 ஓவர் முடிவில் வெலாசிட்டி அணி 8 விக்கெட்டுகளை இழந்து 161 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது.

கடைசி ஓவரில் வெற்றிக்கு 17 ஓட்டங்கள் தேவைப்பட்ட நிலையில் வெலாசிட்டி அணியால் 12 ஓட்டங்கள் மட்டுமே அடிக்க முடிந்தது. இதன்மூலம் வெலாசிட்டி அணியை 4 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி சுப்பர் நோவாஸ் அணி அபார வெற்றிபெற்றது. இந்த வெற்றியின் மூலம் மகளிர் இருபதுக்கு 20 செலஞ்சர்ஸ் தொடரில் 3ஆவது முறையாக சம்பியன் பட்டத்தை சுப்பர் நோவாஸ் கைப்பற்றியது.




## பெற்றோல் இல்லை... பணம் இல்லை... நாட்டு நடப்பால் ஆத்திரமடைந்த ஹபீஸ்

இலங்கையை போன்று பாகிஸ்தானில் அந்நிய செலவாணி கையிருப்பு குறைவு உள்ளிட்ட பல காரணங்களால் அந்நாட்டில் பொருளாதார நெருக்கடி தொடங்கியுள்ளது. இதையடுத்து எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. மக்கள் வங்கிகளிலிருந்து பணம் எடுக்க முடியாமல் தவிக்கின்றனர். இந்தச் சூழலில் பொருளாதாரம் பற்றி பேசாத முன்னாள் பிரதமர் இம்ரான் கான், தன் ஆட்சிக் கவிழ்ப்பில் சதி இருப்பதாக பேரணி நடத்தி வருகிறார்.

இந்நிலையில், பாகிஸ்தானில் நிலவி வரும் சூழலை முன்னாள் கிரிக்கெட் வீரர் மொஹமட் ஹபீஸ் விமர்சனம் செய்துள்ளார். இதுகுறித்து டுவிட்டரில் அவர் வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது, லாகூரில் என்ன நடக்கிறது? எரிபொருள் நிலையங்களில் பெற்றோல் இல்லை. ஏ.ரி.எம். இயந்திரங்களில் பணம் இல்லை. அரசியல்வாதிகள் எடுக்கும் முடிவுகளால் பொதுமக்கள் ஏன் பாதிக்கப்பட வேண்டும்? என ஹபீஸ் கேள்வி எழுப்பியுள்ளார்.

இந்த டுவிட்டர் பதிவை வெளியிட்ட அவர், இம்ரான் கான், மரியம் ஷரிப், பில்வால் பூட்டோ, பிரதமர் ஷெபாஷ் ஷரிப் உள்ளிட்டவர்களை டெக் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.




விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

## ஐரோப்பாவில் வரலாறு படைத்த ரியல் மெட்ரிட்




1 10-22 சம்பியன்ஸ் லீக் இறுதிப்போட்டியில் லிவர்பூல் அணியை 1 - 0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி ரியல் மெட்ரிட் கழகம் சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்தது.

பரிஸ் அரங்கில் நேற்று அதிகாலை இடம்பெற்ற சம்பியன்ஸ் லீக் இறுதிப் போட்டியில் வின்சியஸ் ஜூனியரின் கோலின் உதவியோடு சம்பியன்ஸ் லீக் கிண்ணத்தை 14ஆவது தடவை வென்று ஐரோப்பாவில் அதிக தடவை சம்பியன்ஸ் லீக் கிண்ணத்தை வெற்றிபெற்ற அணியாக லா-லிகா சம்பியனான ரியல் மெட்ரிட் கழகம் சாதனை படைத்தது.

நேற்று அதிகாலை 12.30 மணிக்கு ஆரம்பமாகவிருந்த இப்போட்டி 30 நிமிடம் தாமதமாகவே ஆரம்பித்தது. போட்டியின் 59ஆவது நிமிடத்தில் ரியல் மெட்ரிட் அணியின் வல்வெர்டே வழங்கிய பந்தை கோல் கம்பத்துக்குள் செலுத்தி வின்சியஸ் ஜூனியர் ரியல் மட்ரிட்டுக்கான வெற்றி கோலை அடித்தார். ரியல் மெட்ரிட் அணியின் முகாமையாளராக கடமையாற்றும் கார்லோ அன்சலோடி தனது முகாமைத்துவ வாழ்க்கையில் 4ஆவது சம்பியன்ஸ் கிண்ணத்தை கைப்பற்றினார். இதன்மூலம் வரலாற்றில் இக்கிண்ணத்தை அதிக தடவை வெற்றி பெற்ற முகாமையாளராக அவர் சாதனை படைத்தார். ரியல் மட்ரிட் அணியின் 34 வயது வீரரான மார்செலோ தனது இறுதிப்போட்டியை ரியல் மட்ரிட் அணிக்காக ஆடியதாக இவ்விறுதிப் போட்டி முடிந்தவுடன் அறிவித்தார். 15 வருடங்கள் ரியல் மட்ரிட்டுக்காக விளையாடி ஒரு கழக ஜாம்பவானாக சம்பியன்ஸ் லீக் வெற்றியுடன் ரியல் மெட்ரிட்டுக்கு விடைகொடுத்தார் மார்செலோ.

இந்த பருவகால சம்பியன்ஸ் லீக் தொடரில் 15 கோல்களை அடித்து இப்பருவகால தொடரில் அதிக கோலடித்த வீரராக ரியல் மெட்ரிட் அணியின் கரீம் பெனிஸிமா தன்னை பதிவு செய்தார். கடந்த 2018ஆம் ஆண்டு சம்பியன்ஸ் லீக் இறுதிப் போட்டியிலும் ரியல் மெட்ரிட் அணி லிவர்பூல் அணியை 3 - 1 என்ற கோல்கள் கணக்கில் வீழ்த்தி கிண்ணத்தை கைப்பற்றியமை குறிப்பிடத்தக்கது.

## மாற்றுத்திறனாளிகளுக்கான கண்டி மாவட்ட தளகள சம்பியன்ஷிப் போட்டி





(கண்டிநிருபர்)

மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய அமெச்சூர் தடகள போட்டியின் கண்டி மாவட்ட சம்பியன்ஷிப் போட்டி அண்மையில் கண்டி போகம்பரா மைதானத்தில் நடைபெற்றது.

கண்டி மாவட்டத்திலுள்ள பேச்சு, செவித்திறன் மற்றும் பார்வை குறைபாடு கொண்டவர்களின் பங்குபற்றுதலுடன் இப்போட்டி நடைபெற்றது. 17 வயதுக்குக் கீழ் மற்றும் மேற்பட்டவர்கள் என்ற ரீதியில் இரு பிரிவுகளாக இப்போட்டி நடைபெற்றது. 100 மீ., 200 மீ. சமதரை ஓட்டம், பரிதி வட்டம் எறிதல், ஈட்டி எறிதல், நீளம் தாண்டுதல் போன்ற பல போட்டிகள் நடத்தப்பட்டன.

கண்டி மாவட்ட செயலகம், மாவட்ட விளையாட்டுப் பிரிவு மற்றும் மாவட்ட சமூக சேவைகள் பிரிவு ஆகியவற்றின் ஏற்பாட்டில் இப்போட்டிகள் இடம்பெற்றன. கண்டி பிரதேச செயலக மட்டத்தில் நடைபெற்ற இப்போட்டிகளில் வெற்றிபெற்ற மாற்றுத்திறனாளிகள் மாகாண மற்றும் தேசிய மட்ட விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.

கண்டி மாவட்ட செயலாளர் சந்தன தென்னகோனினால் ஆரம்பித்துவைக்கப்பட்ட இவ்விளையாட்டு விழாவில் மேலதிக மாவட்ட செயலாளர் உத்பலா ஜயரத்ன, கண்டி மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர் சி.கல்பகே உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

## திருகோணமலை மாவட்ட விசேட தேவையுடைவர்களுக்கான வருடாந்த மாவட்ட மெய்வல்லுனர் போட்டிகள்







(கந்தளாய் நிருபர்)

திருகோணமலை மாவட்ட விசேட தேவையுடைவர்களுக்கான வருடாந்த மாவட்ட மெய்வல்லுனர் போட்டிகள் அண்மையில் திருகோணமலை ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. மாவட்ட அரசாங்க அதிபர் பி.எச்.என்.ஜயவிக்ரம போட்டிகளை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கு பரிசில்களும் இதன்போது அரசாங்க அதிபரால் வழங்கப்பட்டன. அத்துடன், விசேட தேவையுடைய ஒருவருக்கு இதன்போது சக்கர நாற்காலி ஒன்றும் மாவட்ட செயலக பிரதம கணக்காளர் எஸ். பரமேஸ்வரனின் சொந்த நிதியில் வழங்கப்பட்டது.

மாவட்ட செயலக சமூக சேவைகள் பிரிவு இதனை ஒழுங்குசெய்திருந்தது. இந்நிகழ்வில் திருகோணமலை வலயக்கல்விப் பணிப்பாளர் எஸ். சிறீதரன், துறைசார் தலைவர்கள் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7